# ஞானச்சுடர்

மார்கழி

216 ஆவது மலர்

2015




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**பல்லார் முனியப் பயனில சொல்லுவான்**
**எல்லாரும் எள்ளப் படும்.**

**பொருள் :** அறிவுடையார் வெறுக்கும்படி பயனற்ற சொற்களைச் சொல்லுகின்றவன் எல்லாராலும் இகழப்படுவான். (191)

**பயனில பல்லார்முன் சொல்லல் நயனில**
**நட்டார்கண் செய்தலிற் றீது.**

**பொருள் :** பயனில்லாத சொற்களை ஒருவன் பலர் முன்னிலையில் சொல்லுதல் அவன், நண்பரிடத்தே அவர் விரும்பாத செயல்களைச் செய்தலினும் தீமையுடையதாகும். (192)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



மத்தர் பேயர் மதலைய ரெனவே
அத்த னருள்பெற்ற வன்ப ரிருப்பர்
சித்தரு மவரே தேவரு மவரே
முத்தி வேண்டி முறைமையான் வணங்குதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 50

இயமன் வருணன் குபேரன் இந்திரன்
வியக்கத் தகுந்த வேறுபல் தெய்வமும்
வியனடி வேண்டி யாற்றினர் வெகுதவம்
முயலுதும் நாமும் முதன்மை யடைகுதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 51

அரவரைக் கசைத்த விசைசால் பரமன்
குரவு வார்கழல் கும்பிடும் பாக்கியம்
தரைமிசை பெற்றோர் தமக்குச் சமமாய்
எவரையுங் காண்கிலம் இறைஞ்சுதும் மவரடி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 52

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 216

2015 மார்கழி

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தெய்வீக மணம்... | ஆர்.வீ. கந்தசாமி | 01 –03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 –06 |
| உள்ளம் பெருங் கோயில் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 07 –09 |
| ஞாலமளந்த மேன்மைத்... | மு.க. மாசிலாமணி | 10 –13 |
| பாவை பாடிய வாயால்... | நா. நல்லதம்பி | 14 –17 |
| வித்தகா உன் ஆடல் ஆர்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 18 –20 |
| செழுமறை முனிவரும்... | முருகவே பரமநாதன் | 21 –25 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 26 –29 |
| ஸ்ரீலஸ்ரீ நாவலர்... | நா. கணேசலிங்கநாதன் | 30 –34 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 35 –39 |
| நம் தெய்வம்... | பூ. கதிர்த்தம்பி | 40 –41 |
| நித்திய அன்னபபணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 42 –43 |
| மாயனே மறிகடல்... | முருகன் அடியார் | 44 –45 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 46 –48 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 49 –51 |
| கண்டேம் கதிர்காமம் | அன்னைதாசன் | 52 –53 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 54 –59 |
| தமிழகத் திருக்கோயில் ... | வல்வையூர் அப்பாண்ணா | 60 –62 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்
# கார்த்திகைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

கார்த்திகைமாத மலருக்கான வெளியீட்டுரையினை இளைப்பாறிய அதிபர் திரு கி. பகவத் சிங்கம் அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர்தம் உரையின்கண்ணே சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பலவிதமான சமய சமூக சேவைகளை கூடியிருந்த அடியார்களுக்குக் கூறியதோடு இம்மலர் வெளியீடு ஒரு காத்திரமான செயற்பாடாக இருக்கின்றது.

இச்செயற்பாட்டிற்கு சந்நிதி வேலவனது பூரண அருள் மிக முக்கியமாக அமைந்துள்ளது என்பதை நாம் அனைவரும் உணர்ந்துள்ளோம் என்று கூறித் தமது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.


## மதிப்பீட்டுரை:-

215ஆவது மாத வெளியீடாகிய ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சைவப்புலவரும், அதிபருமாகிய திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

பேரவையினால் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடரின் முதலாவது மலர் தொடக்கம் இன்று வெளியிடப்பட்டுவரும் 215ஆவது மலர்வரை நாம் பார்ப்போமானால் பலவித பரிமாணங்களை வெளிப்படுத்தி வந்துள்ளமை கண்கூடாக எம்மால் காணமுடிகின்றது. அதற்கமைவாக கட்டுரையாளர்களின் ஆக்கங்களும் தரம் வாய்ந்தவையாக படிப்படியாக வளர்ச்சி பெற்றதையும், அவர்களை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை கௌரவித்ததையும் நாம் போற்றவேண்டும். இவ்வகையான பலவித செயற்பாடுகள் மூலம் ஆச்சிரமமும் அதனைத் தொடர்ந்து பேரவையும் பெருமைபெற்று விளங்குகிறது. இதனடிப்படையில் நாமும் வருடாவருடம் இம்மலர் வெளியீட்டில் மதிப்பீட்டாளராக பங்கு பற்றுவதற்குச் சந்நிதி வேற் பெருமானின் கருணைத் திறத்தை வேண்டுவதோடு இம்மலரின் வளர்ச்சி மேன்மேலும் பெருக வேண்டும் என்று கூறியதோடு, மலரில் இடம்பெற்ற ஆக்கங்களை சபையில் இருந்த அடியார்களுக்கு எடுத்துக்கூறி மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

நான் எனது என்ற எண்ணங்களுக்கு அப்பால் எமது பிரதேசம், எமது இனம், எமது மொழி, எமது சமயம் என்ற கோட்பாட்டினை நிலைநிறுத்தி அதன்படி எவனொருவன் வாழ்கின்றானோ அவன் காலத்தால் அழியாத ஒரு பேற்றினை அடைகின்றான். அவ்வகையில் வர்த்தகராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் கடமை புரிந்த முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் அமரர் திரு தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் போற்றத்தக்கவர்.



அதனடிப்படையில் மகேஸ்வரன் அவர்கள் தான் வாழ்ந்த காலங்களிளெல்லாம் தான் வகித்த கடமைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். வர்த்தகராக இருந்தபொழுது அதனை ஈடுசெய்யும் வகையிலும், பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் மக்களின் குறைபாடுகளை நீக்குவதிலும், இந்து கலாச்சார அமைச்சராக பதவி வகித்தபோது அவரது தூய்மையான செயற்பாட்டின்மூலம் குறிப்பாக யாழ் குடாநாட்டு ஆலயங்களும், ஆலயம் சார்ந்த சபைகளும் ஏதோ ஒரு வகையில் பயனடைந்தன என்பதில் மிகையில்லை. அவர் சைவத்துக்கும், சமூகத்துக்கும் ஆற்றிய சேவைகள் என்றும் அவரை நினைவு கூரத்தக்கதாக அமைந்து விட்டது.

ஆம்! அமரர் மகேஸ்வரன் இந்து கலாச்சார அமைச்சராக இருந்த காலத்தில் எமது நாடு போர்ச் சூழலினாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் தத்தளித்துக் கொண்டிருந்த காலம் அது. அக்காலத்தில் எமது ஆலயங்கள் அனைத்தும் இருள் சூழ்ந்த நிலை. அந்நிலை கண்டு அவர் தமது சமூகத்தின் தேவைகளை ஈடுசெய்ததின் மூலம் எல்லா ஆலயங்களும் ஒளி வெள்ளத்தில் திளைத்தன. அவரின் தன்னலம் கருதாத செயற்பாட்டின்மூலம் பயனடைந்தவர்கள் எண்ணற்றவர்கள். அதனடிப்படையில் நாம் அவர் ஆற்றிய சேவையினைப் போற்றவேண்டியவர்களாக உள்ளோம். அமரர் மகேஸ்வரன் மறைந்து ஏழு ஆண்டுகள் நிறைவடைந்தாலும் அவர் ஆற்றிய சேவையை சந்நிதியான் ஆச்சிரமம் என்றும் நினைவுகூரும்.

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி எழுந்தருளும் திருமுருகனின் பிள்ளைத்தமிழ்

## I. காப்புப் பருவம்

தேவேந்திரன் (தொடர்...

### வேறு

மருத நிலத்து வைப் பெங்கும்
வளமாந் தடஞ்சூழ்
வய லெல்லாம்
வாய்ந்த சாலி
உலையிட்டு
மகிழும் பொங்க லவியுண்டு
இருநல் லேரைப்
பூட்டி யுழும்
இனியவேளாண் மக்கள் தினம்
ஏந்தல் என்று
பணிந் தேத்தும்
இந்திரனை நா னேத்தினனே
கருதி நாற்கா லிகளென்றும்
கடிநீர் சென்றங்
கருந்துவதால்
காலியாம்பே ராற்றயலில்
கரைசேர் கோயில்
கொண்டருளும்
திருமால் மருமான்
சிவன் மகனை
தேவர்க் கெல்லாம் நாயகனை
செல்வச் சந்நிதி
வீற்றிருக்கும்
சேயோன் தன்னைக் காத்திடென்றே.

-அமரர்: முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. தபேசன்**
(இரசாயனவியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**மு. சுஸ்ருதன்**
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)

**வே. சம்பந்தநாதன்**
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)

**த. வயித்திலிங்கம்**
(திருநெல்வேலி)

**செல்வி ந. பாமதி**
(கொக்குவில்)

**திருமதி திருச்செல்வம் விஜிதா**
(கூவில், புலோலி தெற்கு)

**செ. சின்னத்துரை**
(ஆசிரியர், மகாத்மாலேன், நெல்லியடி)

**சி. வீரசிங்கம்**
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)

**செ. சுரேந்திரா**
(சமூக சேவை உத்தியோகத்தர், அல்வாய்)

**சி. சந்திரசேகரம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

**சி. தில்லைமணி**
(வட்டுக்கோட்டை)

**க. நடராசா**
(ஓட்டுமடம், யாழ்ப்பாணம்)

**மா. மகாலிங்கம்**
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)

**ச. தமிழ்ச்செல்வம்**
(கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்)

**திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம் மேற்கு)

**S. சிவலிங்கராசா**
(முதுநிலை விரிவுரையாளர், பல்கலைக்கழகம்)

**கிருபைநாதன் அஜந்தன்**
(இணுவில் மேற்கு)
**வ. துரைராசலிங்கம்**
(சுண்ணாகம் கிழக்கு)
**கணேசராஜா நிர்மலராஜன்**
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்)
**திருமதி த. தவேந்திரன்**
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)
**T. நாகராஜா**
(கரந்தன், நீர்வேலி)
**சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்**
(நீர்வேலி)
**அ. பஞ்சாபகேசசர்மா**
(ஆவரங்கால்)
**A.T. சிவனேசபிள்ளை**
(ஞானத்தில்லை, இடைக்காடு)
**சிதம்பரி சிவபாதம்**
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)
**இ. வசந்தகுமார்**
(மானிப்பாய் வடக்கு)
**ச. சசிகரன்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**S. சுப்பிரமணியம்**
(A.G.A. லேன், நெடியகாடு)
**சி. நீலையினார்**
(இடைக்குறிச்சி, வரணி)
**திருமதி சிவநாயகி கந்தசாமி**
(வசந்தகம், இமையாணன்)
**நா. விக்னேஸ்வரன்**
(கோகுலம், சுதுமலை)
**தி. சிவபாதசுந்தரம்**
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
**ந. சிவராஜா**
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
**சு. ஸ்ரீஸ்கந்தராசா**
(பலாலி வீதி, திருநெல்வேலி)

சி. இரத்தினசபாபதி
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
ஸ்ரீரஜனி அமரசிங்கம்
(பொதுநூலகம், அச்சுவேலி)
S.R. சரவணபவன்
(பிள்ளையார் கோயிலடி, தாவடி)
க. வாமதேவன்
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
திருமதி ச. செல்வறஞ்சனா
(சுண்ணாகம் கிழக்கு)
S. மனோகரன்
(மாதா கோயிலடி, கோப்பாய்)
சு. இலங்கநாயகம்
(கைதடி தென்கிழக்கு, கைதடி)
நடராஜா சறோஜா
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், தெல்லிப்பழை)
த. சுகந்தன்
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)
கந்தையா காங்கேசன்
(பண்ணாலை, தெல்லிப்பழை)
சி. சரவணப்பெருமாள்
(மாணிக்கவளவு, கரணவாய்)
சிவலிங்கம் தேவமலர்
(அச்சுவேலி)
S. நவரெட்ணம்
(கெருடாவில் வடக்கு, தொண்டைமானாறு)
S. சத்தியமூர்த்தி
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
சு. சிவலிங்கம்
(குகன்குடிசை, பொலிகண்டி)
பா. பாலச்சந்திரன்
(சண்முகபவனம், மயிலணி)
செ. அரியானந்தம்
(வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு)
N. குணரெட்ணம்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
V. சிவனேசன்
(கமலை, மானிப்பாய் வீதி)

க. முருகானந்தன்
(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)
செ. உலகநாதபிள்ளை
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
தம்பன் இரத்தினசிங்கம்
(நாவற்காடு)
இ. பாஸ்கரன்
(சுதுமலை வடக்கு)
திருமதி இ. தம்பிராசா
(குணயாவளவு, ஈவினை)
இ. நடராசா
(தாவடிச்சந்தி, கொக்குவில்)
பொ. செல்வகிருஷ்ணன்
(புலோலி தெற்கு, புலோலி)
சி. சிவசுப்பிரமணியம்
(ஆனந்தநிலையம், கரவெட்டி)
அ. பரமநாதன்
(தெல்லிப்பழை)
திருமதி கமலா குணரெத்தினம்
(வட்டுக்கோட்டை)
திருமதி சத்தியவாணி நந்தகுமார்
(நவாலி, மானிப்பாய்)
கந்தையா செல்வக்குமார்
(புத்தூர் கிழக்கு, புத்தூர்)
மு. மகேந்திரன்
(யாழ்ப்பாணம்)
சு. சண்முகரட்ணம்
(புத்தூர்)
சோமசுந்தரம் செல்வசுந்தரம்
(மீசாலை கிழக்கு)



# தெய்வீக மணம் கமழும் மார்கழி மாதம்

– திரு ஆர்.வீ. கந்தசாமி அவர்கள் –

"மாதங்களில் நான் மார்கழி" என்று கண்ணபிரான் கீதையிலே கூறுகின்றார். "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர்" என்பது ஆண்டாள் திருவாக்காகும். மார்கழி மாதத்தை தேவர் மாதம் என்றே குறிப்பிடுவர். பழைய காலந்தொட்டே மார்கழி மாதத்தைக் கடவுளை வழிபடுவதற்கான சிறந்த மாதமாக இந்துக்கள் கருதி வந்திருக்கின்றார்கள். இறைவனை வழிபடவே இம்மாதம் ஒதுக்கப்பட்டுள்ளதால்த்தான் எவ்வித மங்கலகரமான நிகழ்ச்சிகளும் இம்மாதத்தில் நடைபெறுவதில்லை. கிறிஸ்தவர்களுக்கும் இம்மாதம் பாலன் பிறந்த புனிதமாதம் என்பது நாம் அறிந்ததேயாகும்.

இம்மாதத்தில் பாவைநோன்பு, திருவெம்பாவை, திருவாதிரை நோன்பு, திருப்பாவை, வைகுண்ட ஏகாதசி, விநாயகர் சஷ்டி விரதம், ஆஞ்சநேயர் ஜெயந்தி ஆகிய விசேட வைபவங்களும் கொண்டாடப்படுகின்றன.

மார்கழி மாதம் முழுவதும் இந்து மக்கள் தத்தம் இல்லங்களைச் சுத்தி செய்து முற்றத்தில் சாணத்தினால் மெழுகி, பச்சை அரிசி மாவினால் கோலம் போட்டு, சாணத்தினால் பிள்ளையார் பிடித்து வைத்து பூக்கள் சாத்தி, விக்னேஸ்வரப் பெருமானே! எங்கள் இல்லங்களில் விக்கினங்கள் நேராவண்ணம் காத்தருள்வாய் எனப் பிரார்த்திப்பார்கள்.

கோலம் போடும்போது அரிசிமாவால் கட்டாயம் கோலம் இடவேண்டும். அவமிருத்துகளினாலும் வேறு ஏதுக்களினாலும் இறந்த ஆன்மாக்கள் தங்கள் தொடர்புடைய வீடுகளுக்கு வரும்போது விநாயகப் பெருமான் காவலினால் உட்புகமுடியாது. அவர்கள் எறும்பு, ஊர்வனவாக வந்து கோலம் இட்ட பச்சைமாவை உண்டு செல்கின்றனர் என்றும் ஐதீகம்.

இவ்விதம் மார்கழிமாதம் முழுவதும் வைத்துப் பூசித்த விநாயக மூர்த்தங்களை தைப்பொங்கலுக்குப்பின் பிரசாதங்கள் வைத்து, நிவேதித்து, சமுத்திரத்திலேனும், ஆற்றிலேனும், குளத்திலேனும் சுத்தமான நீர் நிலைகளிலேனும் இடுவார்கள். மார்கழிப் பிள்ளையார் பிடித்து வைத்துப் பூசிப்பதால் பிணி, வறுமை என்பவற்றின் நீக்கமும் செல்வ விருத்தியும் மற்றும் நற்பேறுகளும் உண்டாகும்.

மார்கழி மாதத்தில் மங்கையர் நோன்பினை மேற்கொள்வர். அதனைப் பாவை நோன்பு என்றும் மார்கழி நோன்பு என்றும் அழைப்பர். இம்மாதத்தை மங்கல மார்கழியாகக் கொண்டாடி மகிழ்வார். நல்ல மழைபெய்து நாடு செழிக்கவும், நல்ல கணவனை அடையவும், மணமான பெண்கள் தங்கள் கணவனை தீர்க்காயுசுடன் இருக்கவும் இந்த நோன்பை மேற்கொள்வது வழக்கம். இம்மாதத்தில் வெப்ப தட்பம் சமமாக இருக்கும்.

திருவெம்பாவை என்பது திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்துள்ள திருவாசகத்தில் நடு நாயகமாகத் திகழும் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு பாடலும் "ஏலோரெம்பாவாய்" என முடியும். இது இருபது பாடல்களைக் கொண்டது. சைவ மரபினர்

அனைவரினதும் இல்லங்களிலும் சைவ ஆலயங்களிலும் ஒவ்வொரு ஆண்டிலும் மார்கழி வைகறைப் பொழுதில் ஓதப்படும் திருவிழா கொண்டாடப்படுவதும் மிகவும் சிறப்புடையதாகும். சைவாலயங்களில் பத்து நாட்கள் திருவெம்பாவைப் பூசைகள் நடைபெறும். பத்தாம் நாள் ஆர்த்திரா தரிசனம் சிறப்பு நாளாகும்.

சைவ மக்களுக்கு திருவெம்பாவை போல வைணவ மரபினருக்கு ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவைப் பிரபந்தம் உரியதாகும். சைவ சமயத்தினர் இந்த நோன்பை மார்கழித் திங்கள் திருவாதிரைக்குப் பத்து நாட்களுக்கு முன் தொடங்கி திருவாதிரை அன்று முடிப்பார்கள்.

திருவாதிரை நோன்பு என்பது திருவெம்பாவையுடன் இணைந்த மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரம் கூடிய நிறைமதி நன்னாளில் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த விரதம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்த சிறந்த விரதமாகும். அன்றைய தினம் சிவபெரு மானுக்கு விசேட ஆராதனைகளும் அபிஷேடங்களும் நடைபெறுகின்றன. சைவ மக்கள் ஆர்த்திரா தரிசனம் செய்வதற்காக ஆலயங்களுக்கு சென்று வழிபடுவர்.

நம்மை எல்லாம் ஆட்டி வைக்கும் இறைவன் தானும் ஆடிக்கொண்டே இருக்கிறார். அவன் ஆடுவதால்த்தான் உலகம் ஆடிக்கொண்டிருக்கிறது. அவருடைய இந்த அற்புதத் திருநடனத்தைப் பல பக்திமான்கள் கண்டு ஆனந்தித்திருக்கின்றார்கள். திருநாவுக்கரசு நாயனார் தான் கண்ட திருநடனத்தைப் பின்வருமாறு ஒரு பதிகத்தில் பாடியுள்ளார்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

திருப்பாவையானது திருமாலின் அடியார்களாகிய பன்னிரு ஆழ்வார்களுள் ஆண்டாள் என்னும் பெண்மணியும் ஒருவர். அவருக்குக் கோதை கொடுத்த நாச்சியார் என்னும் பெயர்களும் உண்டு. இவர் இயற்றிய பாமாலைகளில் திருப்பாவையும் ஒன்றாகும். இது முப்பது பாசுரங் களைக் கொண்டது. நாச்சியார் திருமொழி மற்றைய பிரபந்தமாகும். திருப்பாவைப் பிரபந்தப் பாடல்கள் ஆயர்குல மகளிர் கண்ணனை அடைய நோற்ற நோன்பினைக் குறிப்பிடுகின்றன. திருப்பாவையில் கூறப்படும் பாவைநோன்பு அக்காலத்தய தமிழ் இலக்கியங்களில் தை நீராடல் எனக் கூறப்படுகின்றது. இது பெண்களை அஞ்ஞானத் துயிலிலிருந்து ஞான விழிப்புக்குக் கொண்டு வருவதாகும்.

மார்கழி மாதம் சுக்கிலபட்ச ஏகாதசிக்கு "மோடைச ஏகாதசி" என்று பெயர். இதுவே வைகுண்ட ஏகாதசி என்றும் சொல்லப்படும். வைகுண்ட ஏகாதசி முதல் நாள் இரவு கிருஷ்ண பகவான் அசுரர்களை மயக்க மோகினி அவதாரம் எடுத்த நாளாகும். ஏகாதசி அன்று சுவர்க்கவாசல் என்று கூறப்படும் வாசல் ஆலயங்களில் திறக்கப்படுகின்றது. அன்று மக்கள் ஆலயம் சென்று வணங்குவார்கள். சுவர்க்கவாசல் திறப்பு நள்ளிரவு வேளையில் இடம்பெறும்.

"காயத்திரிக்கு ஈடான மந்திரம் இல்லை, தாய்க்குச் சமமான தெய்வமும் இல்லை, காசிக்கு மேலான தீர்த்தமும் இல்லை, ஏகாதசிக்கு சமமான விரதமும் இல்லை" என அக்கினி புராணம் கூறுகின்றது. ஏகாதசி என்பது காயத்திரி விஷ்ணுவின் திருமேனியில் உறைகின்ற நாள். ஏகாதசி அன்று சுத்தமாக விரதம் இருப்பவர்க்கு பிணி, வியாதிகள் ஒன்றும் ஏற்படாது.

மார்கழிமாத விரதங்களில் விநாயகர்சஷ்டி விரதமும் ஒன்றாகும். கார்த்திகை மாதத்துக் கிருஷ்ணபட்ச பிரதமை தொடக்கம் மார்கழி மாதத்துச் சுக்கிலபட்ச சஷ்டியீறாக உள்ள இருபத்தொரு நாட்கள் இவ்விரதம் அநுட்டிக்கப்படுகின்றது. இந் நாட்களில் விநாயகர் புராணம் படிப்பதும் பேச்சுக் கேட்பதும் நல்ல பலனைக் கொடுக்கும்.

ஆஞ்சநேயர் வாயுவினுடைய அம்சமாக அஞ்சனா தேவியிடம் அவதரித்தவர். அவர் நித்திய பிரமச்சாரி. ஏழு சிரஞ்சீவிகளில் ஒருவராவர். இவரை வணங்குபவர்களை பேய், பிசாசு அணுகாது. புத்தி, பலம், தைரியம், ஆரோக்கியம், வாக்கு வன்மை முதலியன பெறுவார்கள். இத்தகைய ஆஞ்சநேயர் பெருமானை விரதமிருந்து வழிபடுகின்ற நாள் ஆஞ்சநேயர் ஜெயந்தி ஆகும். இதுவும் மார்கழி மாதத்துக்குரிய புனித விரதங்களில் ஒன்றாகும்.

இவை போன்ற பல புண்ணிய நாட்கள் உள்ளடங்கியிருப்பினும் மார்கழி மாதம் முழுமையும் புண்ணிய காலமாகவே இந்து சமயத்தவர் கருதுகின்றார்கள். தேவர்களின் விழிப்புக்குரிய புண்ணியகாலம் அதுவாகும். எனவே நாமும் மார்கழி மாதம் முழுவதையும் இறைவழிபாட்டில் கழித்துப் பயன்பெறுவேமாக.

## சந்நிதிக்கு வந்ததினால் எந்தன் சந்தேகம் மறைந்ததப்பா!

நீலமயில் வாகனனே எங்கள் நெஞ்சம்நிறை
வேலழகா! கொஞ்சி கொஞ்சிப் பாடிடுவேன்
அருளைக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டிடுவேன்
கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டு விட்டால் நீ மிஞ்ச மிஞ்சத்
தந்தருள்வாய் சந்நிதிக்கு வந்ததினால்
எந்தன் சந்தேகம் மறைந்ததப்பா.
(நீலமயில்)

அஞ்சி அஞ்சி அலறிவரும் அடியவர்கள்
கெஞ்சி கெஞ்சி உனைவேண்ட நெஞ்சமதில்
நீ நிறைந்தால் பஞ்சம் அங்கேபறந்திடாதோ
யாமிருக்க ஏதுபயம் என்று உந்தன் பக்திக்கோர் .
பரிசளித்து சும்மா இருஎன்று சொன்னான் அந்தச்
சுகத்திற்கோர் எல்லை உண்டோ.
(நீலமயில்)

வரமுன்னே குறைதீர்க்கும் வள்ளல்நீ யன்றோ வேலழகா
வந்தவர்க்கு வாரிவழங்கும் உனைவாயார வாழ்த்திடுவேன்
வாயார வாழ்த்துவதற்கே எனக்குச் சொல் எடுத்துத்
தந்தவனே நெஞ்சால் போற்றிடுவேன் வந்தவர்க்கு
நிம்மதியைத் தந்தருள்வாயே! ஆற்றங்கரை ஓரத்தில்
என்அன்பான வேலழகா - நீ அலையாமனம் தந்தாய்
உனக்கு அனந்தகோடி நமஸ்காரம்.
(நீலமயில்)

*-க. சரவணபவன்-*

# திருச்சதகம் (தொடர்ச்சி...)

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

8. சாவமுன் னாள்தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடு மெண்ணிவிண் ணாண்டுமண்மேற்
றேவரென் றேஇறு மாந்தென்ன பாவந் திரிதவரே.

**ப.ரை:** சாவமுன் நாள் தக்கன் வேள்வி தகர் நின்று- தாம் எல்லோரும் இறந்துபட நேரும் என உணர்ந்தும் முன்னாளில் தக்கனாற் செய்யப்பட்ட யாகத்தில் அவியாக ஓமஞ்செய்த ஆட்டின் ஊனைத் தின்றும், நஞ்சம் அஞ்சி- பின்னரத் திருப்பாற் கடலில் எழுந்த நஞ்சினை அஞ்சி, ஆ அ எந்தாய் என்று அவிதா இடும் நம்மவர் அவரே- ஆஆ எங்களுக்கு இரங்கி எங்கள் தந்தையே அருள்செய்க என்று முறையீடு செய்யும் நம்மவர்களாகிய அத்தேவர்கள் தாமோ, எம்பிரானொடு மூவர் என்று எண்ணி- எம்பெருமானோடு தம்மையும் சேர்த்து மூவராவோம் என்று நினைத்து, விண் ஆண்டு- விண்ணுலகத்தில் தத்தம் உலகங்களை ஆட்சி புரிந்து, மண்மேல் தேவர் என்று இறுமாந்து திரிதவர்- நிலவுலகத்தில் யாம் முழுமுதற் கடவுளாவோம் என்று செருக்குற்றுத் திரிவுபடும் தவத்தினையுடையர், என்ன பாவம்- தக்கன் வேள்வியில் சாவடைந்தும் நஞ்சம் அஞ்சி அவிதா இட்டும் இழிவடைந்த தேவர்களது அறியாமையை என்ன தீவினை என்போம்.

நாம் எல்லோரும் சாவநேரும் என உணர்ந்தும் முன்னாளில் தக்கனாற் செய்யப்பட்ட வேள்வியில் அவியாக ஓமஞ்செய்த ஆட்டின் ஊனைத் தின்றும் பாற்கடலில் எழுந்த நஞ்சினைக் கண்டு அஞ்சி ஆ ஆ எங்களுக்கு இரங்கி எந்தாய் அருள்செய்க என்று அவிதா இடம் நம்மவர்களாகிய அத்தேவர்கள் தாமோ. எம்பெருமானோடு தம்மையுஞ் சேர்த்து மூவராவோம் என்று எண்ணி விண் ஆண்டு நிலவுலகத்தில் யாம் முழுமுதற் கடவுளாவோம் என்று செருக்குற்றுத் திரிவுபடும் தவத்தினையுடையவர். அவர்களது அறியாமை என்ன தீவினைப் பயன் என்போம் என்பதாம்.

சாவ முன்னாள் தக்கன் வேள்வித் தகர் நின்று என்றது ததீசி முனிவரது இடித்துரையாலும் திருநந்தி தேவர் உமையம்மையார் என்பவர்களின் ஆணைமொழியாலும் தக்கனது வேள்வி அழிவுபடும் என்றும் அவ்வேள்வியிற் புகுந்துள்ள தாம் எல்லோரும் இறந்துபட நேரும் என்றும் அறிந்திருந்தும் அந்த யாகத்தினின்றும் நீங்கமாட்டாது சாகும் வண்ணம் அவியாகிய ஆட்டுனைத் தின்று என்றவாறு. தின்றும் என்னும் உம்மை தொக்கது.

நஞ்சம் அஞ்சி அவிதாஇடும் நம்மவர் என்றது, சாவாதிருக்க. அமுதுண்ணக் கருதித் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்துத் தோன்றிய நஞ்சினைக் கண்டு அஞ்சித் தங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று முறையீடு செய்யும் நம்போன்ற சகல வர்க்கத்தினராகிய தேவர்

என்றவாறு. நஞ்சையஞ்சி என இரண்டாவது விரிக்க இனி, நஞ்சின் அஞ்சி என ஐந்தாவது விரிப்பினுமமையும். "அச்சக் கிழவிக் கைந்து மிரண்டு மெச்ச மிலவே பொருள்வயினான்" என்பது தொல்காப்பியம். (வேற். மயங் 17) நஞ்சம் அஞ்சியமை.

"வடங்கெழு மலைமத்தாக வானவ ரசுரரோடு
கடைந்திட வெழுந்தகஞ்சங் கண்டுப∴ ரேவரஞ்சி" (நாவு 65:2)

எனத் தேவாரத்து வருதலானுமறிக.

தின்று அஞ்சி அவிதாவிடும் நம்மவர் என இயையும் ஆவ என்பது ஆவா என்பதன் குறுக்கம். ஆவா என்பது இரக்கக் குறுப்பிடைச் சொல். அவிதா என்பது துன்பம் நேர்ந்து இறைவனை நினைந்து ஓலமிடும் ஓர் ஓலச்சொல். "சிவதா" என்பது போல, நஞ்ச மஞ்சி தேவர் ஓலமிட்டமை, "அருந்தே ரழிந்தன மாலமென் றோலமிடு மிமையோர்" எனத் திருக்கோவையாரில் (329) வருதலானுமறியப்படும்.

மூவரென்றே எம்பிரானொடு மெண்ணி என்றதனால் நம்மவர் என்றது பிரம விட்டுணுக் களாகிய இருவரை. இவர் சகல வர்க்கத்தினராய் நம்மைப் போத மும்மலமுடைய உயிரினத் தவராகலின் "நம்மவர்" என்றார். பிறர் கூறும் பெருமை இவர்க்கின்மையிற் "பொய்யானவர்" எனத் திருக்கோவையாரில் (67) கூறப்படுதலும் ஈண்டு அறியற்பாலது. அவரே என் புழி ஏகாரம் வினாப்பொருளில் வந்து இழிவைக் குறித்தது.

இவர் மகாருத்திரனாகிய பரமசிவனைக் குணிருத்திரனாக வைத்து அவனொடு தம்மையும் ஒத்த நிலையில் வைத்துப் பிரமன் விஷ்ணு உருத்திரன் என மூவராக எண்ணினராதலின் "மூவரென்றே யெம்பிரானோடு மெண்ணி" என்றார். "மகாருத்திரனாகிய பரமசிவனைக் குணிருத்திர னாக வைத்தெண்ணுவோரை நோக்கி, நம்மவரே, மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணி விண்ணாண்டு மண்மேற், றேவரென்றே யிறுமாந்தென்ன பாவந் திரிதவரே" என வாதவூரடிகள் இரங்கிக் கூறிய திருவாக்கும் அறிக எனச் சிவஞானபாடியத்து (முதற் சூத்திரவுரை) வருதலுங் காண்க. பரமசிவம் மும்மூர்த்திகளுக்கும் தலைவன் என்பதை,

"தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தமிழுக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன்"
(சத 30)

"முந்து நடுவு முடிவுமாகிய மூவரறியாச்
சிந்துரச் சேவடி யானை"
(குயிற் 5)

"முந்திய முதனடு விறுதியு மானாய், மூவருமறிகிலர்"
(திருப்பள்ளி 8)

என இத்திருவாசகத்தும்,

"தேவராரு மசுர ராயுஞ் சித்தர் செழுமறை சேர்
நாவராயு நண்ணுபாரும் விண்ணெரி கானீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மா லீசனென்னும்
மூவராய முதலொருவன் மேயதுமுதுகுன்றே"
(ஞான 53:1)

"வரியாய மலரானும் வையந்தன்னை
உரிதாய வளந்தானு முள்ளுதற்கங்
கரியானு மறியாத கள்ளின் மேயான்
பெரியானென் றறிவார்கள் பேசுவாரே"

(ஞான 119:9)

"மவையுரித்ததன் கொண்டங்க மணிந்தவனை வஞ்சர்மனத்தி
றையுநெஞ்சணுகாதவனை, மூவருருத்தனதா மூலமுதற்கருவை"

எனத் தேவாரத்தும்,

"தேவரின் ஒருவன் என்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார்"

(சூத் 1. செய் 49)

எனச் சிவஞானசித்தியாரிலும்,

"அரியாகிக் காப்பானயனாய்ப் படைப்பா
னரனா யழிப்பானுந்தானே"

(திருக்கைலாயஞான 5)

"வீரனயனரி..... யாருமறியாவகை யெங்களீசர் பரிசுகளே"

(பொன் வண்ணத் 95)

எனப் பதினொராந் திருமுறையிலும் வருவனவற்றாலும் உணர்க.

பிரம விட்டுணுக்களால் விண்ணுலகில் ஒவ்வோர் உலகங்கள் ஆட்சி செய்யப்படுதலின் "விண்ணாண்டு" என்றார். இவர் மண்மேல் தம்மைப் பரம்பொருளாகக் கருதி இறுமாந்தலின் "மண்மேற் றேவரென்றே யிறுமாந்து" என்றார். தேவர் என்பது ஈண்டு பரமசிவனைக் குறித்தலின் ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி, இதனைத் "தேவரென்றது ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி; மண்மேற் றேவரென்றே யிறுமாந்து" என்றார் பிறரும் என நச்சினார்க்கினியர் உரைத்தமையானும் (சீவக 1513 உரை) தெளிக. என்றே என்பதில் ஏகாரம் தேற்றம். "இறுமாந்து என்ன பாவந் திரிந்தவரே" என்பது அடிகள் அவர்களின் அறியாமை கருதி இரங்கிக் கூறியவாறு. என்ன பாவம் என்பதற்கு இ∴தென்ன தீவினையின் பயன் இருந்தவாறு எனினுமாம்.

தவர்- தவத்தினையுடையவர். "திரிதவர் கண்ணுள்ளும் உள்ளத்தினுள்ளும் திரிதரினும்" (பொன்வண்ணத்) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. திரிதவர்- திரிவுபடும் தவத்தினை உடையவர். தவத்தில் திரிவுபடு என்னையெனில், பயன் கருதாது நோற்கும் தவமும் பயன் கருதி நோற்கும் தவமும் எனத் தவம் இருவகைப்படும்.

நீத்தவராகிய பெரியோர் தவம் பயன்கருதாமையின் திரிவு பாடிலதாகும். பயன்கருதும் தக்கன் முதலிய தேவர், சூரபன்மன் முதலிய அவுணர் நோற்கும் தவம் திரிவுபட்டு இடுக்கணுண் டாக்கியமை வரலாறுகளால் உணரலாம். அந்தாதித் தொடையான இச்சதகத்தில் அடுத்த திருப்பாட்டு "தவமே புரிந்திலன்" எனத் தொடங்குதலின் "திரிதருவர்" என்பது ரகரவுகரங் கெட்டுத்திரிதவர் என்றாயிற்று எனக் கோடல் பொருந்தாதென்க.

இதன்கண் சிவபெருமானை மூவருள் ஒருவனாகக் கருதாது அம்மூவரையும் இயக்கி ஆளும் முழுமுதல்வன் என்று உணர்தல் வேண்டும் என்பதனால் மெய்யுணர்தல் என்னும் பதிகப் பொருள் புலப்படுமாறு காண்க.

(தொடரும்...

# உள்ளம் பெருங்கோயில்

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

இறைவன் எங்கேயிருக்கின்றான்? காட்ட முடியுமா? பாமர மக்களின் கேள்வி. கோயில், தேவலோகம், ஆகாயம், வைகுந்தம், கைலாயம் எனப் பலரும் பலபடச் சொல்வார்கள். ஆனால் யோகிகள், ஞானிகள், சித்தர்கள் என்ன சொல்கிறார்கள். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாயிருப்பவர். பாலில் சுவை, நெய்போல நிற்பவர். நீரில் சூடு கலந்தும் தனியாக நிற்பதுபோல் நம்மை அறியாமல் எமக்குள்ளேயே இருக்கின்றான் எனச் சொல்வர்.

"எங்கும் எவையும் எரியுறு நீர்போல்
தங்குமவன் தானே தனி" -திருவருட்பயன்.

கைலாயத்தில் இருந்தவாறே உலகம் முழுவதையும் இயக்கும் (முத்தொழில்கள்) இறைவன் ஆன்மாக்களை வசப்படுத்த உருவத் திருமேனிகொண்டு வருவதுமுண்டு. இறைவனுக்கு இருந்தாற்போல் ஓர் எண்ணம் தோன்றியது. உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் அறியமுடியாமல் ஒளித்திருந்து அவற்றை இயக்க விரும்பினார். முடிவில் தான் ஒளித்திருக்க ஒரு வீடு கட்டினார். எப்படி எதனால்,

"தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக் கைநாற்றி நரம்
பாலார்க் கையிட்டுத் தசைகொண்டு மேயந்த அகம்"

வீடு கட்டி முடித்தார். அதாவது தோல், எலும்பு, நரம்பு, தசை, இரத்தம் இவற்றால் வீட்டைக் கட்டி இரு கால்கள், இரு கைகள், சிரசு, சிரசை அலங்கரிக்க தலைமயிர், முகம், மூக்கு, கண், காது என வைத்து வீடு அமைத்தாயிற்று. அதில் எங்கே ஒளிக்கலாம்? தீவிரமாகச் சிந்திக்கிறார். மனதில் கலக்கம். மண்ணில் திண்மை; நீரில் தண்மை; சுவை தீயில் வெம்மை; காலின் (காற்று) ஊக்கம்; வானில் கலப்பு; சூரியனில் வெப்பம்; சந்திரனில் தண்மை வைத்த இறைவன் தான் அமைத்த உடம்பாகிய வீட்டில் ஒளிக்க இடமில்லையே. இறைவனின் வியாகூலத்தை உமையம்மை உணர்கிறார். சிவனுக்கு உயிர்ப்பு தருபவள் சக்தியல்லவா? சுவாமி! ஏன் தயங்குகிறீர்கள். நீங்கள் அமைத்த வீட்டிலே மனம் என்னும் இருதயம் இருக்கல்லவா? அது அந்த வீட்டுக்குச் சொந்தமானவனல்லாது வேறு யாரும் அறிய முடியாது. ஏன் தயங்குகிறீர்கள்? துள்ளி எழுந்தார் சிவன். அவர் அமைத்த வீட்டில் மனமாகிய இதயத்துள் புகுந்து விட்டார். மனம் ஒன்று இருந்தமையால் அந்த வீடு மனிதன் என்ற பெயர் பெற்றது. இப்போது மனிதனின் இருதயம் உள்ளக் கோயிலாய் விட்டது.

ஞானிகள், யோகிகள், சித்தர்கள், முனிவர்கள் சிவன் சீவனுக்குள்ளேதான் சிவலிங்கமாக இருக்கிறான் எனக் கண்டுள்ளனர். உடம்பு உயிர் வாழும் இடம். உள்ளம் உயிருக்கு உயிரான இறைவன் வாழும் கோயில். தூய்மையான இடத்திலேதான் இறைவன் இருப்பான்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்

தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

எனத் திருமூலர் சொல்ல, அப்பர் சுவாமிகள்,

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"

இப்படிச் சொல்கிறார்.

மணிவாசகப் பெருமான், "சிந்தையே கோயிலாகக் கொண்ட எம்பெருமான் திருப்பெருந்துறை சிவனே எந்தையே ஈசா உடலிடங்கொண்டாய்" எனப் பாடுகிறார். விநாயகர் அகவலில் ஒளவையார், "....சத்தத்திலே சதாசிவத்தையும், சித்தத்தில் சிவலிங்கத்தையும் காட்டி" எனச் சொல்கிறார்.

"ஆக்கையே கோயிலாக அரன் சிவலிங்கமாக நீக்கமற நிற்கும் நிமலனின் கோயில்தான் நம் உடம்பு நாம் எம் உடம்பை ஆரோக்கியமாக வைப்பதற்குச் சத்தான உணவு, உடற்பயிற்சி, ஓய்வு, உறக்கம் எனப் பலவகை முயற்சிகள் செய்கிறோம். ஆனால் உள்ளத்தை வளர்க்க நமக்குத் தெரிவதில்லை. உள்ளம் ஆரோக்கியமாக வேண்டுமாயின், விரதம், யாத்திரை, சத்சங்கம், மௌனம், கூட்டுப்பிரார்த்தனை, யோகம், தியானம் இவைகளில் ஈடுபடவேண்டும். ஐம்புலன்களும் அடங்கும். காமம், கோபம், குரோதம் முதலாய துர்க்குணங்கள் இல்லாமல் மறையும். மனம் தூய்மையடையும்.

ஆரோக்கியத்திற்கும் ஆன்மீகத்திற்கும் தொடர்புண்டு. உடம்பைப் பேணிக் காப்பது ஆன்மீகமே. உடல்நலத்தில் விரதம் முக்கியமானது. உணவைச் சுருக்குதலும் விடுதலும் விரதம். விரதம் அனுஷ்டிக்கும்போது அசைவம் தவிர்க்கப்படுகிறது. இறை சிந்தனை கூடுகிறது. சீரண உறுப்புகட்கு ஓய்வு கிடைக்கிறது. இரத்த அழுத்தம், மாரடைப்பு, நீரிழிவு போன்ற நோய்கள் கட்டுப்பாட்டில் இருக்கும்.

வழிபாட்டுமுறையில் மௌன விரதமும் அடங்கும். "மோனம் என்பது ஞான வரம்பு" ஔவைவாக்கு. பிராணவாயுவை அடக்கிச் செய்யும் மூச்சுப் பயிற்சியால் ஆயுள் நீடிக்கும். தியானம், யோகம், பிராணயாமம் அலையும் மனத்தை ஒருநிலைப்படுத்தும். மனச்சோர்வு, மன அழுத்தம், கோபம், பதட்டம் குறையும். நல்ல சிந்தனைகள் உண்டாகும். முதுமையையும் வெல்லலாம். சதா ஒன்றை (இறைவனை அல்லது வேறோர் தெய்வத்தைப்) புலனடக்கிச் செய்வது தியானம்.

மனித உடம்பு ஆலய வடிவை ஒத்தது.

| | |
|---|---|
| உடம்பு | ஆலயம் |
| உள்ளம் | கோயில் |
| இருதயம் | சிவலிங்கம் |
| வாய் | கோபுரவாசல் |
| வயிறு | கொடிஸ்தம்பம் |
| பாதம் | கோபுரம் |

நாம் ஆலயம் சென்று புறத்தைச் சுத்தம் செய்யப் பூசகர் கர்ப்பக்கிரகம் அர்த்த மண்டபத்தைச் சுத்தி செய்து விளக்கு ஏற்றிப் பூசை செய்கிறார். அங்கே தெய்வ சாந்நித்தியம் தெரிகிறது. நாமும் உடம்பைத் தூய்மையாய் வைக்க வேண்டும். "அகத் தூய்மை, வாய்மை யாலும் புறத் தூய்மை நீரினாலும் அமையும்". ஆகவே மனமணிலிங்கத்தை வாய்மையாகிய நீரினால் சுத்தம் செய்து, அன்பாகிய நெய் பாலினால் அபிஷேகித்து அவ்வத் தெய்வங்கட்குரிய மந்திரங்களால் அர்ச்சனை, தோத்திரம் செய்ய உள்ளம் பிரகாசிக்கும். இறைவன் உள்ளத்தில் நிரந்தரமாகக் குடியிருப்பான். மனத்துக்கண் மாசு நீங்கும். காமம், கோபம், குரோதமாகிய துர்க்குணங்கள் அகன்றுவிடும்.

சீவன்தான் சிவலிங்கம்; சிவம்தான் நீதி, சிவன்தான் அன்பு; சிவன் நமக்குச் சாட்சி; மனச்சாட்சி சிவன் சாட்சி; சித்தத்தின் போக்கு சிவன் போக்கு; யாவும் சிவமயம். திருமூலர் சிவன் உள்ளத்தில் இருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டவர். நமக்கு நல்லதோர் அறிவுரை சொல்கிறார்.

"உடம்பினை முன்னம் இழுக் கென்றிருந்தேன்
உடம்பிலே உறுபொருள் உண்டென்று கண்டேன்
உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

ஒவ்வொரு உயிரின் உடலும் இறைவன் வாழும் கோயில். இந்தக் கோயிலின் இருதய பீடத்தில் இறைவன் நிரந்தரமாகக் குடிகொண்டுள்ளான். நாம் உடம்பைக் கவனிக்கவில்லையானால் இறைவன் வாழும் இடத்தையும் கவனிக்காதது போலாகும்.

அதனால் "உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேன்" என ஞானிகள், யோகிகள் கூறுகின்றனர்.

---

## ஆன்மீகச் சிந்தனை

"தான்" என்ற அகங்காரம் மனிதனுக்குத் தோல்வியை வாழ்க்கையில் அளிக்கிறது. அதனால்த்தான் அனைவரும் இறைவனை அடைந்து வாழ்க்கையில் வெற்றி பெற விரும்புகிறார்கள். "என் செயலால் ஆவது ஒன்றும் இல்லை" என்று சொல்லித் தம்மைத் தாழ்த்திக் கொண்டு, இறைவனின் அருளை வேண்டிச் சரணடைகிறார்கள். இந்த மனப்பான்மை நமக்குப் பூசை செய்வதாலோ, விரதம் இருப்பதாலோ வந்து விடாது, பிறரிடம் இறைவனைக் கண்டு அவர்கள்பால் மனமுருகி, அன்பால் நம்மை நாமே பிணைத்துக்கொள்ளவேண்டும். சமூகத்தொண்டு செய்பவன் தன்னலம் கருதமுடியாது. தற்பெருமை கொள்ளவும் முடியாது. படிப்பறிவில்லாத மக்களிடமும், இகழ்ந்து பேசக்கூடிய துஷ்டர்களிடமும் அன்பாகப் பழகவேண்டி இருக்கும். அவர்களுடைய பேச்சினாலும், கேள்விகளினாலும் கோபம் அடையாமல் பதில் சொல்ல வேண்டியிருக்கும். அப்படி அவன் சமூகப் பணியில் ஈடுபடும்போது அதுவே அவனுடைய கோபத்தையும் அகங்காரத்தையும் நீக்கி அவனை ஆன்மிக வழியில் மேன்மை அடையச் செய்கிறது.

# ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்

(தொடர்ச்சி...

– திரு மு.க. மாசிலாமணி அவர்கள் –

"ஆன சொல்மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே"

என உறுதியாக ஆணையிட்டுத் தேவாரங்களை ஓதுவதால் பெறும் பயன் கூறும் சம்பந்தர் வேற்றுமொழியாளராட்சியில் தமிழ் மக்களை ஒன்றிணைத்து இறையுணர்வினையும் தமிழுணர்வினையும் மக்களிடையே வளர்த்து அதன்மூலம் மக்களை வழிநடாத்திய தலைவராகத் தமிழ், சமூக வரலாற்றில் போற்றப்படுகின்றார். நீண்ட தமிழ்மொழி வரலாற்றில் பலர் தம் பெயரைத் தமிழுடன் இணைத்து வெளிப்படுத்தியுள்ளனரெனினும் **"தமிழ் ஞானசம்பந்தன்"** என்றும் **"ஞானசம்பந்தன் ஞானத்தமிழ்"** என்றும் தன்னுடைய பெயருக்கு முன்னும் பின்னும் முந்நூற்றுக்கு (300) மேற்பட்ட இடங்களில் தமிழோடு தன்னுடைய பெயரை இணைத்துப் பாடியவர் சம்பந்தர் ஒருவரே. திருமுறைகளைத் தமிலுலகிற்குத் தொகுத்தளித்தவரும் 11ஆம் திருமுறை ஆசிரியருமான நம்பியாண்டார் நம்பி தனது பாடலொன்றில்,

"ஆறு தேறுஞ் சடையான் அருள் மேவ அவனியர்க்கு
வீறு தேறுந் தமிழால் வழிகண்டவர்"

என்றும் சம்பந்தருக்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்குப் பின் தோன்றிச் **"சுந்தரர் செந்தமிழ்"** என்று போற்றுமளவிற்குத் தேவாரம் பாடிய சுந்தரரும், **"நாளுமின்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்"** என்றும் ஞானசம்பந்தரின் தெய்வத் தமிழிசைப் பணியைப் போற்றியுள்ளனர். மேற்படி இருவரின் கூற்றுக்களை வழிமொழிபவர் போல் பெரியபுராண ஆசிரியர் சேக்கிழாரும்,

**"திசையனைத்தின் பெருமையெல்லாந் தென்திசையே வென்றேற
அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல..."**

சம்பந்தர் அவதாரஞ் செய்ததாகக் கூறுவதும் ஒப்புநோக்கத்தக்கது.

மானிடரின் மனமாசினை நீக்கி உய்தியளிக்க வல்ல ஞானநூலான திருவாசகத்தின் பொருள் தில்லையம்பல நடராசனே என அதன் ஆசிரியரான மணிவாசகரினால் கூறப்பட்ட பெருமைக்குரிய அருள் நலம் மிக்கத் தெய்வத் திருநூலே **திருவாசகம்.** ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் அப் பக்திப் பெரும்படைப்புக்கு இணையானதொரு ஆக்கம் உலக மொழிகளில் மிக மிக அருமையாகவே உள்ளன என்று கூறுமளவிற்குக் கல் நெஞ்சையும் கனியவைக்கும் பக்திரசத்தின் உச்சமாகத் திகழும் திருவாசகத்தையும் தெய்வத்தமிழ் கொண்டிருக்கின்றது. மதத் தொண்டு புரிவதற்குத் தமிழ் நாட்டுக்கு வருகை தந்த பிரித்தானியரான கிறிஸ்தவ மதபோதகர் G.U. போப், முதலில் தமிழைக் கற்கத் தொடங்கி அதனினிமையால் ஈர்க்கப்பட்டுத் திருக்குறள், திருவாசகம் போன்ற அருமையான நூல்களைக் கற்றார். உருக்கத்தின் உச்சிக்கே கொண்டு செல்லும் பெற்றி வாய்ந்த திருவாசகம் என்ற என்புருக்கும்

அரும்பெரும் ஆன்மிகப் பொக்கிஷத்தை Bone melting literature என ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமிழ்ப் பக்திக் கவிதைச் சிறப்பினை மேற்குலகிற்கும் உணர்த்தியுள்ளார். தனது கல்லறையிலும் "Reu. G.U. Pope. A student of tamil literature" எனப் பொறிக்கும்படியும் அறிவுறுத்திய போப் தெய்வத் தமிழைப் போற்றிய பேரறிஞராவார்.

தேவார, திருவாசகப் பாசுரங்களின் சாரமாகவும் விளக்கமாகவும் விளங்கும் **திருவிசைப்பா, திருப்பல்லாண்டு** ஆகியன ஒன்பதாந் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. ஒன்பது அருளாளர்களால் பாடப்பட்ட ஒன்பதாந் திருமுறை பாடல்கள் எண்ணிக்கையில் 301ஐ மட்டும் கொண்ட அளவிற் சிறியதாயினும் ஆலயங்களில் ஓதப்படும் பஞ்ச தோத்திரங்களில் பதினெண்ணாயிரம் வரையான பாடல்களைக் கொண்ட ஏனைய திருமுறைகளிலிருந்து மூன்று பாடல்களே ஓதப்பட இத்திருமுறையிலிருந்து திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என இருபாடல்கள் ஓதப்படுவதே ஒன்பதாந் திருமுறைக்கான தனிச் சிறப்பாகும். முதல் எட்டுத் திருமுறைகளும் இசைப்பாக்களேயாயினும் இது ஒன்றிற்கே **"இசைப்பா"** எனப் பெயர் வழங்கப்பட்டிருப்பதும் ஒன்பதாந் திருமுறைக்கான மற்றோர் சிறப்பாகும்.

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"**

என இறை நெறியை உள்ளவாறுணர்ந்து மனுக்குலம் உய்வதற்கு ஆற்றுப்படுத்தும் அருள் நூலை அடியேனைக் கொண்டு தமிழில் பாடுவிக்கவே தன்னை இறைவன் படைத்தானெனக் கூறுந் திருமூலர் சைவசமய உண்மைகள் தமிழிலிருக்க வேண்டுமென்பதே இறைவனுடைய பெருவிருப்பமென்பதனையும் தெளிவுபடக் கூறுவர். பத்தாந் திருமுறையான திருமந்திரம் என்ற தமிழாகம நூல் தெய்வத் தமிழிலுள்ள ஒப்பற்றதொரு சாஸ்திர நூல் மட்டுமன்றி நெறி முறையான விழுமியங்களை விளக்குமொரு வாழ்வியல் நூலுமாகும்.

திருவாலவாயில் அமர்ந்துறையும் சொக்கநாதர் பாடிய **"திருமுகப்பாசுரம்"** முதல் பதினொரு திருமுறைகளைச் சைவ உலகிற்குத் தொகுத்தளித்த நம்பியாண்டார் நம்பி திருநாவுக் கரசர்மீது பாடிய **"ஏகாதசமாலை"** வரையான 40 பிரபந்தங்களின் தொகுப்பே பதினோராந் திரு முறையாகும். பன்னிரு ஆசிரியர்களால் பாடப்பட்ட 1420 பாசுரங்கள் கொண்டது இத் திரு முறை. பொதுவாக எல்லாத் திருமுறைகளும் சிவபெருமானையே போற்றிப் பாடுவனவாயினும் இத் திருமுறையில் மட்டும் சிவன் பாடிய திருமுகப் பாசுரப் பாடலும் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட சிவபெருமான் மும்மணிக் கோவை, சிவபெரு மான் திருவந்தாதி, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை ஆகியனவும் ஏனைய திருமுறை களுக்கில்லாத 11ஆம் திருமுறைக்கேயுரிய தனிச்சிறப்பாகும். தேவார ஆசிரியர்கள் மூவருக்கும் முன்னோடியாக பக்திப் பிரவாகம் பெருக்கெடுத்துக் கடல் மடைதிறந்த வெள்ளம்போல் இசையும் இன்தமிழும் இரண்டற இணைந்த வகையில் பல்லாயிரக் கணக்கில் பக்திப் பாசுரங் கள் பாடித் தமிழ் வளம்பெற விடிவெள்ளிபோல் தோன்றி வழிகாட்டிய, திருமுறை ஆசிரியர்கள் 27 பேரில் ஒரேயொரு **பெண்பாற் புலவரான காரைக்காலம்மையாரின்** அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இத்திருமுறையில் அடங்குவது அதன் மற்றோர் சிறப்பாகும். தமிழ்த் தெய்வமான முருகனிடம் ஆற்றுப்படுத்தும் **திருமுருகாற்றுப்படை** பக்திப் பெருங்காப்பியமான பெரியபுராணத்தைப் பாடுவதற்குச் சேக்கிழாருக்கு ஆதாரமாக அமைந்த திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியன 11ஆம் திருமுறையிலிருப்பதும் ஆற்றுப்படை உலா, கோவை, கலம்பகம், அந்தாதி போன்ற இத் திருமுறையில் உள்ள பிரபந்தங்கள் அவ்வகையான

சிற்றிலக்கியங்கள் பல பிற்காலத்தில் தோன்றித் தமிழிலக்கியம் வளம்பெற முன்னோடியாக அமைந்த வகையிலும் 11ஆம் திருமுறை தமிழ்மொழி வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றது.

சங்ககாலத்திற்குப் பின் தமிழர்களான சோழராட்சிக் காலத்தில் தமிழைத் தெய்வத் தமிழாக வீறுகொண்டெழுச்சியடையச் செய்த சிவனடியார்களின் வாழ்க்கை வரலாற்றைப் பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டத் தமிழ்ப்புலமையாளரான சேக்கிழாரால் பாடப்பட்ட **பெருங் காப்பியமான பெரியபுராணமும்** தெய்வத் தமிழின் சீர்மையினை விளக்கவல்லதோர் ஒப்பற்றதொரு படைப்பாகும். பல்லவராட்சிக் காலத்திலிருந்து ஆரம்பித்த கோயிலை முதன்மைப் படுத்திய **"கோயிற்பண்பாடு"** ஒன்று வளர்ந்து 1ஆம் இராசராசன் போன்ற சோழப் பேரரசர் காலத்தில் சமய, சமூக, பண்பாட்டு மையமாகக் கோயில்கள் முக்கியத்துவம் பெற்றுப் பெருவளர்ச்சி எய்துவதற்கு அச்சாணியாக விளங்கிய நாயன்மார்களின் உண்மை பயக்கும் பெரும்படையாகப் பெரியபுராணத்தைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளித்த தெய்வத் தமிழ்ப் புலவர் சேக்கிழார் சைவத் தமிழ் வரலாற்றில் ஒப்பற்ற ஒருவராவர்.

முறைப்படுத்தப்பட்ட தெய்வத் தமிழ்ப்பாசுரங்களின் தொகுப்பான **பன்னிரு திருமுறைகள் வேத மந்திரமாக விளங்குவன.**

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழிதானே மந்திர மென்ப"

எனத் தொல்காப்பியம் கூறும் மந்திர வரைவிலக்கணத்திற்கு அமையுமாறு இறைசக்தி உள்நின்றுந்த நிறைமொழி மாந்தர்களான அருளாளர்களின் நாவிலிருந்து வேதசாரம் போல் வெளிவந்த ஆணைமொழிகளே அப் பக்திப்பாசுரங்கள். முறைப்படி நியமந்தவறாது ஓதிவரப் பயன் விளைவிப்பன. ஆதலால் அவை பூசித்தற்கும் கிரமமாக ஓதுவதற்குமுரியவை. மறைத்து வைக்கப்பட்டிருந்த தேவாரத் திருமுறைகளைத் தேடிக் கண்டெடுத்துச் சைவத் தமிழுலகிற்கு அளித்தது மட்டுமன்றிக் கோயில்களில் அவற்றினை நியமந் தவறாது ஓதுவதற்கும் காத்திரமான ஒழுங்குகள் மேற்கொண்ட முதலாம் இராசராசன் போன்ற சோழப்பெருமன்னர் ஆட்சிக் காலமே தமிழர் வரலாற்றில் **"பொற்காலம்"** (Golden Age) என வரலாற்றாசிரியர்களால் பேசப்படுகின்றது. சிறந்த சிவபக்தனான இவன் திருமுறைகளில் மிக்க ஈடுபாடு கொண்டு தான் நிர்மாணித்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் கிரமமாகத் திருமுறைகளை ஓதுவதற்கென 48 ஓதுவார்களை நியமித்துத் திருமுறைகளை ஒலிக்கச் செய்த இம்மன்னனின் அரும்பெரும் பணிகள் பற்றிக் கல்வெட்டுக்கள் விரிவாகப் பேசுகின்றன. இவனுடைய மகனான முதலாம் இராசேந்திர சோழன் ஓதுவார்களுக்கு மேலாகத் **"தேவாரநாயகம்"** என்பவரையும் நியமித்துத் திருமுறை ஓதுவதனை விரிவாக்கினான். மேற்குறித்த சோழ அரசர்களைப் போலவே இரண்டாம் இராசராசனும் கும்பகோணத்தில் தான் நிர்மாணித்த தாரசுரம் சிவன் கோயிலில் ஓதுவார்களை நியமித்துத் திருமுறைகளை ஒழுங்காக ஓதுவித்ததுடன் வடமொழி வேதங்களுக்குச் சமமான சிறப்பினை வழங்கித் திருமுறைகளின் மகத்துவத்தினையும் மாண்பினையும் எங்கும் பரவச் செய்தான். இவ்வாறு சோழ மன்னர்கள் திருமுறைகளைப் பரப்ப மேற்கொண்ட நடவடிக்கைகளால் அவற்றின் பெருமை எங்கும் பரவிற்று. **திருமுறைகளைப் போற்றும் ஆர்வம் மேலோங்கியிருந்த சோழர் ஆட்சிக் காலத்திலேயே தமிழர் பண்பாடும் வளர்ச்சியின் உச்சத்தினை எய்திற்று.** சோழப் பேரரசரின் இறுதிக் காலத்தில் திருமுறைகள் ஓதுவதும் குறைவடைய அப்பேரரசும் பலமிழந்து வீழ்ச்சியடைந்த செய்திகளையும் கல்வெட்டுக்கள்

பேசுகின்றன. ஆகவே தமிழர் வாழ்வு மீண்டும் சிறப்புற்றோங்குவது தமிழ் வேதமான திருமுறைகளைப் போற்றுவதிலேயே தங்கியுள்ளது. திருமுறை முற்றோதல், திருவாசகம் முற்றோதல் என அண்மைக் காலங்களில் ஆங்காங்கே இடம்பெற்று வந்தாலும் கோயில்களில் திருமுறைகளுக்குரிய சிறப்பிடம் வழங்கப்படவேண்டும். திராவிட வேத பாராயணம் என்னும்போது மட்டும் சில கோயில்களில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என ஐந்து பாசுரங்களும், சில கோயில்களில் மேற்படி ஐந்துடன் திருப்புகழும், இன்னும் சில கோயில்களில் தேவாரமும் திருப்புராணம் ஓதும்முறை பின்பற்றப்படச் சில கோயில்களில் அவ்வாறு ஓதுவதற்குக் கூடச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை.

பாரதப் பண்பாட்டிற்குத் **தமிழ்மொழி வழங்கிய அரும்பெருஞ் சொத்தான பன்னிரு திருமுறை என்ற பக்திப் பேரிலக்கியம்** நீண்ட தமிழிலக்கியப் பெரும் பரப்பில் கணிசமான பகுதியாக விளங்குவதுடன் கல்வியிற் பெரியர் கம்பர், திருத்தக்க தேவர், பட்டினத்தார், அருணகிரிநாதர், குமரகுருபரர், இராமலிங்க வள்ளலார், பாரதி போன்ற பிற்காலப் பெரும்புலவர் பலருக்கும் யாப்பு, பொருள், இசை என்றின்னோரன்ன பல முறைகளில் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் அமைந்து தமிழ்மொழி செழுமையும் உயர்வும் எய்த உந்து சக்தியாக விளங்கியதுடன் தமிழரின் ஆன்மிக பண்பாட்டுயர்வுக்கும் வாழ்க்கை வளத்திற்கும் கட்டிடம், சிற்பம், ஓவியம், இலக்கியம், இசை, நடனம், கூத்து போன்ற அனைத்து நுண்கலைகளின் எழுச்சிக்கும் கேந்திர நிலையங்களாக முக்கியத்துவம் பெற்று விளங்கிய கோயில்களில் திருமுறைகளுக்கு மிக முக்கிய இடம் வழங்கப்படவேண்டும். கோயில்களில் மட்டுமன்றி இல்லங்கள், பாடசாலைகள், பொதுமன்றங்கள் என எங்கும் புனிதமான திருமுறைகள் பூசித்து ஓதப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இன்றைய இளம் சிறார்களை நாட்டின் நாளைய நற்பிரசைகளாக விளங்கும் வகையில் திருமுறைகளின் உயர்தனிச் சிறப்பை **"அன்பே சிவம்"**, **"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"**, **"யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி"**, **"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** என்பன போன்ற உலகை அரவணைக்கும் மனுக்குலத்தின் மேம்பாட்டுக்கான நற்சிந்தனைகளை அவர்களுக்கு விளங்கும் வகையில் தெளிவாக எடுத்துக் கூறித் திருமுறைகள் பற்றிய விழிப்புணர்வு மிக்க ஈடுபாடும் கொள்ள வழிவகுக்கப்பட வேண்டும். ஓதுவார் ஒருவரின் சிறப்பான பணியினால் அண்மைக் காலங்களில் இலண்டன் மாநகரில் திருமுறைப் பண்ணிசைத் தமிழ் மிகச் சிறப்பாக ஒலிப்பதுடன் இளஞ் சிறார்களிடையில் அது பரவி வருவதும் ஆலயங்களிலும் பிற அரங்குகளிலும் அவர்கள் திருமுறைகளைப் பண்ணுடன் பாடுவதனைக் கேட்கும்போது மனம் மகிழ்கின்றது. எனினும் இன்னும் சில ஓதுவார்களின் சேவையினைப் பெற்று இச்செயற்பாடு விரிவாக்கப்படுவதன்மூலம் **மேற்குலகில்,**

**1. திருநெறிய தமிழிசைத் தமிழும் வளரும்.**

**2. இளஞ்சிறார்களும் தம் தாய்மொழியான தமிழைக் கற்கும் வாய்ப்பும் ஏற்படும்.**

தெய்வத் திருமுறைகள் உரியவாறு போற்றப்பட்டு வளர்த்தால்த்தான் **"ஆய்ந்தோதிய ஒண்தமிழ்"**, **"சிவனடியைப் பரவிய செந்தமிழ்"** எனத் திருமுறைகளைச் சைவத் தமிழுலகிற்கு அளித்த நாயன்மார்களால் விதந்து போற்றப்பட்ட தமிழும் அதற்குச் சொந்தக்காரர்களான தமிழரும் உலகில் உயர்ந்து சிறப்பெய்துவர்.

(முற்றும்)

# பாவை பாடிய வாயால் கோவை பாடுக

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

“தென்னவன் பிரமராயன்” என்னும் நாமத்தோடு, தென்னவன் சபையிலே மந்திரிப் பதவி வகித்துக் கொண்டிருந்த மாணிக்கவாசகர், குதிரை வாங்கச் சென்றபோது, குருந்த மர நிழலில் வீற்றிருந்த அடியார் கூட்டத்தோடு கலந்திருந்தார்.

மாணிக்கவாசகருடைய பக்திநிலையைக் கருத்திற்கொண்டு சிவபெருமான் அவருக்கு ஞானமார்க்க பதவிக்கான நயனதீட்சை நல்கினார். ஆயினும் அவருக்கு முத்திநிலை கொடுக்காமல் திருவாசகத் தேன் பெறும் நோக்கில், தலங்கள் தோறும் சென்று தரிசிக்கும்படி திருவருள் நோக்கஞ் செய்கிறார் சிவபெருமான்.

மந்திரிப் பதவியை உதறிவிட்டு வெளியேறிய நிலையில் பல தலங்களுக்குஞ் சென்று திருவாசகத்தேன் மழை பொழிந்து செல்கிறார் மாணிக்கவாசகர்.

அக்காலத்தில் மார்கழி மாதத்தில் திருவண்ணாமலைக்குச் சென்று சேர்ந்தார். அத்தலத்தில் உறையுங் காலத்தில், அங்குள்ள கன்னியர் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி இறைவன் புகழ்பாடி நீராடி, ஆலய தரிசனம் செய்வதை அறிந்தார் மாணிக்கவாசகர்.

> மாதர்கொள் மாதரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்
> ஆதிரைமுன் னீரைந்தே யாகிய தினங்கள் தம்மில்
> மேதகு மனைகள் தோறும் அழைத்திருள் விடிவதான
> போதிவர் தம்மிற்கூடிப் புனற்றடம் ஆடல் செய்வார்.
>
> (திருவாத. புராணம்)

“மாதங்களில், மார்கழி மாதமாக நான் இருக்கிறேன்” என்பார் கிருஷ்ண பகவான். மார்கழி மாதம் தேவர்களின் பிரம முகூர்த்த காலம் (விடியற்காலை) என்பர். விடியற்காலை இறைவனை வணங்க உகந்த காலம்.

இந்தக் கன்னிப் பெண்களின் இயல்புகண்ட மணிவாசகர், மகிழ்ந்து, அவர்கள் பாடியதாகத் திருவெம்பாவை (திரு+எம்+பாவை) என்னும் திருவாசகம் பாடிக் கொடுக்கிறார்.

திருவெம்பாவைப் பாடல்கள், அப்பெண்கள் நீராடும்போது, பாடுவதாக அமைந்திருக்கிறது. அதன் சுருக்கத்தை இங்கு பார்ப்போம்.

எம் பாவையே! வீதியிலே, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியைப் பாடிக்கொண்டே வருகிறோம். அது கேட்டும் உனது துயில் நீங்கவில்லையே. புரண்டு புரண்டு படுக்கிறாய். ஒன்றுக்கும் உதவாத இதுதானா உமது பண்பாடு என்கிறார்கள்.

இராப் பகலாய் நாம் பேசும்போது, எமது பாசமெல்லாம் பரஞ்சோதிக்கு என்று பெருமை பேசுவாய்.

என் அத்தன், ஆனந்தன், அமுதன் என்று தேனொழுகப் பேசுவாய். இன்னும் பொழுது விடிந்தது தெரியவில்லையோ? காலம் வீணாகக் கழிகின்றது உனக்காக நாம் உருக மாட்டோம்; நீயே வந்து உன் குறைகளைக் கூறுவாய். நானே வந்து உங்களை எழுப்புவேன் என நேற்றுக் கூறினாய்; இன்று மாறிவிட்டாய்!

விடியலை உணர்த்திக் கோழி முதலிற் கூவுகிறது; பின்னர் குருவிகள் கீச்சொலி எழுப்புகின்றன. கோயில் மணி அடிக்கிறது. சங்கு ஒலிக்கிறது. இவை ஒன்றையும் உணர வில்லையா நீ?

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இறைவனைப் போன்ற அடியாரையே கணவராக நாம் விரும்புவோம்; அவர்க்கே பணிபுரிவோம். எமக்கு குறையொன்றும் வராமல் சிவன் நம்மைக் காப்பார்.

இறைவனைப் பாடி, நீராடி நம்மைப் பீடித்திருக்கும் மலங்களைக் கழுவுவோம். சிவபெருமானே! உன் கையிற் பிள்ளையாக நான் இருந்து, பணிசெய்து உனக்கே அடைக்கலமாக இருக்கிறேன். என்னை வேறு எவருக்கும் பணிசெய்ய விட்டுவிடாதே. இப்படி எனக்கு வரங் கொடுப்பாயாக. அவ்வாறு நீ செய்துவிட்டால், சூரியன் எத்திசையிலிருந்து உதித்தாலும் எமக்குக் கவலையில்லை!

இவ்வாறெல்லாம் சிவனை வணங்கிப் போற்றி போற்றி எனச் சொல்லிக்கொண்டு நீராடுவதை எம் பாவையே! மறந்துவிடாதே.

இப்படிச் சமூக மக்களுக்காகவே திருவெம்பாவையும்; தொடர்ந்து திரு அம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருஉந்தியார், திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூசல் முதலிய பாடல்களைத் தில்லையிலுள்ள மகளிர் பாடுவதற்காக அருளிச் செய்கிறார் மாணிக்கவாசகர்.

இவ்வாறு மெய்ஞ்ஞான வாசகமாகிய திருவாசகத்தை வாதவூரர் பாட, சிவபெருமானே ஏட்டில் எழுதினார் என்பது புராண வரலாறு.

இந்தத் திருவாசகத்திலே, முக்கியமாக விளங்கும் திருவெம்பாவைப் பாடலின் இனிமையினால் உளம் நெகிழ்ந்த சிவபெருமான் - தமது இடப்பாகத்தில் உறைகின்ற உமாதேவி பங்கினரான சிவபெருமான், "பாவை பாடிய வாயால் கோவை பாடுதல் வேண்டும்" என்று மாணிக்கவாசகரிடம் கேட்கிறார்.

அங்கவர் உரைத்த வெல்லாம் அம்பலத் தாடும் ஐய
செங்கையில் ஏடுவாங்கித் தெளிவுற வரைந்த பின்னர்ப்
பொங்கிய அருளினாரும் புகன்றிடர் அகலத் தையல்
பங்கினர் தம்மைக் கோவை பாடுதல் வேண்டும் என்றார்.

(திருவாத. புராணம்)

சிவபெருமான், தம்மைத் திருவெம்பாவை பாடியதன்மூலம் மகிழ்வித்த தன்மைபோலத் திருக்கோவை பாடி மகிழ்விக்கும்படி வேண்டியருளுகின்றார்.

இனிமேல், திருக்கோவையார் பாடல்கள் சிலவற்றை ஆராய்வோம். திருக்கோவையார் பாடல்கள், அகப் பொருட் பாடல்களாக,

"மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர் வேலவன் கண்ணுற்றது"

என கதிர்வேலவனைக் காப்பியத் தலைவனாக வைத்துப் பாடப்பெற்றவையாகும் என்பதை நாம் அறிந்து கொள்வோமாக.

பாடல்:

"பாயும் விடையரன், தில்லையன்னான், படைக் கண்ணிமைக்கும்
தோயும் நிலத்தடி, தூமலர்வாடும், துயரமெய்தி
ஆயும் மனனே! அணங்கல்லவள், அம்மா முலை சுமந்து
தேயும் மருங்குல், பெரும் பணைத் தோளிச் சிறுநுதலே"

தில்லையில் தான் கண்டவள் பெண்தான்; அணங்கல்லள், ஏனென்றால், அவள் கண்கள் இமைக்கின்றன; அடி நிலத்தில் படிகின்றது; மாலை மலர் வாடியிருக்கின்றது எனத் தெளிவு பெறுகிறான் வேலவன்.

இப்பாடல், நளவெண்பாவில் நளனையும் தேவர்களையும் பிரித்தறியும் புகழேந்திப் புலவரின், "கண்ணிமைத்தலால், அடிகள் காசினியில் தோய்தலால், வண்ண மலர்மாலை வாடுதலால்...." என்ற பாடல் அடிகளை ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது.

இனி, அவளது பேச்சைக் கேட்க வேண்டுமென விரும்புகிறார் வேலவன்.

அளவியை யார்க்கும் அறிவரியோன் தில்லையம்பலம் போல்
வளவிய வான் கொங்கை வாள் தடங்கண்ணுதல் மாமதியின்
பிளவியல் மின்னிடை பேரமைதோள், இது பெற்றியென்றால்
கிளவியை யன்றோ இனிக் கிள்ளையார் வாயிற் கேட்கின்றதே.

எனப் பூவுலகப் பெண்ணான இவளின் கிளிமொழியைக் காதாரக் கேட்க வேண்டியிருக்கின்றது என்கிறார். மேலும், எனது இருப்பிடம் மிகவும் அண்மையில்தான் இருக்கிறது. அஞ்சத் தேவையில்லை என வேலவன் கூறுவதாக அமைகிறது இப்பாடல்.

வருங்குன்றம் ஒன்றுரித்தோன் தில்லையம்பலவன் மலயத்து
இருங்குன்ற வாணர் இளங்கொடியே! இடர் எய்தல்! எம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்களபத் தொளிபாய நும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம் ஏய்க்கும் கனங்குழையே!

எமது மாளிகை வெளிச்சம் பட்டு நுமது கருமலை வெண்ணிறமாகிறது எனக் கூறிய வேலவன், எல்லாம் நன்மையாக அமையும் எனத் தலைவியிடங் கூறுமாறு அவளது பாங்கியிடம் கூறுகின்றார்.

மேலும் இதுபற்றித் தனது பாங்கனிடமும் வேலவன் கூறி இப்பாவையை நான் சேர்வதை யார் தடுக்க முடியும் என்கிறார்.

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலத்துளென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ? அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ?
இறைவா! தடவரைத் தோட்கு என்கொ லாம்புகுந்து எய்தியதே?

எனக் கவலைப்படுவதாக அமைகிறது இப்பாடல்.

இவ்வாறு எண்ணிப் பின் தெளிவுபெற்ற தலைவனும் தலைவியும் ஒன்று சேர்வதாக ஒரு பாடல் அமைகிறது.

காகத்து இருகண்ணிற்கு ஒன்றே மணிகலந்தாங்கு இருள்
ஆகத்து ளோர்உயிர் கண்டனம் யாம்இன்று யாவையுமாம்
ஏகத் தொருவன் இரும்பொழில் அம்பலவன் மலையில்
தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வரும் இன்பத் துன்பங்களே.

என இருவரது உயிரும் உடலும் ஒன்றாயின எனக் காட்டும் பாடல் நயந்து இன்புறத் தக்கது.

இத்திருமணத்தில் கலந்துகொண்ட எல்லோருக்கும் தில்லைச் சிற்றம்பலவனின் திருவருள் கிடைத்து நற்கதி பெறுவாராக எனப் பாணன் மங்கல வாழ்த்துப் பாடுகின்றான்.

இவ்வாறாகத் திருவெம்பாவை உட்படத் திருவாசகமும், திருக்கோவையாரும் மாணிக்க வாசகர் பாடியருள, அவற்றை வெவ்வேறாகக் காப்புச் செய்த சிவபெருமான், மாணிக்கவாசகர் பாடத் தான் எழுதியதாகக் கையொப்பம் இட்டுக் கொடுத்து மறைகிறார். பாடல்களைத் தில்லை யம்பலக் கோயிற் படியில் கண்டெடுத்த தில்லைவாழ் அந்தணர்கள், அதிசயித்து, வாதவூரரிடம் எடுத்துச் செல்கிறார்கள்.

மாணிக்கவாசகர், தில்லையம்பலத்தானின் திருவடியில் இரண்டறக் கலக்கும் தருணம் வந்து அமைகிறது.

திருவாசகம், திருக்கோவையார் இரண்டினதும் பொருள் கூறியருள வேண்டும் என மெய்சிலிர்த்து வேண்டி நின்ற அந்தணர்களை, வாருங்கள்! பொருள் சொல்கிறேன் எனக் கூறி அழைத்துச் சென்ற மாணிக்கவாசகப் பெருமான், கோயிலின் உள்ளே முன்னேறிச் சென்று, இவரே இப்பாடல்களின் பொருள் எனக்கூறிக்கொண்டு மேலும் உள்ளே சென்றவர் திரும்பி வரவேயில்லை.

திருச்சதகம் முதலாகச் சிறந்த தமிழ் அறுநூறும்
விரித்த அகப்பொருட் கோவை விளங்க ஒரு நானூறும்
உரைத்தனர் பின் முடித்த விடத்து "உயர் வாதவூரன் மொழி
தரித் தெழுதும் அம்பலவன் எழுத்தென்று" சாற்றினார்.

(திருவாத. புராணம்)

நின்ற புகழ்ப் புலியூரர் நேயமுடன் புடைசூழச்
சென்ற ருளுக் கிடமான செம்பொனின் அம்பலமெய்தி
"ஒன்றியஇத் தமிழ் மாலைப் பொருள் இவர்" என்றுரை செய்து
மன்றதனில் கடிதேகி மறைந்தனர் அங்கு அவர்காண.

(திருவாத புராணம்)

இங்கே, "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என்ற தலைப்பில் திருவாசகத் தில் திருவெம்பாவைப் பாடல்களின் பொருளையும் திருக்கோவைப் பாடல்களின் பொருளையும் மிகவும் சுருக்கமாகக் காட்டினோம். விரிவாகப் படித்து மாணவ உலகம் பயன்பெறுவாராக!.

திருச்சிற்றம்பலம்.

## ஆன்மீகச் சிந்தனை

நிலையற்ற வாழ்வில் நிலையானதைப் பெறவேண்டுமானால் இறைவன் திருவடிகளைப் பற்ற வேண்டும். இறைவனைத் தவிர வேறு புகல் இல்லாதவர்களுக்கு இறைவன் கிட்டுகிறான். அனைத்தும் இறைவன் திருவருளால்த்தான் நடைபெறுகிறது என்று நினைப்பது பண்பட்ட உள்ளத்தின் அடையாளமாகும். இத்தகைய மனநிலையை ஒருவன் சரணாகதியால் பெறும்போது, அவன் வாழ்க்கையில் அடைய வேண்டியது அவ்வளவையும் அடைந்து விட்டான். நம்மை இறைவனிடம் அடைக்கலப் பொருளாக ஒப்படைத்து விடுவது சரணாகதி.

# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ!

(தொடர்ச்சி...

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

வள்ளிநாயகியாரை ஆட்கொண்டதன் சின்னமாய் வெட்சி மாலையைத் தரித்தருளிய முடியினையுடைய முருகப்பெருமான் ஒப்பற்ற திருத்தணிகைக் கோயிலினுள்ளே போக மூர்த்தியாய் இச்செகத்து உயிர்கள் யாவும் உய்வுபெற வீற்றிருந்தருளினார். அந்த வேளையில் வள்ளிநாயகியார், கந்தவேள் பாதம் பணிந்து, கைதொழுது, ஆன்மநாயகரே பெருமை பொருந்திய இம்மலையின் சிறப்பியல்புகளைக் கூறியருளும் என வேண்ட, எம்பெருமான் அம்மலையின் பெருமைகளையெல்லாம் கூறி, இம்மலையைத் தொழுவார் வினையெல்லாம் நீங்கும். நமது சந்நிதியில் வந்து வணங்குவோர் கந்தப் பதவியைப் பெற்று வாழ்வார்கள். இங்கு ஓர் தருமஞ் செய்தால் பலவாய் ஓங்கும். இம்மலையில் அற்புதங்கள் அநந்த கோடியுண்டு எனக் கூறினார்.

அம்மையார் இச்சிறப்புக்களையெல்லாம் கேட்டு, தேவரீரது திருவருளினாலே அறிந்து தமியேன் உய்திபெற்றேன் என்றருளினார். பின்பு கந்தப்பெருமான் லிங்கம் அமைத்து உலகம் உய்யுமுகமாகச் சிவபூசை செய்தருளினார். திருத்தணிகையில் சில காலம் வள்ளிநாயகியரோடு அமர்ந்து, பின்பு விமானம் ஒன்றில் கந்தகிரிக்கு உலகெலாம் வணங்கச் சென்றருளினார். சுவாமியும் வள்ளியம்மையாரும் அழகிய பொன்னாலான ஆலயத்திற்குள்ளே தெய்வயானை அம்மையார் இனிது வாழ்கின்ற கோயிலுட் பிரவேசித்தருளினார். வேதக் காட்சிக்கு எட்டாத ஆறுமுகப் பெருமானது வருகையை தெய்வயானையம்மையார் கண்டு, எழுந்து எதிர்வந்து வந்தனைபுரிய, அக்கற்புக்கு அணியை தமது திருக்கரங்களால் எடுத்து, தழுவி தனிமையின் துயரந் தீர்த்தருளினார். அச்சமயத்தில் வள்ளிநாயகியார் அமரர்கோன் மகளாகிய பொற்பாவை யின் பூங்கழல் வணக்கஞ் செய்ய தெய்வநாயகியார், விரைந்து எடுத்து வள்ளிநாயகியாரைத் தழுவி இன்பசாகரமான இவ்விடத்தில் யான் ஒருத்தியாய் இன்பமுற்றிருந்தேனுக்கு இன்று ஓர் பாங்கி வந்தது நன்றேயாம் என உவகையுற்றார். ஆத்ம நாயகன் சர்வலோக நாயகனாதலை அறிந்து வைத்தும், தாம் இன்புறுவதுபோல மற்றையோரணைந்து இன்புறுவதைப் பொறாத வருளர். அந்நிலை கடந்து, கற்பின் பரிபூரணநிலை முற்றுப்பெற்று மறுவில் கற்பின் வாணுதலாய்த் தம் நாயகன், "ஊருணியுற்றவர்க்கு ஊரன் மற்றியாவர்க்கும் ஊதியமே" என்று கண்டு, தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற முறையில், பாங்கி வந்துற்ற வாறு நன்றெனப் பரிவு கூர்ந்தார்.

மண ஒழுக்கம் களவு, கற்பு என இரண்டாகப் பகுக்கப் பெற்றுள்ளது. முருகப் பெருமான் சூரனை வெற்றிகொண்டு தேவர்களைச் சிறைமீட்டு, இந்திரனுக்கு சுவர்க்க போக பாக்கியத்தை அளித்ததற்கு கைம்மாறாக மகள் தெய்வயானையைத் திருமணஞ் செய்தருளு மாறு வேண்ட, எம்பெருமானும் நீ அருளியபடியே அவளைத் திருமணஞ் செய்வோம் என அருளிச் செய்கின்றார். திருப்பரங்குன்றத்திலே விசுவகன்மன் என்ற தேவதச்சன் திருக்கல்யாண மண்டபம் அமைத்து, நடுவிலே ஆசனமும் பொன்னாலும் நவரத்தினங்களாலும் இழைத்து, சோலை, வாவி, சுனை எல்லாமே அமைத்தான். பூவுலக அரசர்கள், தேவர்கள், முனிவர்கள் மற்றும் எல்லா இடங்களிலுள்ளோர்கட்கும் தூதுவர்களை அனுப்பி சுப்பிரமணியப் பெருமானின்

திருமணம் நாளை நிகழ இருக்கின்றது என்று சொல்லி, திருமண வைபவத்தைக் கண்டுகளிக்க எல்லோரும் வருகிறார்கள்.

கையிலார் கைகள் பெற்றும் காலிலார் கால்கள் பெற்றும்
மொய்யிலார் மொய்கள் பெற்றும் மூங்கைகள் மொழியைப் பெற்றும்
மையல்சேர் குருடரானோர் வாள்விழி பெற்றும் சென்றார்
ஐயன்மேல் உள்ளம் வைத்தார்க்கு அனைய்தோ அரிதுமாதோ.

திருக்கல்யாணத்துக்காக வருகின்றவர்கள் அவயவங்களை இழந்தோர் அவற்றைப் பெற்றும், ஊமைகள், குருடர்கள், வலிமை இல்லாதோர் தங்கள் குறைகள் தீர்ந்து எம்பெருமான் மேல் பேரன்பு வைத்தவர்களுக்கு இதுவா அரியது என்று சொல்லும் அளவுக்குத் திருவருள் பெருகுகின்றது.

தேவாதி தேவனை திருமணச் சாலைக்கு எழுந்தருளுமாறு இந்திரன், பிரமா, விஷ்ணு முனிவர்கள் தேவர்கள் வேண்ட, மயில்வாகனத்தின்மீது இவர்ந்து புறப்படுகிறார். வீரவாகு முதலிய வீரர்கள், பூதர்கள், தேவர்கள் எல்லோரும் துதிக்கின்றார்கள். தேவ கன்னியர்கள் பாடி ஆடுகின்றார்கள். சிவனும் உமையும் பூதகணம் புடைசூழ விமானத்தில் எழுந்தருளுகின்றனர். அம்மையையும், அப்பனையும் கண்டு களிப்புறுகிறார் கந்தசுவாமி. மங்கையை மணச் சாலைக்கு அழைத்து வருகிறான் இந்திரன். தேவர்கள், முனிவர்கள். "அன்னையே வாழ்க" என அடிதொழுகிறார்கள். மணமக்களை உமாதேவியார் உயர்ந்த இரத்தின சிங்காசனத்தின்மீது ஏற்றி வைக்கின்றார். இந்திரன் உள்ளம் குளிர்ந்து மது உண்ட வண்டுபோல் மகிழ்ந்து வணங்கி, திருவடியைப் புனித நீராட்டி, சந்தனக் குழம்பை ஊட்டி, கந்த மலரைச் சூட்டி, அகிற்புகையைக் காட்டி, ஆராதனை செய்து, தீப தூபங்களை ஏற்றிப் பூசனை புரிகின்றான். அறுமுகப் பெருமானுடைய திருக்கரத்திலே அருமை மகளாம் தேவசேனையின் திருக்கரத்தை வைத்து, "தமியேன் இவளை உமக்குத் திருமணஞ் செய்து தந்தேன்" என்று வேத மந்திரத்தோடு நீரை விடுத்து தத்தம் செய்கிறான்.

மருத்துவன் மாமறை மந்திர நீரால்
ஒருத்தி பொருட்டினில் ஒண்புனல் உய்ப்பக்
கருத்திடை ஏற்றனன்ால் கழல் சேர்ந்தார்க்கு
அருத்திகொள் முத்தியும் ஆக்கமும் ஈவோன்.

முருகப்பெருமான் அதனை ஏற்று அருள்கிறார். பிரமதேவனிடம் திருமங்கல நாணை முருகவேள் தன் திருக்கரத்தினால் வாங்கி தெய்வானையின் திருக்கழுத்தில் அணிகிறார். திருமுடியில் நறுமலர் மாலையும் சூட்டுகின்றார். அம்மையாருடன் சிவாக்கினியை வலஞ்செய்து, அவருடைய பாதத்தை அம்மியிற் தூக்கி வைத்து அருந்ததி தரிசனமும் காட்டி அருள்கின்றார். திருமணச் சடங்குகள் நிறைவேறியதுடன் எம்பெருமான் அம்மையாரோடு, தாய் தந்தையரை மும்முறை வலம்வந்து வணங்குகிறார். மகனையும் மருமகளையும் அன்போடு எடுத்தணைத்து அருள் செய்து, "உமக்கு எமது முதன்மைப் பதம் தந்தோம் என்று அருள்கின்றார்கள். முருகப்பெருமானையும், தெய்வயானையம்மையாரையும் வழிபாடு செய்து எல்லோரும் தமது இருப்பிடம் செல்கின்றார்கள். இது கற்புமணம்.

திருமணமாவதற்கு முன் காதல்பூண்டு ஒழுகுவது களவொழுக்கம். திருமணம் ஆன பின்னர் இன்பவாழ்க்கை நடாத்துவது கற்பொழுக்கம். இந்த இரண்டு ஒழுக்கத்தையும்

சண்முகன் இரண்டு தேவியர்பால் காட்டினான். தேவயானை கற்புமணத்தால் பெற்ற பெருமாட்டி. வள்ளி எம்பிராட்டி களவு மணத்தால் பெற்றதேவி. கிரியாசக்தி தெய்வயானையம்மையார். இச்சா சக்தி வள்ளிநாயகி. ஞான சக்தி வேலாயுதம். ஆணும் பெண்ணுமாய் உயிர்கள் காதலாற் கூடிக்களித்து வாழ வேண்டும் என்ற பெருங்கருணையினால் இறைப்பொருள் தன்னுள்ளே ஆணும் பெண்ணுமாகிய இருவேறு தன்மைகளை அமைத்துக்கொண்டு உலகத்தை நடாத்துகிறது.

சுவாமி, பொன்னாலும், இரத்தினங்களாலும் ஆன ஆசனத்தின்மீது துணைவியர் இருவரோடும், ஆன்மாக்கள்மீது வைத்த கருணையோடு வீற்றிருந்தருளினார். அந்த நேரத்தில் தேவசேனை பெருமானை நோக்கி வள்ளி நாயகியார் இங்குவந்த வரலாற்றைக் கூறுமாறு கேட்டார். பெருந்தகையாகிய சுப்பிரமணியப்பெருமான் நீவிர் இருவரும் திருமாலினிடத்து தோன்றினீர். எம்மையடையும்படி தவஞ் செய்தீர்கள். உங்கள் தவத்திற்கு மகிழ்ந்து உங்களை யாம் அன்போடணைவோம். விண்ணிலும் மண்ணிலும் தோன்றுங்கள் என உரைத்தோம். அதன்படி இந்திரன் மகளாய் வளர்ந்த உன்னை யாம் அன்போடு திருக்கல்யாணம் செய்தோம். பின்பு வள்ளியம்மையாரை பல்மாயா லீலைகள் செய்து திருமணம் செய்தோம். தேவசேனை நன்று எனக்கூறி எம்பெருமானைப் பிரார்த்தித்தார். “முற்பிறவியிலும் உமக்குத் தங்கையாகி, இப்பிறவியிலும் தங்கையாக அமைந்து உம்மைச் சரணடைந்து உய்வு பெற்றேன். அடியேனைக் காத்தருள்க” என வள்ளிநாயகியார் பிரார்த்தித்தார். தேவசேனை தங்கையை எடுத்துத் தழுவி இன்று உன்னைத் துணையாய்ப் பெற்றேன் என மகிழ்ந்தார். இந்திரன் அருளும் மாதும், எயினர்தம் மாதும் மலரும், மணமும் போல் ஒருமையுற்று இருவரும் ஒருவராய் இருந்தார்கள். சரவண தடாகத்தில் திருவவதாரஞ் செய்த ஞான நாயகராகிய கிருபா சமுத்திரத்தைப் போற்றி அவர் வழியில் ஒழுகுவாராயினர். அவ்விருவரும் வழிபாடு செய்து துதிக்க வேற்படையைத் தாங்கிய சுப்பிரமணியப் பெருமான் அவர்களுக்கு நடுவிலே சக்தி சமேதரராக வீற்றிருந்து, புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேன்மைத் தாகும் நன்னெறிக்கண் ஒழுகச் செய்து, மாசறு காட்சியாகிய மெய்யுணர்வை அருள் செய்து, தமக்கு அடியவனாக்கி, இருவினை நீக்கி, ஆட்கொண்டருளும் பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்களைப் போற்றி நற்கதியடைவோமாக!

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறு செய்தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடியா ரெல்லாம். (தொடரும்...

## ஆன்மீகச் சிந்தனை

தீய எண்ணங்களும் - தீய வாழ்க்கையும் ஒருநாளும் சுகத்தைத் தரமாட்டாது. என்னிடம் பணம் இருக்கிறது, என்னிடம் பலம் இருக்கிறது என்று சொல்லி கெட்ட செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு இறைவன் ஒருபோதும் கருணை காட்டமாட்டார். நாம் அவர்களிடம் காணும் வெளித்தோற்றத்துக்கு அவர்கள் சுகமாக இருப்பதுபோல் தோன்றலாம். ஆனால் அவர்களுக்கு உடல் நலம் இராது. உள்ளே அமைதியிராது, வாழ்க்கையில் வசதிகள் கிடைக்கும்போது இயற்கையை மதித்து மக்களை மதித்து வாழ்ந்தால் அந்த வசதிகள்மூலம் நலம் பெருகும். இல்லையென்றால் துன்பத்துக்கே வழி செய்யும்.

# செழுமறை முனிவரும் மூவரும்

— திரு முருகவேள் பரமநாதன் அவர்கள் —

செழுமறை முனிவரோடு - திருவாதவூரர் என்பதை இணைத்தாற் திருவாதவூரச் செழுமறை முனிவர் என்றமையும். இவர்தான் மாணிக்கவாசகர் சுவாமிகள். இவர் பாடியருளியவை திருவாசகம், திருக்கோவையார் என்பன. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், திருநாவலூரர் மூவர் என அழைக்கப்பட்டனர். மூவரும், திருவாதவூரரும் நால்வர் என அழைக்கப்பட்டனர். நால்வர் வழி நம்ம வழி. நாலுபேர் சொன்னபடி நட என ஆன்றோர் சொன்ன பாதை. ஊரிலே நாலு பெரியவர்கள் சொன்னபடி நடப்பது ஒருமுறை. உலகப் பரப்பில் நாலு மகான்கள் சொன்னபடி நடப்பது இன்னோர்வழி. தேவார முதலிகளும் செழுமறை முனிவரும் காட்டிய செந்நெறியில் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதே நம் சைவசமய நெறி. இப்படியமைந்தவர்களின் மேதகு பக்குவத்தால் வெளியான அறிவுநூற்றொகுதி பற்றி ஔவையார் சொன்ன பாடல் இது.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென்று ணர்.

-நல்வழி 40.

திருக்குறளும், நான்கு வேதங்களின் முடிபான உபநிடதங்களும், சமயகுரவரான அப்பர், சுந்தரர், சம்பந்தர் பாடிய தேவாரமும், திருவாதவூர்ச் செழுமறை முனிவரான மணிமொழியார் தந்த திருக்கோவையார் திருவாசகமும், திருமூல நாயனார் அருளிய திருமந்திரமும் ஒரு பொருளைக் குறித்து வருவனவாம். தேவர், திருவள்ளுவர் முனி மாணிக்கவாசகர் எல்லாப் பற்றையும் முனிந்தவர். வெறுத்தவர் முனிமொழியும் கோவை திருவாசகமும் என்று கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும். மறைமுடிபு என்பதற்கு வியாசர் தந்த பிரம சூத்திரமெனப் பொருள் கொள்வோரும் உண்டு. இந்த மூவர் தமிழ் பற்றியும் திருவாசகம் பற்றியும் பட்டினத்தடிகள் பார்வையில் எழுந்த வாக்கு இஃது.

வித்தகப் பாடல் முத்திறத்து அடியரும்
திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவம் மதித்தருளிய தேவரும்

-திருவிடை மருதூர் மும்மணிக்கோவை
-98 இணைக்குறளாசிரியப்பா 30-33

வியக்கத்தக்க தமிழ்ப்பாடல்களைப் பாடிய ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் முதலான மூவகையினரும், திருத்தமான அன்புடைய திருப்பெருந்துறையில் இறையருள் பெற்ற மாணிக்கவாசகரும், நிலையற்ற செல்வத்தை அவமதித்திருந்த- இறைவன் திருவடியில் மனம் வைத்திருந்த சிவவாக்கியரும்- மூவர் தமிழைத் தேவாரம் என்று பாடியது ஏகாம்பர நாதர் உலா. அவைமுன்னே வெவ்வேறு திருநாமங்களால் அழைக்கப்பட்டன. சம்பந்தர் அருளியவை திருக்கடைக்காப்பு. அப்பர் பாடல்கள் தேவாரம். சுந்தரர் பாடியவை திருப்பாட்டு.

இம்மூன்றும் பிற்காலத்திற் தேவாரம் எனப் பெயர்பெற்றன. தே+ஆரம்: தேவாரம் என்றாயிற்று. இறைவன் புகழ்பாடும் பாமாலை. மற்றது பூமாலை. இதைப் பாவாரம் என்றும் இடைக்காலத்தவர் கையாண்டனர். வாசகம்- சொற்கள். (திரு) வாசகம்- சொன்மாலை. திருவாய்மொழி முதலிய பிரபந்தங்கள் வாசகம் என அழைக்கப்பட்டன. இறைவெளிப்பாடான மறைமொழியே திருவாசகம். மணி மணிகளாய செந்தமிழ்ச் சொற்களால் இயன்ற திருப்பாடல்கள் இவை. வாதவூரடிகளின் இன்னோர் இலக்கியம் திருக்கோவையார். இதன் பெருமையைக் குமரகுருபரர் வாக்கிற் காண்போம்.

பைந் தமிழ்நவின்ற செந்நாப்புலவன்
ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருள் எனச் சூட்டிய ஒரு பெருஞ் செல்வ

-சிதம்பர மும்மணிக்கோவை- 8-10

பசியதமிழில் வல்ல செந்நாப் புலவனான மாணிக்கவாசகர் ஐந்திணை உறுப்புக்களால்- நான்கு வகைப் பொருளாயும் தரும் அகப்பொருள் கொண்ட ஞான நூலான திருக்கோவை யாருக்குப் பொருளாக விளங்குபவன் எனச் சுட்டப்பட்ட பெருஞ் செல்வனே. திருவாசகம் 656 பாடல்களால் இயன்றது. சில பதிப்புகளில் இருபாடல்கள் கூட்டப்பட்டுள்ளன. திருக்கோவை நானூறு செய்யுட்கள். தேவாரம் மொத்தம் 103000 இன்று அடங்கன் முறையில் உள்ளன. 8250 பாடல்கள் மட்டுமே. தேவாரம் ஏழு திருமுறைகள். எட்டாந் திருமுறை திருவாசகம், திருக் கோவையார் என்பனவாம்.

இந்த மொழி ஊடகங்கள் இல்லாதுபோனாற் சைவசமயிகள் குடிபோயிருப்பர். பன்னிரு திருமுறைகளும், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் சைவ ஞானக் கருவூலங்களாகும். இதை நாவேந்தர் “சாத்திரமும் தோத்திரமும் ஆனார் தாமே” எனப் பாடியுள்ளார். இனித் தேவார திருவாசகம் பற்றி ஒப்பிட்டுப் பார்ப்போம்.

இந்நால்வரும் சிவனையே முழுமுதற் பொருளாக வழிபடுபவர்கள், புறந்தொழாதவர்கள். பரசமய, புறச்சமய கோளரிகள். சங்கரன்- (சம்+கரன்) நல்லதைச் செய்பவன். சம்பு- ஆனந் தத்தைக் கொடுப்பவன். சிவன்- மங்கலமானவன். சிவன் என்னும் சொல்லுக்குப் பேரின்பத்திற்குக் காரணன், தூய தன்மையுள்ளவன் என்றும் பொருள் காண்கின்றனர். சிவதா- இறைவன் பெயர். நன்மையைச் செய்பவனே என்பதே இதன் உட்பொருள். மாமறையான திருமந்திரம் தந்த மூலர் அன்பே சிவம் என்றார். சிவசிவ என்கிலர் தீவினையாளர் என்றார். எல்லாம் சிவமயமே என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு. நம்மவர் கடிதம் எழுதுகையிற் பிள்ளையார் சுழி, சிவமயம் என்றெழுதுவர். சிவமயம் என்று குழந்தைகட்குப் பெயர் சூட்டுவர். சிவசம்பந்த மானதே சைவம். சிவசம்பந்தம் உடையவர்கள் சைவசமயிகள். சம்பந்தம்- கலப்பு. எனவே இன்று சைவ பாரம்பரியங்கள் நம்மைவிட்டு நெகிழ்கின்றன. சாஸ்தாவும், ஆஞ்சநேயரும் மூலமூர்த்திகளாகும் காலம் இது. எனினும் சைவ சமயமும், சிவவழிபாடும் எம்மைவிட்டு அகலவில்லை. இதற்கு உதாரணபுருடர்களாய்த் திகழ்பவர்கள் நால்வரே. திருவாசகத்திலே சிவவழிபாடேயன்றி பிறதெய்வ வழிபாடே இல்லை. முருகன் தாதை குமரன் தாதை எனச் சிவன் பெருமை பேசப்படுகிறது. பாதிப் பதிகங்கள் தில்லையைப் பாடுகின்றன. விநாயக வணக்கம், முருக வணக்கம் இடம்பெறவில்லை. குட்டித் தெய்வங்களோ, சிறு தெய்வங்களோ

அங்கே இடம்பெறவே இல்லை. இ..்து ஒரு தனித்துவமான தகுதிப்பாடு. மூவர் பாடல்கள் சற்று வித்தியாசமானவை. கணபதியும் முருகனும் இறைவனோடு இணைக்கப்பட்டுப் பாடப்படு கின்றனர். முருகன் 47 இடங்களிலும், விநாயகர் 10 இடங்களிலும் பாடப்பெற்றுள்ளனர்.

கரியின் மாமுகம் உடைய கணபதி தாதை பல்பூதம்
திரிய இல்பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தரும் மூதூர்
சரியின் முன்கைநன் மாதர் சதிபட மாநட மாடி
உரிய நாமங்க ளேத்து மொலிபுனற் காழி நன்னகரே.

-4:96.3.

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலு முடையாரொருவர் தமர்தாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்சவருவது மில்லை.

-4:2.3.

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே யாட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையும் தேறேன்
எண்ணிலியுண் பெருவயிற்றன் கணபதி யொன்றறியான்
எம்பெருமா னிதுதகவோ இயம்பியருள் செய்யீர்
திண்ணென என்னுடல்விருத்தி தாரீரே யாகில்
திருமேனி வருந்தவே வளைகின்றே னாளைக்
கண்ணறையன் கொடும்பாட னென்னுரைக்க வேண்டா
கடல் நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

-7:47.9.

இவ்வண்ணம் முருகன் வரும் பாடல்களிற் சில வருமாறு:

தழைமயி லேறவன் தாதை யோதான்
மழைபொழி சடையவன் மன்னுகாதில்
குழையது இலங்கிய கோலமார்பின்
இழையவ னிராமன தீச்சரமே.

-1:115.3.

ஆரட்ட தேனும் இரந்துண் டகமக வன்றிரிந்து
வேரட்ட நிற்பித் திடுகின்ற தால்விரி நீர்ப்பரவைச்
சூரட்ட வேலவன் தாதையைச் சூழ்வய லாரதிகை
வீரட்டத் தானை விரும்பா வரும் பாவ வேதனையே.

-4:104.5.

திருவாதவூரர் போலவே மூவரும் சிவனை முருகன் தாதை. வேலன் தாதையெனப் பாடல்களிலே பாடியுள்ளனர்.

மணிவாசகப் பெருந்தகை பரதெய்வ வணக்கத்தை அங்கீகரிக்காமற் சுமார் பத்துக்கு மேற்பட்ட இடங்களிலே பாடியுள்ளார். மாதிரிக்கு ஒன்று தருகிறோம்.

பழுதில் தொல்புகழாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே.

-வாழாப்பத்து 10.

இக்கருத்தை அப்பர் பெருமானும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரும் இல்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சோர்வோ மல்லோஞ்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செற லொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்து ளோமே.

-6:98.5.

இப்படி மூவரையும் முனிவரையும் ஒப்பிடின் பிறதெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு போன்றவை நிராகரிக்கப்பட்டுள்ளமை வெளிப்படையாம். இவ்வண்ணம் இறுக்கமாய் இருந்தபடியாற்றான் பௌத்த சமண ஆதிக்கத்தினின்று சைவத்தை மீட்டு எடுத்தனர்.

நம் தாயகமாம் இலங்கையில் கிறீத்தவம் தலைதூக்கிய காலகட்டத்தில் போர்த்துக்கேய ஒல்லாந்தரைப் புறங்கண்டு சைவத்தை நிலைநாட்டியவர் (சைவ சமயோத்தணர்) நாவலர் பெருமான். சுமார் 600 சிவாலயங்கள் அழிக்கப்பட்டன. இன்றோ அதற்குப் பிரதி உபகாரமாகச் சைவ ஆலயங்களில் (வெளிநாடு) டிசம்பர் 25,31, ஜனவரி 1 கொண்டாடப்படுகிறது. விப்ரர்களின் போக்கு நூதன வருடப் பிறப்பை ஏற்று கைவிஷேசமும் வழங்குவர்.

அகத்துறைப் பாடல்களும் தேவார திருவாசகத்தில் இடம்பெறுகின்றன. நாயக நாயகி பாவத்தில் அமைந்தது திருக்கோவையார். சொல்வேந்தர் அப்பர் சுவாமிகளின் இரு அகத்துறைப் பாடல்களோடு இவ்வொப்பீட்டு ஆய்வை நிறைவு செய்கிறோம்.

நிலைப்பாடே நான்கண்ட தேடீ கேளாய்
நெருநலைநற் பகலிங்கோர் அடிகள் வந்து
கலைப் பாடுங் கண்மலரும் கலக்க நோக்கிக்
கலந்து பலியிடுவேன் எங்குங் காணேன்
சலப்பாடே இனிஒருநாட் காண்பேனாகில்
தன்னாகத் தென்னாக மொடுங்கும் வண்ணம்
உலைப்பாடே படத்தழுவிப் போக வொட்டேன்
ஒற்றியூர் உறைந்திங் கேதிரி வாரையே.

-6:45.8.

நிலைப்பாடு- நிட்சயம், நெருநல்- நேற்று, கலை- உடை, பலி- பிச்சை, சலப்பாடு- சந்தேகமில்லை, வந்தவர்- ஒற்றியூர்த் தியாகேசர், தலைவி- தோழிக்குச் சொல்லும் பாங்கில் அமைந்தது இப்பாடல்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள் அகன்றாள்
அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கைதலை வன்தாளே.
-6:25.7.

*பாவித்த நூல்கள்:*

1) பிள்ளையார் துதியும் ஔவையார் மதியும். தொகுப்பு: வீ. நல்லதம்பி
2) குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு - வர்த்தமானன் பதிப்பகம்.
3) பட்டினத்தார் பாடல் - வர்த்தமானன் பதிப்பகம். உரை: சு. மாணிக்கம் எம்.ஏ
4) தேவாரத் திருப்பதிகங்கள் - கங்கை புத்தகாலயம்.
5) திருவாசகம் கழக வெளியீடு. உரை: கா. சுப்பிரமணியம்.
6) தாயுமானார் பாடல் - மாணிக்கவாசகர் பதிப்பகம்
7) திருமந்திரம் - கங்கை புத்தகநிலையம்.

**ஆன்மீகச் சிந்தனை**


**நன்னடத்தை, பற்றற்ற வாழ்க்கை, ஆன்மிகச் சாதனைகள் ஆகியவற்றின்மூலம் நாம் இறையருளைப் பெறமுடியும். மற்றவர்களுக்கு நாம் அன்பை வழங்கினால், நாம் இறைவனின் அன்பைப் பெறலாம். மற்றவர்கள்மீது நாம் கருணை காட்டினால், நாம் இறைவனின் கருணையைப் பெறலாம். பிறரை நாம் மன்னித்தால் இறைவனிடம் நமக்கு மன்னிப்பு கிடைக்கும். பொய்யர்கள் இறைவனை அணுகமாட்டார்கள். அவர்களுக்கு இறைவன் புலப்பட மாட்டான். மாறாக, மெய்யடியார்களுக்கு இறைவன் நிச்சயம் புலப்படுவான். கொடிய துன்பங்களால் வாடி வருந்தும் நிலை ஏற்பட்டாலும், இறைவனை நினைப்பதை நாம் மறந்துவிடக் கூடாது; விட்டு விடக்கூடாது. அத்தகையவர்களுக்கு இறைவன் அருளால் வீடுபேறு கிடைக்கும்.**

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 21. பரமன் ரமணன்

வந்தவாசி பிரதேசத்திலிருந்து அண்ணல் ரமணனை நாடி ஆதிநாட்கள் தொட்டு இன்றுவரை வந்த பக்த மாமணிகளின் வரிசை மிக நீண்டது. கீரைப்பாட்டி, உத்தண்டி நயினாரிலிருந்து ஆரம்பித்து, தேசூரம்மா, மஸ்தான் சுவாமியுடன் தொடர்ந்து இன்றும் நீடிக்கிறது. வந்தவாசிக்கருகில் தெள்ளாரிலிருந்து பகவானின் பெரும் பக்தர்களான ஜெயராம முதலியார், வெங்கடேச முதலியார் சகோதரர்களும் பிறரும் ஒரு குழுவாக பகவான் காலத்தில் இருந்தே தவறாமல் வருவார்கள். 1946இல் இங்கு கொண்டாடிய, பகவானின் தங்கவிழா சமயத்தில் நிகழ்ந்த ஒரு வேடிக்கையான சம்பவத்தை குஞ்சுஸ்வாமி நினைவுக்குக் கொண்டு வந்தார். "ஹாலுக்கு வடக்கிலுள்ள இடத்தில், பெரிய பந்தல் அமைத்து, ஹாலை ஒட்டிய வராண்டாவில் இதற்காக சீமெண்ட் பூசி இருந்தார்கள். அனேக வித்வான்கள், பெரிய பெரிய மனிதர்கள் எல்லோரும் வந்தனர். கச்சேரிகள், சொற்பொழிவுகள் எல்லாம் நடந்தன.



தெள்ளார் குழுவினர் அனேக ரமண பக்திப் பாடல்களைப் பாடினார்கள். முக்கியமாக சிவப்பிரகாசம் பிள்ளையின் பாடல்கள் இடம்பெற்றன. அவற்றுள் "ரமண பாதமாலை" பாடும்பொழுது, "ரமணன் பாதம் வாழ்கவே" என்பதை "ரமணர் பாதம் வாழ்கவே" என்று மாற்றிப் பாடினார்கள். பகவான் ஒரு பிரதிபலிப்புமின்றி கேட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் கிளம்பும்போது பகவான், சற்று விளையாட்டாக "ரமணன்னா மரியாதைக் கொறவு போலெருக்காம்; அதான் ரமணர்னு பாடினா. சிவனைக் கூட சிவர், சிவர்னுதான் சொல்லணும் போலிருக்கு!" என்றது. தெள்ளார் குழு இன்றும் அப்பாட்டுக்களை "ரமணன்" என்றுதான் பாடுகிறார்கள். ரமணர் என்றல்ல என்பது சொல்லத் தேவையில்லை அல்லவா?"

ஒருநாள் நான் குஞ்சுஸ்வாமியை சந்தித்தபோது, அவர் ஒரு உயர்ந்த மனோபாவத்தில் இருந்தார். கண்களில் கண்ணீருடன் "நம் பகவான் தன்னிகரற்றது; இணையற்ற தனிச்சிகரம்" என்று சொல்லி, தொடர்ந்து சில நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கலானார். முருகனாரின் மாமனார் தண்டபாணி ஸ்வாமி, ஆச்ரமத்துக்கு அரிய தொண்டுகள் செய்திருக்கிறார். சிலகாலம் சர்வாதிகாரியாகவும் இருந்ததுண்டு. ஆயினும் அவருடைய கடைசி நாட்களில் கொஞ்சம் அதிருப்திகரமான சூழ்நிலையில் ஆச்ரமத்தை விட்டு நீங்கவேண்டி வந்தது. அவர் பகவானிடம் "நான் போகிறேன்" என்றார். பகவான் மௌனமாக இருந்தது. அவர் ஊருக்குப் போய்விட்டார். அங்கும் அவரால் அமைதியாக இருக்க முடியவில்லை. மூப்பு அவரைச் சூழ ஆரம்பித்திருந்தது. அவரிடமிருந்து ஒருநாள் ஆச்ரமத்துக்கு கடிதமொன்று வந்தது. அதில் தன் கஷ்டங்களையும், கவலைகளையும் கொட்டி எழுதிவிட்டு, பகவான் தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக்

கொண்டிருந்தார். இந்த வயோதிகரின் மனமார்ந்த, உருக்கமான முறையீடு ஹாலில் சிலருக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் பகவானின் மனம் இளகி உருகிவிட்டது. சிறிது பொறுத்து "நீ அவருக்கு ஆறுதலாக கடிதம் எழுது. அதில், குகை நமச்சிவாயரின் பாடலையும் எழுது" என்று விசுவநாத ஸ்வாமியிடம் சொல்லியது.

நல்லருணை நாதர் நமையுறுத்தல் நெஞ்சமே
கொல்லுதற்கோ பொல்லாக் குணம்போக்க - கல்லில்
மழுக்குவார் கூறைக்கு மாறுபட்டோ வண்ணான்
அழுக்குவாங் கைக்கே அவன்.

பதில் உடனே அனுப்பப்பட்டது.

(அருணாசலேசன் நமக்கு கஷ்டங்களை அளிப்பது நம்மைத் திருத்துவதற்கேயன்றி கொல்வதற்கல்ல. வண்ணான் கல்லில் துணிகளை அறைவது, வெறுப்பால் அல்ல, அவற்றை அழுக்கு நீக்கி வெளுக்கவல்லவா!)

மற்றொரு சமயம் குஞ்சுஸ்வாமி சொன்னது: பகவான் சமையலறையில் கீரையை உபயோகிக்கும் விதம் பொறுமை, சிக்கனம், சமையற்கலை எல்லாவற்றிலும் பாடமாக அமையும். கீரையைக் குவித்து வைத்திருப்பார்கள். அதிகாலை சமையலறைக்குப் போகும் பகவான் கீரை அரிவதற்கு சில வழிமுறைகளைப் பின்பற்றும். முதலில் அவற்றை மேல் பாகமான இலைகள், தண்டு, வேர் என மூன்று பாகங்களாகப் பிரிக்க வேண்டும். இலைகள் கறிக்கும், தண்டு சாம்பாரில் "தான்" ஆகவும் உபயோகிக்கப்படும். வேரை நன்றாக அனேக முறை அலசி, மண்போக சுத்தம் செய்து, இடித்து, சக்கை மாத்திரம் மிஞ்சும்வரை நன்றாகச் சாறு பிழிந்து அந்தச் சாறு ரசத்தில் சேர்க்கப்படும். இது வழக்கமாக பகவானது கீரை சமைக்கும் முறை. இதிலெல்லாம் வேலை மிக அதிகம். ஆனால் அனேகமாக பகவான் தானே அவற்றைச் செய்யும். இந்தக் கைப்பக்குவத்தின் ருசியை ஒரு தரம் அனுபவித்தறிந்தவர்கள் ஜன்மத்துக்கும் மறக்க மாட்டார்கள். ஆச்ரமத்தின் அந்தக்கால ரசத்தின் ருசிக்கு இணை மூவுலகிலும் இல்லையென்று பண்டைய அடியார்கள் சொல்வார்கள்.

ஒரு சமயம் நாங்கள் வேரையெல்லாம் மூட்டைகட்டி, பகவான் உலாவும்போது போகாத இடமாகப் பார்த்து, மண்ணில் குழிதோண்டி புதைத்து விட்டோம். ஆனால் அன்று பார்த்து பகவான் வழக்கத்திற்கு மாறாக தன் வழியைவிட்டு விலகி, இந்த இடம் வழியாக நடந்தது. புதிதாகத் தோண்டி மூடப்பட்ட இடமாதலால், பகவான் கைத்தடியை வைத்தவுடன் அழுந்தி, மண் விலகி, சில வேர்கள் வெளிப்பட்டன. விஷயத்தை ஊகித்த பகவான், அங்கேயே உட்கார்ந்து அத்தனை வேர்களையும் தானே தோண்டி எடுத்தது. சுத்தமாகும் வரை நன்றாகக் கழுவி, (சேறாகியிருந்ததால் சுத்தமாக அலம்ப வெகு நேரமாகி விட்டது.) அதன்பின் சமையலறைக்குச் சென்று அனேகமுறை இடித்து, ஒட்டச் சாறு பிழிந்து, அதையும் தானே ரசத்தில் கலந்த பின்னரே, தன் உலாவைத் தொடர்ந்தது. இவையனைத்தையும் சற்றும் கடுப்பின்றி, முகத்தில் புன்னகையுடன் செய்தது. சொல்ல முடியாத குற்ற உணர்வுடன் நாங்கள் இவையனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தோம். எங்களுக்கு எத்தனை நல்ல பாடம்! இதற்குப் பிறகு, சோம்பலினால் எதையாவது தவிர்க்க விரும்புவதையோ, எதையும் வீணாக்குவதையோ, என்றென்றும், ஏழேழு ஜென்மங்களுக்கும், நினைக்காதவாறு எங்கள் இதயங்களில் அவ்வளவு ஆழமாக முத்திரை பதிப்பித்து விட்டது பகவான்.

குஞ்சுஸ்வாமி மேலும் தொடர்ந்தார். "வைதீகம் குறித்து பகவானுடைய கருத்துக்கள் என்றைக்கும் அறிவுக்கு எட்டாதவை. பகவான் அதை ஆதரித்து சிபாரிசு செய்கிறதா, அல்லது ஏற்காமல் பரிகாசம் செய்கிறதா என்று திட்டவட்டமாகச் சொல்ல முடிவதில்லை. உதாரணமாக சில நிகழ்ச்சிகளைச் சொல்லலாம்.

"பகவான் கந்தாச்ரமத்தில் இருந்த சமயம் எச்சம்மா பகவானுக்கு தினம் உணவளிப்பதுடன், வைதீக பிராமண அதிதிகளை வீட்டுக்கு அழைத்துப் போய், பாரம்பரிய முறைப்படி பிக்ஷை செய்விப்பதுண்டு. ஒருமுறை நாராயண குருவின் சீடர்களான அச்யுதானந்த கிரியும், கோவிந்தானந்த கிரியும், காஞ்சிபுரத்திலிருந்து வந்திருந்தார்கள். ஊரில் சில நாட்கள் தங்கிவிட்டு, பகவானுடன் இருக்க விரும்பி வந்தார்கள். இருவரும் திடகாத்திரமாகவும், நிறமாக, களையாகவும், படித்தவர்களாகவும் இருந்ததால், பிராமணர்களென்று நினைத்து எச்சம்மா, தன் வீட்டில் பிக்ஷைக்கு வரும்படி அழைத்துவிட்டுப் போனாள். இரு தரப்பினரும் இதைப் பகவானிடம் தெரிவிக்கவில்லை.

அவர்கள் பிக்ஷைக்குப் போகவேண்டிய தினத்தில் பகவானிடம் இருவரும் வந்து தெரிவித்தனர். அவர்கள் பிராமணர்களல்ல என்பதை அறிந்தால் எச்சம்மா பிக்ஷையை ரத்து செய்யக்கூடும். அது அந்த சந்நியாசிகளுக்கு சங்கடமாக இருக்கும். பகவான் இருவரையும் பார்த்து புன்முறுவலுடன், "உங்களுக்கு பரிஷேசனம் செய்யத் தெரியாதா?" என்று கேட்டது. (பிராம்மணர் சாப்பிட இலைமுன் அமர்ந்ததும், முதலில் கையில் நீரை எடுத்து பரிமாறப்பட்ட இலையைச் சுற்றி மூன்று தடவை மந்திரம், ஜபித்துக் கொண்டே அன்னத்தை நிவேதனம் செய்வதுபோல விடுவது பரிசேஷனம்). கோவிந்தானந்தாவும், அச்யுதானந்தாவும் சட்டென குறிப்பைப் புரிந்து கொண்டனர். "தெரியும் பகவானே, வட இந்தியாவில் சந்நியாசிகள் சாப்பிடுமுன் பரிஷேசனம் செய்வதைப் பார்த்திருக்கிறோம் என்றனர். அன்று எச்சம்மாள் மனநிறைவுடன் பிக்ஷை அளித்தாள். சந்நியாசிகளின் "ரகசிய"த்தை, எச்சம்மாளிடம் கூட அவள் ஆயுள் காலத்தில் தெரிவிக்கவில்லை பகவான்.

ஒரு சமயம் நிறைய வெங்காயம் உபயோகித்து ஆச்ரமத்தில் சமையல் செய்திருந்தார்கள். மிகவும் மெலிதாக இருக்கும் வெங்காயத் தோள்கள் பகவான் நடக்கும் வழியெங்கும் பரவிப் பறந்துகொண்டிருந்தன. இதைக் கவனித்த பகவான், "அதையெல்லாம் ஓரிடத்தில் போட்டுப் புதைத்து விடுங்கள். சுவாமியின் ஆச்ரமத்தில் வெங்காயம் சாப்பிடுகிறார்கள் என்பதை ஆசார சீலர்கள் தாங்கமாட்டார்கள்" என்றது.

குஞ்சுஸ்வாமி தொடர்ந்தார்: 1938இல் வேத பாடசாலை துவங்கிய சமயம் கிருஷ்ண கனபாடிகள் உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார். அவர் மிகுந்த ஆசாரசீலர். ஆச்ரமத்தில் முதலில் பிராமணர்களுக்குப் பரிமாறிய பின்னரே மற்றவருக்கும் பகவானுக்கும் பரிமாறுவார்கள். இரண்டாவது சுற்று வரும்போது, ஏற்கனவே மற்றவர்களுக்கு (பிராமணரல்லாதவருக்கு) அளிக்கப்பட்டு விட்டதால் "சேஷம்" ஆகிவிடும். அதைச் சாப்பிடுவது சாஸ்திர சம்மதமல்ல என்று கருதிய கிருஷ்ண கனபாடிகள், இதைச் சற்று வருத்தத்துடன் தெரிவித்தார். உடனே பகவான் அவருக்கு சமையலறையிலேயே, எல்லோரும் சாப்பிடுமுன்னரே, பிரத்தியேகமாக பரிமாறிவிட வேண்டுமென்று அறிவித்தது. அத்துடன் நின்றுவிடாமல், தொடர்ந்து சில நாட்களுக்கு டைனிங் ஹாலில் (சாப்பாட்டு கூடம்) நுழைய முன்பே பகவான், "வேத பாடசாலை வாத்தியார் சாப்பிட்டாச்சா?" என்று விசாரித்துத் தெரிந்து கொண்ட பின்னரே நுழைந்தது.

தேசிய போராட்டத்தில் சிறைக்குள்ளாகி, வேலூர் சிறையிலிருந்து அப்போதுதான் விடுதலையாகி வந்திருந்த விசுவநாத சுவாமியின் சகோதரர் ஆச்ரமத்துக்கு வந்தார். அவருடைய பெற்றோர் ஆசார சீலர்கள். டைனிங் ஹாலில் அவர் பிராமணரல்லாதாருடன் சேர்ந்து சாப்பிட உட்கார்ந்தார். அங்கு சிலர் அவர் பிராமணர் பந்தியில்தான் உட்கார வேண்டுமென்று நினைவூட்டினர். அவர் உரத்த குரலில் "பகவான் சந்நிதியில் ஜாதிமத பேதங்கள் கிடையாது" என்றார். அவருடைய குரலிலிருந்து பகவான் இதை ஆமோதிக்குமென்று எதிர்பார்க்கிறார் என்று அனுமானிக்க முடிந்தது.

ஆனால் அவர் ஆச்சரியப்படும் வகையில் பகவான் எதிர்பாராதவிதமாக, கடுமையான குரலில், "ஓகோ! அவர் எல்லாத் தடைகளையும் கடந்து விட்டாரா என்ன? தன்னிஷ்டப்படி நடப்பதற்கு? வீட்டில் அவர் பிராமணரல்லாதாருடன் சாப்பிடுவாரா? இங்கு மாத்திரம் என்ன சமதர்மப் பிரகடனம்? வீட்டில் நடந்து கொள்வதுபோல் (இங்கும் இயற்கையாக) இருக்க வேண்டும். இயற்கையாக இருப்பதுதான் உயர்ந்த ஒழுக்கமும் அப்பியாசமும்" என்றது. பகவான் வைதீகத்தை ஆதரிக்கிறதா, சீர்திருத்தத்தை சிபாரிசு செய்கிறதா? யாராவது வகுத்தறிய முடியுமா?

(தொடரும்...

## தவறானால் திருந்தலாம்தானே!

என்ன மந்திரம் குசுகுசுக்கிறீர்கள்? என்று மெல்லப் பேசுபவர்களைக் கேட்கிறோம். அடுத்தவர்களுக்குத் தெரியாமல் கூடி ஆலோசிப்பதை மந்திராலோசனை என்கிறோம். தலையணை மந்திரம் என்கிறோம். இவையனைத்தும் ஒலி உரப்பினை உணர்த்தி நிற்கின்றன அல்லவா? ஆனால் ஆலயங்களில் மந்திரங்கள் அனைத்தும் ஒலிபெருக்கிமூலம் ஆலயத் தினுள்ளேகூட இல்லாது அக்கிராமம் முழுக்க ஒலிபரப்பப்படுகின்றன. இது சரியான செயலா?

அடுத்து, ஆலய தீபாராதனையின்போது தீபங்கள் இடது கையால் வாங்கப்பட்டு வலது கையால் அடுத்த தீபம் கொடுக்கப்படுகின்றது. இத்தனைக்கும் அந்தணச் சிவாசாரியர் களுக்குத் தட்டுப்பாடோ என்றால் இல்லை. இறுதியில் தட்சணை பெறுவதற்கு வரிசையாக வருகிறார்கள். இவர்கள் மேற்படி நிகழ்வுக்கு உதவமுடியுமல்லவா?

அடுத்து விநாயகர் அப்பளம், அம்பாள் மிக்ஷர், சிவா கர்ப்பூரம் என சகல பொருட் களையும் இறைவனது திருவுருவப் படத்துடன் வெளியிட்டு, அவை உபயோகம் முடிந்ததும் வீதியில் காலடிக்குக் கீழே மிதிபடுவதைக் காணமுடிகிறது. இதனையும் தவிர்க்க முடியும்.

அடுத்து திரைப்படம், நாடகம் போன்றவற்றில் (சைவ) இந்துமதக் கடவுள்கள் பூலோகம் வந்து என்னென்னவோ செய்ததாகக் காட்டப்படுகின்றன. ஏனைய மதக் கடவுள்கள் இவ்வாறு கேளிக்கைக்கு ஆளாக்கப்படுவதில்லையே. எமது மதப்/பெரியார்கள், சங்கங்கள் ஏன் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை?

மற்றும் கண்ணகியும் திரௌபதியும் கோபமுற்று எதிரிகளை அதாவது துஷ்டர்களை அழிக்கவே தலைவிரிகோலம் கொண்டார்கள். ஆண்டவன் அருள்வேண்டி ஆலயம் செல்லும் போது ஏன் தலைவிரிகோலம்; கறுப்பு ஆடை. இந்து மத கலாசாரம் வளர்ச்சியுற இவ்வாறான தவறுகள் திருத்தப்படலாம் அல்லவா?

~யூ.பி. ஆனந்தம்~

# ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானும் பணிகளும்

## ஒரு நோக்கு

– திரு நா. கணேசலிங்கநாதன் அவர்கள் –

நல்லைநகர் நாவலர் அவர்களை புலமையாளர்களும் புத்திஜீவிகளும் கற்றோரும் மற்றோரும் ஐந்தாம் குரவரெனப் போற்றுவர். இதனால் மக்களெல்லாரும் நாவலர் பெருமான் என அழைக்கலாயினர். இருள் நிறைந்த காலப்பகுதியில் பிறந்தமையால் அவதார புருடனாக எல்லோராலும் போற்றப்பட்டார். சிறுவயது முதல் சைவ சமயத்தில் நிறைந்த பற்றுடன் பரிபூரண நம்பிக்கையுடையவராக மிளிர்ந்தார். சமய எழுச்சியை முன்னெடுத்த உத்தமர். காலத்தால் ஆவணப்படுத்தப்பட்ட, மறைக்க முடியாத, மறுக்க முடியாத அரும்பெரும் தொண்டாற்றிய மகானாவார். தமிழ், சைவம் இரண்டையும் இரு கண்கள் எனப் போற்றிய உத்தம ஒழுக்கசீலர்.

நாவலர் பெருமானது தொண்டுகளை பல வகையில் நோக்கலாம். எழுத்தாளர், பிரசுரகர்த்தா, தமிழ் - சைவ நூல் வெளியிட்டாளர். எதுவித அச்சுப்பிழையில்லாது நூல் களை வெளியிட்டார். முதன் முதலில் அச்சு இயந்திரத்தை யாழ் மண்ணிற்கு கொண்டு வந்து சமய தமிழ் எழுச்சியை ஏற்படுத்திய பெருமகனாராவார்.

சைவப் பாரம்பரிய மரபைப் பேணிப் பாதுகாத்த பெருந்தகையாளர். கற்றோரும் மற்றோரும் இலகுவில் புரியக்கூடிய மாதிரி புராணங்களை வசன நடையில் தந்த வல்லாளர். எனவே வசனநடை கைவந்த வல்லாளர் - வள்ளலார் எனவும் போற்றப்பட்டார். கற்றோருக்கும் கல்லாத பாமர மக்களுக்கும் இலகுவில் புரியக்கூடிய பொருள் தெளிவாக விளங்கியறியக் கூடிய நடையாக இருந்ததெனப் போற்றினார்கள். நாவலர் அவர்களால் எழுதப்பட்ட வசன நூற் புராணங்கள்:

1) திருவிளையாடற் புராண வசனம்.
2) பெரியபுராண வசனம்.
3) பெரியபுராண சூசனம் முதலானவையாகும்.

சிவபெருமானை முழுமுதற் பொருளாக வரித்துக் கொண்டவர். அவர் எழுதிய முதலாம் சைவ வினாவிடையில் உலகுக்கு கர்த்தா யார் என்ற கேள்விக்கு "சிவபெருமானே" என்றுதான் தொடங்கியுள்ளார். நூற்பதிப்புகளில் உள்ளதை உள்ளபடியே பதித்த பெருமை அவர்களுக்குண்டு. பெருந்தேவனாரின் பாரதத்தை பதிப்பிக்கும்போது சிலர் கிருஷ்ணர் சிவபூசை செய்ததை மறைத்தனர். உபமன்யு முனிவரிடம் கிருஷ்ணர் சிவதீட்சை பெற்று சிவபூசை செய்த பகுதியை ஒழிக்க முற்பட்டனர். இது போன்ற சில செயல்கள் நடைபெறாது பாரதத்தை உள்ளதை உள்ளபடியாக பதிப்பித்த பெருமையுடையவர். தமிழுக்குரிய எண் இலக்கங்களை தெளிவுடத் தெரிவித்த விற்பன்னர். முன்பு இருந்த இலக்கங்களை அதன் நடைமுறையிலிருந்த வற்றையும் ஒப்புநோக்கிப் பதிப்பித்துத் தந்து எழுச்சியை ஏற்படுத்திய அறிஞர். எண் பெறு மானங்களைத் தந்தவரும் அவரே. இவற்றையெல்லாம் செய்த பெருமைக்குரிய மகானின் அவதாரம் 5ஆம் திகதி மார்கழிமாதம் சித்திரை பானு வருடம், புதன்கிழமை அவிட்ட நட்சத்திரம் கூடிய 1822ஆம் ஆண்டாகும்.

தந்தையார் சித்த வைத்திய மேதை கந்தப்பிள்ளை. இவர்கள் அக்காலத்து அரச உத்தியோகத்தர். ஆங்கில அறிவு நிரம்பியவர். பாரம்பரிய தமிழ் வைத்தியர் ஆதலால் தமிழ் மருத்துவ வசனநடை நூல் பல எழுதியவர் என அறியக்கூடியதாயுள்ளது.

தாயார் சிவகாமி ஆவர். நாவலர் அவர்களுக்கு நான்கு ஆண் மூத்த சகோதரர்கள் இருந்தனர். இவர்கள் அந்நாளில் அரச உத்தியோகத்தர்களாய் விளங்கியவர்கள் என அறியமுடிகின்றது. மூன்று பெண் சகோதரிகளும் இருந்தனர். இதில் வித்வ சிரோமணி பொன்னம்பலம்பிள்ளை அவர்களின் தாயும் ஒரு சகோதரியாவார்.

ஆரம்பக்கல்வி 1827- 1830 நல்லூர் சுப்பிரமணி உபாத்தியாரிடம் தமிழையும் நீதி நூல்களையும் கற்றுத் தெளிந்தார்.

1831- 1834 ஒன்பதாம் அகவையில் தந்தையாரை இழந்தார்.

1834- 1841 ஆங்கிலக் கல்வியைக் கற்றார். 12ஆம் அகவையில் ஆங்கிலக் கல்வி கற்கத் தொடங்கினார். இந்நாளில் யா/ மத்திய கல்லூரியில் ஆங்கிலக் கல்வியை ஐயம் திரிபறக் கற்றுக்கொண்டார். 22ஆம் பராயத்தில் மும்மொழியில் பாண்டித்தியம் பெற்றுக் கொண்டார். அதாவது தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் என்பனவாகும். பேர்சிவல் பாதிரியார் இவரது நுண்மான் நுழைபுலப் புலமையினை நன்கறிந்து தமக்கு தமிழ் பண்டிதராக்கிக் கொண்டார்.

1846இல் முதன் முதல் இந்தியப் பயணத்தை மேற்கொண்டார். இதன்போது (பைபிளை) வேதாகமத்தை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டபோது சைவ சமய சின்னங்களை அணிந்தே போனார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1847இல் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் சிவன் கோவிலில் முதற் பிரசங்கத்தைச் செய்தார்.

31.12.1847இல் சைவ சமய விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களை மதம் மாறாது தடுத்து நிறுத்தினார்.

1848இல் சைப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார். 1849இல் இரண்டாவது இந்தியப் பயணத்தை மேற்கொண்டார். அச்சு இயந்திரத்தை வாங்கிக் கொண்டார். இவ்வாண்டு மிக முக்கியமான "நாவலர்" என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்கள். சைவப் பாடசாலைப் பிள்ளைகளுக்குரிய பாடநூல்களையும் எழுதியும், ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித் தும் அச்சு ஏற்றியும் சூடாமணி நிகண்டு உரையையும் செய்தும், சௌந்தரிய லகரி உரை முதலானவற்றையும் அச்சேற்றினார்.

1850இல் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு நிரந்தர கட்டிடம் அமைத்துக் கொண்டார்.

1850இல் நல்லூரில் தனது இல்லத்தில் வித்தியாநூபாலன யந்திர சாலையை நிறுவினார். இதன் பயனாக,

1ஆம் பால பாடம்
2ஆம் பால பாடம்
ஆத்திசூடி உரை
கொன்றை வேந்தன் உரை
சிவாலய தரிசன விதி
சைவ சமய சாரம்
கொலை மறுத்தல்

நன்னூல் விருத்தியுரை

திருச்செந்தினி ரோட்டக இயமக அந்தாதியுரை

திருமுருகாற்றுப்படையுரை

முதலானவை வெளிவந்தன.

1851இல் அச்சுயந்திரசாலை வண்ணார்பண்ணைக்கு மாற்றப்பட்டது. வைத்தீஸ்வரன் சிவன் கோவில் தெற்கு மடத்தில் இயங்கியது. சேக்கிழார் பெருமானால் "உலகெலாம்" எனத் தொடங்கி உலகெலாம் என நிறைவு செய்யப்பட்ட திருத்தொண்டர் பெரியபுராண வசனநடை நூல் எழுதி வெளியிடப்பட்டது. 1852இல் ஞானக்கும்பி, யேசுமத பரிகாரம், வச்சிர தண்டம் என்னும் நூல்கள் வெளியிடப்பட்டது.

1853- 1854 வரை சுப்பிரமணிய தத்துவத்தை வெளிப்படுத்தி சுப்பிரபோதம் என்ற நூலை வெளியிட்டார். சைவதூசன பரிகாரம் என்ற நூலையும் வெளியிட்டார். இதே ஆண்டில் மூன்றாவது முறையாக இந்தியப் பயணத்தை மேற்கொண்டார்.

இல்லறத்தை விரும்பாத நாவலர் பெருமான் சிவபூசையில் நாட்டம் கொண்டார். தமது வாழ்வை சமய, கல்விப் பணியுடன் சிவபூசை ஜெபம் தியானம் இவற்றில் ஈடுபட்டார். தாம் உடையவர் பூசையையும் எழுந்தருளப்பண்ணி சிவபூஜாதுரந்தரர் ஆகியுள்ளார்.

1857இல் அன்னையார் சிவகாமசுந்தரி சிவபதமடைந்தார். 1858இல் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு வர்த்தகசாலை வாங்கினார். பெற்றோர் கொடுத்துவந்த பிடியரிசியைப் பணமாக்கி தாம் நடாத்திவந்த பாடசாலையை நிலைக்கச் செய்ய வர்த்தகக் கட்டிடம் வாங்கினர். இதன்மூலம் வருமானத்தைப் பெருக்கி ஆசிரியர்களுக்கு நிரந்தர வேதனம் வழங்கினார்.

1858இல் 4ஆம் முறையாக இந்தியப் பயணம் மேற்கொண்டார். இதே ஆண்டு ஆனி மாதம் திருவாவடுதுறை ஆதீனத்தில் பிரசங்கத்தை மேற்கொண்டார். பின்பு தர்மபுர ஆதீனத்திலும் பிரசங்கத்தை மேற்கொண்ட பின்பு சீர்காழியையும், சிதம்பரத்தையும் அடைந்தார்.

சென்னையில் இருந்தபோது திருவாசகம் திருக்கோவையார் ஆகிய இரு நூல்களையும் பரிசோதித்து வெளியிட்டார். இவ் வெளியீடு 1859ஆம் ஆண்டு வைகாசி மாதமாகும். 1860இல் சென்னையில் தங்கசாலைத் தெருவில் வித்தியானுபாலன யந்திரசாலையை நிறுவினார். பல நூல்களைப் பரிசோதித்து அச்சேற்றினார். இராமநாத சமஸ்தான பொன்னுசாமித் தேவரின் உதவியுடன் திருக்குறள் பரிமேழலகர் உரையையும் திருக்கோவையார் நச்சுநார்க்கினியார் உரையை 1860 ஐப்பசியிலும் வெளியிட்டார். இந்நிகழ்வுகளை மெச்சிப்பூரிப்படைந்த திருமயிலாப் பூரில் அமைந்துள்ள திருவண்ணாமலை ஆதீனத்து ஆறுமுகதேசிகர் தனது உருத்திர சஞ்சியம் என்னும் ஆபரணத்தை ஞாபகச் சின்னமாகக் கொடுத்துக் கௌரவித்தார். திருவாவடு துறை ஆதீனத்தில் நிரந்தரமாகத் தங்கி சமயப்பணியை செய்யும்படி கேட்டார்கள். அதனை நாவலர் பெருமான் ஏற்கவில்லை.

1862 பங்குனியில் யாழ் திரும்பினார்கள். 1862- 1863 சிதம்பரத்தில் பாடசாலையமைக்கப் பொருள் சேர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். சைவம் வைதிகத்தை விடச் சிறந்ததென நிறுவினார். சிவபூசையின் பலனையும் மகிமையையும் மக்களுக்கு எடுத்துத் தெளிவாகக் கூறினார்.

1863- 1870 காலப் பகுதியில் இந்தியப் பயணம் 5ஆம் முறையாக மேற்கொண்டார். யாழ் வித்தியாசாலையையும் வர்த்தக சாலையையும் தில்லைநாத பிள்ளையவர்களிடம்

ஒப்படைத்தார். 1864இல் சேது தீர்த்த ஸ்நானம் செய்து இராமசுவாமியை வணங்கியபின்பு பொன்னுச்சாமி தேவரின் அரண்மனையில் கௌரவிக்கப்பட்டார். மகாசந்நிதானம் சுந்தர வேடங்களை நாவலர் அவர்கட்கு அணிவித்துச் சிறப்பு கௌரவம் செய்தார். சின்ன சந்நிதானம் தான் அணிந்த மாலைகளை அணிவித்துக் கௌரவம் செய்தார். குன்றக்குடி என்னும் ஊரில் பட்டனப் பிரவேசம் செய்தார்.

1864இல் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவப்பட்டது. சிவாகமத்தையும் சிவதீட்சையையும் நிந்தித்தவர்களை கண்டித்தார்.

பிற்காலத்தில் கண்டனப் பிரசங்க மாமுனி என மக்கள் போற்றினர். 1866இல் சேக்கிழார் பெருமானுக்குக் கோவில் அமைக்க காணியைக் கொள்வனவு செய்தார். நாவலர் பெருமானது எண்ணத்தினை அவர் வழிவந்த வித்வ சிரோன்மணி பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் கோவிலைக் கட்டி கும்பாபிஷேகம் செய்தார். மூன்றாம் பாலபாடம் எழுதி வெளியிட்டார். இந்நூல் இப்போது நான்காம் பாலபாடம் என வழங்கப்படுகிறது. கந்தபுராண வசனம் பெரிய புராண வசனம், திருவிளையாடற்புராண வசனம் எழுதி அச்சிற் பதிப்பித்தார்.

1867இல் திருத்தொண்டை நாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபைக்குத் தலைமை தாங்கினார். சிவபுண்ணியம் பற்றி நீண்ட ஒரு பிரசங்கம் செய்தார். 1868இல் நடந்த இரண்டாம் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றி நெறிப்படுத்தினார். 1868-1869 காலப்பகுதியில் பல புதிய நூல்களுக்கு உரையெழுதினர். உமாபதிச் சிவாச்சாரியார் இயற்றிய அநேக நூல்களை இரண்டாம் மூன்றாம் நான்காம் பதிப்பாக பதிப்பித்தார். மறைஞான சம்பந்தசிவாச்சாரியார் எழுதிய சைவசமய நெறிக்கு புத்துரை எழுதிப் பதிப்பித்தார். தொல்காப்பியம் சேனாவரையுரையைப் பரிசோதித்து வெளியிட்ட பெருமையுடையவர். தனது மாணாக்கர் சதாசிவம்பிள்ளை மூலம் பாரதம், கொலை மறுத்தல், வைராக்கியதீபம், வைராக்கிய சதகம், திருவுந்தியார், தாயுமானவர் பாடல் முதலியனவும் பரிசோதித்து வெளியிட்டமை அவர்களது சிறப்பாகும். சிதம்பரத்தில் வேதாகமப் பாடசாலையும் மடத்தையும் நிறுவி சைவக் குருமார்கள், சைவப் பிரசாரர்கள், சைவாசிரியர்களை உருவாக்குதல் முதலானவற்றிற்கு பாடசாலை நிறுவ முற்பட்டார். இதற்குப் போதிய நிதி வளம் குறைவால் அத்திட்டம் கைவிடப்பட்டது.

1868இல் திருமுறைகளுக்குப் பதிலாக ஆலயங்களில் வள்ளலார் இராமலிங்கம் பிள்ளையவர்களின் பாடல்களைப் பாடுவதை மருப்பா மறுப்பு என்று 1869- 1870இல் வழக்கு ஏற்பட்டது. வழக்காளிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. 1870இல் யாழ் திரும்பினார். மக்களெல்லாம் ஒன்று சேர்ந்து சிறப்பான வரவேற்புக் கொடுத்து கௌரவம் செய்தார்கள்.

1872இல் வண்ணார்பண்ணையில் சைவாங்கில வித்தியாசாலையை ஸ்தாபித்தார். இந்நாளில் யாழ் இந்துக் கல்லூரி சிறப்புடன் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டுள்ளது. ஊர்கள் தோறும் சைவ தமிழ் பாடசாலைகளை உருவாக்கினர். 1872 யாழ்ப்பாண சமய நிலையில் எழுச்சியை ஏற்படுத்தினர். திருக்கேதீஸ்வரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினர். 40 ஏக்கர் நிலத்தை அரசிடமிருந்து மீளப்பெற முனைந்தார். 1879ஆம் ஆண்டு பிற்பகுதியில் ராம- அரு- பழநியப்பா செட்டியார் அவர்கள்மூலம் இலங்கைச் சைவர்கள் சார்பாக நிலத்தை ஏலத்தில் வாங்கினர்.

1873- 1876 காலப்பகுதியில் நல்லூர் கந்தசுவாமி கோவில் சீர்திருத்தம் பற்றியதாக அமைந்தது. 1873 தை 7ஆம் நாள் கோவிலில் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. குமாரதந்திர

முறைப்படி கோவிலைக் கட்ட மூவாயிரம் ரூபாய்க்கு கருவூரிலிருந்து கருங்கல்லைப் பெற்றுக் கொடுத்தார்.

06.06.1847இல் சுப்பையா கார்த்திகேசு ஐயர் அவர்களிடம் 5 பரப்பும் 12 குளியும் அடங்கிய அம்மையன் வளவு சைவ மடாலயம் கட்டக் கொடுக்கப்பட்டது. இந்நாள் நாவலர் மணிமண்டபம் அமைந்த இடம். 1874இல் நல்லூர் மகோற்சவத்தின்போது திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து பல ஓதுவார்கள் அழைத்து வரப்பட்டனர். சுவாமி வீதி வலம் வரும்போது பின்னாக சிவவேடப் பொலிவுடன் உள்ளூர் ஓதுவார்களும் சேர்ந்து திருமுறைகளைப் பண்ணுடன் ஓதிச் சென்றார்கள்.

1875- 1878 காலப்பகுதியில் நன்னூல் விருத்தி உரை இரண்டாம் பதிப்பு, நைடதவுரை, திருவிளையாடற் புராணம், நன்னூல் காண்டிகையுரை முதலிய நூல்களைத் திருத்துவதிலும் பதிப்பிப்பதிலும் ஈடுபட்டார். சிவபூசா விதி, மூன்றாம் அனுட்டான விதி, குரு சிஷ்ய கிரமம், பூசைக்கு இடம் பண்ணும் விதி, சிராத்த விதி, தருப்பண விதி, போசன விதி, தமிழ் அகராதி, தமிழ் சமஸ்கிருத அகராதி, தமிழ் ஆங்கில அகராதி முதலியன எழுதுவதிலும் சைவப் பிரசங்கங்கள் செய்வதிலும் நாவலர் பெருமான் ஈடுபட்டார்.

1877இல் இயற்கையின் கோலம் மழையின்மையால் பஞ்சம் ஏற்பட்டது. மத வேறு பாடின்றி கஞ்சித் தொட்டித் தருமத்தைத் தொடங்கி மக்களின் பசிப்பிணியாற்றினார். 1878ஆம் ஆண்டுவரை இத்தருமம் தொடர்ந்தது. இக்காலப்பகுதியில் விவசாயிகளுக்கு விதைநெல்லைப் பெற்றுக்கொடுக்க பலவழிகளிலும் உதவினார். 1877-1879 யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம் உருவாக்கப்பட்டது. இதில் இருநூறு பங்கு நாவலர் அவர்களுக்கு உரியது. காடாக இருந்த கந்தளாய் பகுதி சுதேசிகளுக்கு விற்கப்பட்டது. பலர் இதனைக் கொள்வனவு செய்து விவசாயத்தில் ஈடுபட்டு கந்தளாய் நிலப்பரப்புக்கு உரிமையாளர் ஆனார்கள்.


1878 சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் சைவ மகத்துவம் என்ற நூலை எழுதினார்கள். இதற்கு எதிராக கத்தோலிக்க பாதுகாவலன் என்னும் பத்திரிகையில் சைவ மகத்துவ திமிராபானு, சைவ மகத்துவதிகாரம் முதலிய கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன. இவற்றை எதிர்ப்பதற்கு நாவலர் அவர்களின் மாணவனும், சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியருமான காசிவாசி செந்திநாத ஐயர் துணையாக இருந்தார். நாவலர் அவர்கள், 1878 ஆனி 13இல் உலகெங்கும் நிறைந்த கிறீஸ்தவர்களின் தலைவரான பாப்பாண்டவரை நேரடி வாதத்திற்கு அழைத்தனர். விவிலிய நூலை முழுமையாக ஆழமாகக் கற்றார்கள் என்பதை இது காட்டி நிற்கின்றது. 1878இல் வைகாசி 24ஆம் நாள் கீரிமலைச் சிவன் கோவில் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் வெளியானது. நாவலர் அவர்கள் சிவபதம் அடைந்த பின்னர் இம் முயற்சி நிறைவேறியது. 1879இல் சைவ சமயப் பத்திரிகை நடத்தும் முயற்சி ஏற்பாடாகி யது. ஆயினும் 19.08.1889இல் "**இந்து சாதனம்**" என்ற பத்திரிகை வெளிவந்தது.

சைவத் தமிழ் மக்களுக்கு நாவலர் பெருமான் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தார். அவரது குருபூசைத் தினத்தில் அவரது பணிகளையும் அவரால் மேற்கொள்ளப்பட்ட அறநெறி களையும் போற்றிக் கடைப்பிடிப்பது சைவத் தமிழ் மக்களின் கடப்பாடாகும். நாமும் அவ் வழி நின்று சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாப்போமாக.

வாழ்க வளர்க சைவமும் தமிழும்.

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 34. உயிர்கள் மயக்கவுணர்வால் திருவருளை அறியாமை

பால்ஆழிமீன் ஆளும் பான்மைத்து அருள் உயிர்கள்
மால்ஆழி ஆழும் மறித்து.

**பொருள்:**

அருளை ஆதாரமாகக் கொண்டுள்ள உயிர்கள் அவ்வருளைப் பொருந்தி நின்று பேரின்பத்தை நுகர அறியாமல், மாயையின் காரியமாகிய உலகப் பொருள்களையே நுகர விரும்பி மயக்கமாகிய கடலில் ஆழ்ந்து போய் உள்ளன. இது, பாற்கடலில் உள்ள மீன்கள் அப்பாலை உண்ணும் பொருள் என்று அறியாமல் அங்குள்ள சிற்றுயிர்களைப் பிடித்து உண்ணும் நிலையைப் போன்றது.

**சொற்பொருள்:**

அருள் உயிர்கள்- அருளை ஆதாரமாகக் கொண்டுள்ள உயிர்கள், (அவ்வருளை அறிந்து அனுபவியாமல்) மால்ஆழி- (மாயை காரியமாகிய இழிந்த உலகப் பொருள்களையே விரும்பி அனுபவித்து) மயக்கமாகிய கடலில், மறித்து- மீண்டும் மீண்டும், ஆழும்- ஆழ்ந்து போய் உள்ளன. (இ:.து எது போலும் என்றால்), பால்ஆழிமீன்- பாற்கடலில் உள்ள மீன்கள், ஆளும் பான்மைத்து- அப்பாலை நுகர அறியாமல், அங்குள்ள சிற்றுயிர்களைப் பிடித்து உண்ணும் தன்மை போன்றது.

**விளக்கம்:**

*மாயை தரும் மயக்கம்:*

மாயை உலகமாக விரிந்து நின்று, உயிர்களைக் கவர்ந்து வசப்படுத்துகிறது. மாயையின் கவர்ச்சித் தன்மையை நோக்கி அதனை "மோகினி" என அழைப்பர்.

நாடக மேடையில் கண்ணைக் கவரும் ஆடை அணிகளோடு ஓர் அழகு மங்கை தோன்றி ஆடுகிறாள். அவளது அழகும் ஆடலும் பார்ப்பவரைக் கவர்ந்து அவரது அறிவை வேறெங்கும் செல்லாதவாறு தடுத்துத் தம் வசப்படுத்தி விடுகின்றன. அவர்கள் தம்மை மறந்து அக்காட்சியில் ஈடுபட்டு நிற்கின்றனர். அந்த நடன மங்கையைப்போல, மாயை தனது காரியமாகிய உலகப் பொருள்களால் மாந்தரின் அறிவை- மயக்கி நிற்கிறது.

***பொருளும் அருளும்:***

மாந்தர் உலக வாழ்வில் மயங்கி, இறைவனது அருளைப் பெறவேண்டும் என்ற தெளிவு இல்லாமல், உலகப் பொருள்கள்மீது மேலும் மேலும் ஆசையைப் பெருக்கிக் கொள்கிறார்கள். நெடுகிலும் வாங்கிப்போட்ட நிலங்கள், வீடுகள், கணக்கு இல்லாத பணம் ஆகிய இவற்றை உடைய வாழ்க்கையைத்தான் சிறந்த வாழ்க்கை என்று பெரும்பாலான மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஓர் உண்மையை மறந்து விடுகிறார்கள். இவ் வாறு தேடியபொருள்கள் அமைதியைத் தருவதில்லை என்பதுதான் அந்த உண்மை. கணக்கில் வராத பணத்தை எப்படி மறைத்து வைத்துக் காப்பது என்ற கவலை பலருக்கு. போற்றிப் பாதுகாக்கும் பொருள் நம்மை விட்டுப் போய்விடுமோ என்ற அச்சத்தினால் மன அமைதி போய்விடுகிறது.

பொருள் இருந்தால் எல்லாவிதமான இன்பங்களையும் எய்தலாம் என்று எண்ணத் தோன்றும். மயக்கத்தினால் அவ்வாறு நினைத்தே பொருள்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறோம். ஆனால், அந்தப் பொருள்கள் நிலையானவை அல்ல. ஆதலால் அவற்றால் வரும் இன்பமும் எந்தச் சமயத்திலும் போய்விடலாம். நாம் பெறுகிற இன்பம் நிலையானதாக இருக்கவேண்டுமானால், என்றைக்கும் நிலையான பொருளோடு தொடர்பு இருக்கவேண்டும். எல்லா இன்பத்திற்கும் காரணமானதும் என்றும் நிலையானதுமான ஒன்றைப் பெற நாம் முயல வேண்டும். இறைவன் திருவருள்தான் அது. அதை மறந்து விட்டு, நிலையில்லாத பொருளுக்காக அலைகிறோம்.

***திருவருள் இன்பத்தை நம்பாத நிலை:***

எத்தனையோ காலமாக, எத்தனையோ பெருமக்கள் திருவருளின்பம்தான் நிலையானது என்பதை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மொழிகளில் நமக்கு நம்பிக்கை வரவில்லை. யார் யாரோ சொல்வதையெல்லாம் நம்பி விடுகிறோம். வானிலை அறிவிப்பாளர் அடுத்த 24 மணிநேரத்தில் சிற்சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என்று அறிவித்தால் அதை அப்படியே நம்பி விடுகிறோம். தேர்தலில் நிற்போர் அள்ளிவீசும் வாக்குறுதிகளை நம்பி வாக்களித்து விடுகிறோம். ஆனால், பல பெரியவர்கள் திருவருள் இன்பத்தை அனுபவமாக உணர்ந்து சொல்லியும் நாம் நம்புவதாக இல்லை.

இந்த உலகம் ஐம்புல நுகர்ச்சிக்கு ஏற்ற பொருள்களைக் கொண்டிருக்கிறது. அவற்றைக் கண் முன்னாலே பார்க்கிறோம். கண்ணுக்குத் தெரியும் அப்பொருட்களிடத்திலே ஆசையும் நம்பிக்கையும் உண்டாகிறது. ஆனால் திருவருள் அனுபவம் அத்தகையதன்று. அது நமது புலன்களுக்கு எட்டாதது. அதனாலேயே அதனிடத்தில் நம்பிக்கை உண்டாகவில்லை.

***மாந்தர் நிலைக்கு உவமை:***

மாந்தர் உயர்ந்ததாகிய திருவருள் இன்பத்தை அறியாமல், இழிந்தனவாகிய உலக போகங்களில் விருப்பம் கொண்டு வாழ்கின்றனர்; இன்பத்தை அடையப் போகிறோம் என்று எண்ணிக்கொண்டு துன்பத்தை அடைகின்றனர். இந்நிலைமையை விளக்கிக் காட்டவே

பாற்கடலில் உள்ள மீன்கள் அந்தப் பாலை உண்டு வாழாமல் அங்குள்ள சிற்றுயிர்களைப் பிடித்து உண்ண அலைவதை உவமை காட்டுகிறார் ஆசிரியர்.

***குறிப்பு:***

பாற்கடலில் உள்ள மீன் உணவுக்காக அங்குள்ள சிற்றுயிர்களைத் தேடி அலையும் என்ற கருத்துச் செய்யுளில் வெளிப்படையாகச் சொல்லப்பெறவில்லை. பொருள் பொருத்தம் கருதி அக்கருத்து வருவித்து உரைக்கப்பட்டதாகும்.

### 35. பின்னே வரும் துணை

அணுகுதுணை யறியா ஆற்றோனில், ஐந்தில்
உணர்வை உணரா உயிர்.

**பொருள்:**

தனக்குப் பின்னே துணையாக வருகின்றவனை அறியாது தனி வழியில் அச்சத்துடன் நடந்து செல்லும் வழிப்போக்கனைப்போல உயிர்கள் தமக்குத் தோன்றாத் துணையாய் பின் நின்று உதவும் பேரறிவாகிய திருவருளை உணராது துன்புறும்.

மற்றுமோர் உவமை கூறலாம். உயிர் உடன் நின்று செலுத்தவே ஐம்பொறிகள் செயற் படுகின்றன. ஆனால், அவ்வாறு தம்மைச் செலுத்தி நிற்கும் உயிரை அவை அறிவதில்லை. அந்த ஐம்பொறிகளைப் போல உயிர்கள் தமது அறிவிற்குத் துணையாய் உள்ள திருவருளை உணராது நிற்கும்.

**சொற்பொருள்:**

அணுகுதுணை- தனக்குப் பின்னே பாதுகாவலாக வருகின்ற துணைவனை, அறியா- அறியாமல் தனிவழியில் அஞ்சி நடந்து செல்லுகின்ற, ஆற்றோனில்- வழிப்போக்கனைப் போலவும், ஐந்தில்- (தம்மை உள்நின்று செலுத்தும் உயிரை அறிய மாட்டாத) ஐம்பொறிகளைப் போலவும், உயிர்- உயிர்கள், உணர்வை- பேரறிவாகிய திருவருளை, உணரா- உணராது நிற்கும்.

**விளக்கம்:**

***துணைவனை அறியா வழிப்போக்கன்:***

நாமெல்லாம் பிறவி என்ற நீண்ட வழியில் சென்றுகொண்டு இருக்கிறோம். ஒருநாள் இருநாளில் சென்றுவிடக்கூடிய தொலைவாக இருந்தாலே "துணையோடல்லது நெடுவழி போகேல்" என்பார்கள். அப்படியிருக்க, நாம் போகின்ற தொலையா வழிக்குத் துணை வேண்டாமா?

உலக வாழ்வில் நமக்குத் துணையாக, நம்முடைய செயலுக்கு உதவி செய்பவராகப் பலர் இருப்பதைக் காண்கிறோம். ஆனால், யாரொருவரை நாம் துணையாக எண்ணியிருக் கிறோமோ அவருக்கு வலிமை குறையும்போது அவரால் ஒரு பயனும் பெற முடியாமல் போய்விடுகிறதே. மேலும் ஓரிடத்தில் துணையாக நிற்பவர் மற்றோரிடத்தில் துணையாக

நிற்க இயலாது. ஒரு காலத்தில் துணையாக இருப்பவர் மற்றொரு காலத்தில் துணையாக இருக்க இயலாது. காட்டாக, வகுப்பறையில் ஆசிரியர் துணையாக நிற்பார். அவரே வயலில் நாற்று நடுகிற இடத்தில் துணையாக வரமுடியுமா? அந்த இடத்தில் அவரால் யாதொரு உதவியும் செய்ய இயலாது. அந்தத் தொழிலில் பழக்கமுடைய வேறு சிலர்தான் அந்த இடத்தில் உதவ முடியும். நெருக்கடி மிகுந்த சாலையில் அதனைக் கடப்பதற்கு காவல்துறையைச் சேர்ந்தவர் துணையாக நிற்கிறார். அவரே ஆற்றைக் கடப்பதற்கும் துணை செய்ய வேண்டும் என்றால் அது முடியுமா? அங்கு அவர் துணை பயன்படாது. ஆற்றைக் கடப்பதற்குப் படகு செலுத்துபவரின் துணையே வேண்டும். இப்படி ஒவ்வோர் இடத்திற்கும் ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்றபடி துணைகள் அமைகின்றன.

எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் எந்த நிலையிலும் நமக்கு துணையாக வரக்கூடியவர் யாரேனும் உண்டா? உலக மாந்தர்க்கு அத்திறன் இல்லை. திருவருள் ஒன்றுதான் அப்படிப்பட்ட பெரிய துணையாக விளங்குவது.

திருவருள் உயிரோடு ஒட்டியதாய் எப்போதும் பிரிப்பின்றி நிற்பது; உயிர் செல்லும் இடங்களில் எல்லாம் உடன் வருவது; அது நம்மை எப்போதும் பற்றிக்கொண்டிருக்கிறது. "உலகத்தில் வேறு யாரும் துணையில்லை; நீதான் துணை" என்று நாம்தான் அதனை இறுகப் பற்றிக்கொள்ளாமல் இருக்கிறோம். அதன் இருப்பையும் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறோம்.

உயிர்களாகிய நாம் திருவருளை உணராதிருப்பதற்கு இரண்டு உவமைகள் கூறியுள்ளார் ஆசிரியர். அணுகு துணையறியா ஆற்றோன் என்பது முதல் உவமை. ஆறு-வழி; ஆற்றோன் என்பதற்கு வழிப்போக்கன் என்பது பொருள். தனக்குக் காவலாகத் தன் பின்னே வருகின்ற துணைவனை அறியாது இருட்டு வழியில் நடுக்கத்துடன் பயணம் செய்யும் வழிப்போக்கனைப் போல உயிர்களாகிய நாம் இருக்கிறோம். பின்னே தொடர்ந்து வருகின்ற துணைவன்தான் திருவருள். வழிப்போக்கன் திரும்பிப் பார்த்தால் பின்னே வரும் துணைவனைத் தெரிந்து கொள்வான்; அச்சமும் கவலையும் நீங்குவான். அதுபோல, உயிர்களாகிய நாம் வெளியுலகிற் செல்லும் நமது நாட்டத்தைத் தடுத்து உள்முகமாகத் திரும்பி நோக்கினால் திருவருளை உணர்ந்து கொள்ளலாம்; கவலையும் துன்பமும் நீங்கலாம்.

*உயிரை அறியாத ஐம்பொறிகள்:*

மாணவருக்கு முதல் உவமை பற்றிப் பின்வருமாறு ஐயம் எழலாம். வழிப்போக்கனுக்குப் பின்னே வரும் துணைவன் அவனிலிருந்து இடத்தால் விலகி நிற்கின்றான். அதனாலேயே வழிப்போக்கன் அவனைத் தெரிந்துகொள்ள இயலாமற் போகிறது. அதுபோலத் திருவருள் உயிரிலிருந்து விலகி நிற்கவில்லையே. உயிரோடு ஒன்றுபட்டு அல்லவா உள்ளது. அப்படி இருந்தும் அதனை உயிர் உணர்ந்து கொள்ளாதது ஏன் என்பதே அவ் ஐயம். அந்த ஐயத்தை நீக்குதற்கு ஐம்பொறிகளை உவமை கூறுகின்றார் ஆசிரியர்.

கண் முதலிய பொறிகள் உருவம் முதலியவற்றைத் தாமே அறிவதில்லை. உயிர் உடனிருந்து செலுத்தவே அவை அறிகின்றன. ஆயினும் அவை உயிர் தம்மோடு உடன் நிற்பதையோ, உயிர் தம்மைச் செலுத்துகிறது என்பதையோ அறிவதில்லை. அந்த ஐம்பொறிகளின் நிலையில் உயிர் உள்ளது. தம்மோடு ஒன்றுபட்டுள்ள திருவருளை அறியாது; திருவருள்தான் தன்னை இயக்கி வருகிறது என்பதையும் அறியாது.

ஐம்பொறிகள் சடம். ஆகையால் அவை தம்மோடு ஒன்றுபட்டுள்ள உயிரை அறியாத தில் வியப்பேதும் இல்லை. ஆனால், உயிரோ அறியும் தன்மையுடைய சித்து. அது சித்தாய் இருந்தும் தன்னோடு ஒன்றுபட்டுள்ள திருவருளை அறியாதிருப்பது ஏன்? எனக் கேட்கலாம்.

சித்தாகிய உயிர் ஆணவமலத்தின் வயப்பட்டிருக்கிறது. ஆணவ மலம் உயிரைப் புற உணர்வு உடையதாகச் செய்கிறது. அஃதாவது, புறவுலகையே நோக்குமாறு செய்து உலகப் பொருள்கள் மீது ஆசையை உண்டாக்குகிறது. அதே நேரத்தில் உயிர் உள்முகமாக நோக்கித் தன்னை உணர விடாதபடியும் செய்கிறது. இவ்வாறு உயிர் ஆணவ மலத்தால் புறவுணர்வு மாத்திரம் உடையதாய், அகவுணர்வை இழந்து நிற்கிறது. எனவே உயிர் சித்தாய் இருந்தும் அகவுணர்வு இன்றி நிற்பதனால், தன்னோடு ஒன்றாய் உள்ள திருவருளை அறியமுடியாது போகிறது.

இவ்வகையில், திருவருளை உணரமாட்டாத உயிர், தன்னைச் செலுத்துகிற உயிரை அறியமாட்டாத ஐம்பொறிகளைப் போன்றதாகிறது.

(தொடரும்...



அன்னை சிவத்தமிழ்ச் செல்வி,

பண்டிதை, கலாநிதி

**தங்கம்மா அப்பாக்குட்டி J.P.**

அவர்களின்

## 91ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா

காலம் : 07.01.2016 வியாழக்கிழமை காலை 8.30மணி

இடம் : அன்னபூரணி மண்டபம், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

பேரன்புடையீர்,

வணக்கம்.

எதிர்வரும் 07.01.2016 வியாழக்கிழமை அன்று எங்கள் தேவஸ்தானத்தின் தெய்வநிலை எய்திய, பெருந்தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் 91ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா துர்க்காதேவியின் திருவருளால் சிறப்பாக நடைபெற உள்ளது. இவ்விழாவில் அன்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

வணக்கம்.

கலாநிதி ஆறு. திருமுருகன்

(தலைவர்)

# நம் தெய்வம் அருட் தெய்வம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

கடவுள் ஒருவன். அவன் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டு பல பெயர்களுடன் பல வடிவங்களைத் தாங்குகின்றான். பிள்ளையார், வீரபத்திரர், வைரவர், சுப்பிரமணியர், அம்மன் இன்னும் பல பெயர்களுடன் அடியவர்களுக்கு அருள்புரிவதாக புராணங்கள் இயம்பு கின்றன. "அடியவர்கள் மேல்கொண்ட பெருங்கருணையில் பல வடிவங்கள் எடுத்தார்" என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது. எனவே "நம் தெய்வம் அருட் தெய்வம்" என்பதை யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

இறைவன் உயிர்கள் மேற்கொண்ட பெருங்கருணையினால், பிறவித் துயர் துடைக்க பூமியில் உயிர்களைப் படைக்கின்றான். உயிரினங்கள், புல், பூண்டு, புழு, மிருகங்கள், பறவை கள் என மாணிக்கவாசக சுவாமிகள் கூறியதுபோல் பல வகையின. அவைகள் வாழ்வதற்கு இறைவன் பூமியைப் படைத்தான். பூமியில் நீர், தீ, காற்று என்பவற்றையும் ஆக்கினான். மரம், செடி, கொடி, புல், பூண்டுகளையும் பொருத்தமான இடங்களில் வளரச் செய்து பொருத்தமாக உயிரினங்களையும் நுகரச் செய்தான். காட்டில் வாழும் உயிரினங்களுக்கு உண்ணக்கூடிய உணவுகளைப் படைத்து, கண்போல் காக்கின்றான். அதுபோல் வீட்டில் வாழும் மனிதர்கள், வீட்டு விலங்குகள், வீட்டில் வாழும் பிற உயிரினங்களுக்கு ஏற்ற உணவுப் பொருட்களை ஆக்க வழிசமைத்துள்ளான். இவை எல்லாம் இறைவன் பெருங்கருணை யன்றோ. எனவே "நம் தெய்வம் அருட் தெய்வம்" என்பதைப் புட்டுக் காட்டத் தேவையில்லை.

இறைவன் படைத்த உயிரினங்களில் மானுடப் பிறவி வினையை ஒழிக்க வல்லது என்பதை உணர்ந்த எம்பெருமான் ஆறறிவைக் கொடுத்துள்ளான். ஆறறிவு படைத்த மனிதன் இறை வழிபாட்டுக்கு கோவில்களைக் கட்டுகிறான். ஆகம விதிப்படி கட்டிய கோவில்களில் வேதாகம முறைப்படி, பூசை திருவிழாக்களைச் செய்கின்றான். அன்னசத்திரங்கள் நாட்டி அடியார்களுக்கு அன்னதானம் வழங்குகிறான். இறைவன் பூசைக்கு பூஞ்சோலைகளை கோவிலுக்கருகாமையில் அமைக்கின்றான். பூஞ்சோலைகளைப் பராமரிப்பதற்கும் பூக்களைப் பறிப்பதற்கும் தொண்டர்களை நியமிக்கின்றான். மானுடர்களில், இல்வாழ்வான், பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என்றும் நான்கு திறத்தினர் உள்ளனர். இல்வாழ்வான் என்பான் இல்லத்தில் இருந்து மனைவி பிள்ளைகளுடன் வாழ்பவன். இல்வாழ்வான் வீட்டில் இருந்து, ஏனைய மூவருக்கும் உதவி புரிந்து வருகின்றான். இவற்றை வள்ளுவப் பெருந்தகை

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி நின்ற துணை"

எனப் பாடல்மூலம் விளங்க வைக்கின்றார். இல்லறத்தை நல்லறமாகச் செய்கின்ற உத்தமர்களுக்கு அவர்கள் உள்நின்று அருள்புரிகின்றார் என்பதை அடியவர்கள் அறிவார்கள். எனவே இறைவன் எங்கும் வியாபித்திருக்கின்றதை உணர்ந்து மெய் அடியார்கள் பூரிப்படை வார்கள்.

எங்கும் வியாபித்திருக்கின்ற சிவன் ஆவரங்கால் என்னும் கிராமத்தில் "நடராஜ இராமலிங்கம்" என்னும் நாமத்துடன் மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; என்றும் உள்ளவர்; எல்லாம் அறிபவராகிய ஆவரங்கால் நடராஜ இராமலிங்கப் பெருமான், உவர்நீருள்ள ஆவரங்கால் கிராமத்தில், கோவிலின் முன் வட திசையில் உள்ள கிணற்று நீரை உவர்நீரற்ற தூய நீராக மாற்றிக் கிணற்றில் சுரக்க வைத்துக் கொண்டிருக்கின்றார். அக்கிணற்றில் காலை, மாலை எந்நேரமும் நீர் எடுக்க வரும் மக்களைக் காணலாம். நீர் எடுக்க வருபவர்கள், ஒருகணம் எம்பெருமானை சிந்திப்பார்களென நினைத்து, இக்கிணற்றை ஆக்கினாரோ என சிந்திக்க வைக்கின்றது. இதுபோல் வல்லிபுரம் விநாயகர் கேணி, என்றும் நீர் வற்றாது, நீராடுபவர்களுக்கும், வாகனங்கள் கழுவுவதற்கும் உதவுகின்றதென்பதை அடியார்கள் அறியாமலிருக்க முடியாது. இன்னும் வற்றாப்பளை அம்மன் பொங்கலுக்கு கடல் நீர் எடுத்து ஒரு கிழமை தீபமேற்றி பொங்கல் நடப்பதை, அடியார்கள் வாயிலாக அறிகின்றோம். நாளாந்தம் எத்தனை ஆலயங்களில் அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க! என்ற இறை வாக்கை இறைவன், தனது பெருங்கருணையினால் தந்துள்ளான்.

கலியுகத்தில் கலியுகவரதனாக காட்சியளித்துக் கொண்டிருப்பவர் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான். சந்நிதியான் ஆற்றில் மூழ்கி நோய் நீங்கப் பெற்றோர் கணக்கில. ஆற்றங்கரையான் பூசகர், உச்சியில் இடும் விபூதியால் நோய் குணமடைந்து, எந்நிதியும் பெற்றுச் சென்றவர்கள் ஏராளம், ஏராளம். ஆற்றங்கரையான் நோயை மாத்திரமின்றி, பசிப்பிணியையும் போக்கவல்ல அன்னதானச் சாலைகள் அமைக்கச் செய்து, அடியார்களுக்கு அமுது வழங்க வழிசெய்துள்ளான். அன்னக் கந்தன் எனப் பெயர் பெற்ற சந்நிதியான் கோவிலின் முன் வீதியில் சந்நிதியான் ஆச்சிரமம், அடியார்மடம், வள்ளி தெய்வானை ஆச்சிரமமென இன்னும் பல அறச்சாலைகள் விளங்குவதை நாம் காண்கின்றோம். உண்ண உணவு இல்லை என்று சொல்லும் அடியார்களைக் கண்டிலோம். அன்னசுரபிபோல் விளங்கும் சந்நிதியான் ஆச்சிரமம் இல்லையென்னாது எந்நேரமும் அமுது வழங்குவதை எண்ணும்பொழுது சந்நிதியானின் அருட்கருணையை வியந்து நோக்குகிறோம். அருட் தெய்வமாகிய சந்நிதியானிடம் வரும் அடியவர்கள் இடர் களைந்து, எந்நிதியை வழங்கிக் கொண்டிருக்கின்றான் என்பது உண்மையிலும் உண்மை. எனவே நாம் நாடொறும் சந்நிதியான் கோயில் சென்று அவனடி பணிந்து ஈடேறுவோமாக.

**சந்நிதி வேலா உன்னையே நம்பிச்**
**சகலரும் இங்கு கூடுறார் நாளும்**

சந்நிதி வேலா உன்னையே நம்பிச்
சகலரும் இங்கு கூடுறார் நாளும்
தந்திடு நல்ல வாழ்வினை எமக்கு
தரணியே போற்ற வாழுவோம் நாங்கள்
உந்தன் அருளால் வாழவே வேண்டுறோம்
உலகே வியக்க வாழ்ந்த தமிழினம்
கந்தா எங்கள் கருணைக் கடலே
காலம் எல்லாம் துணைநீ தானே.

-வ. யோகானந்தசிவம்-

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| குமாரகுலசிங்கம் வரப்பிரியன் | கைதடி | 10000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் மகாத்மா வீதி | நெல்லியடி | 1000. 00 |
| ஸ்ரீராம் ராகவி | கோண்டாவில் | 5000. 00 |
| ஆ. திருநாவுக்கரசு | திருக்கேதீஸ்வரம் | 5000. 00 |
| Dr T. சுதர்மன் | மானிப்பாய் | 1000. 00 |
| S. நாகலிங்கம் | கொழும்பு | 1000. 00 |
| ச. பிரவீன் | நீர்வேலி | 10000. 00 |
| ஐ.கோ. சந்திரசேகரம் J.P | நல்லூர் | 500. 00 |
| கே. கபிலன் | வல்வெட்டி | 500. 00 |
| பொ. சந்திரராஜா | கோண்டாவில் | 5000. 00 |
| பி. தனுஜா | நீர்வேலி தெற்கு | 5000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. மாணிக்கவாசகர் நினைவாக | அச்சுவேலி | 200 பவுண்ஸ் |
| K. சேனாதிராஜா | சுவிஸ்லாந்து | 1000. 00 |
| கோ. ஜெயவதனி | பருத்தித்துறை | 10000. 00 |
| செல்வி கலாமாலினி | வட்டுக்கோட்டை | 4000. 00 |
| பொ. செல்வக்காந்திமதி | மீசாலை | 2000. 00 |
| செ. செல்விகா | மானிப்பாய் | 1000. 00 |
| யா/ அராலி கிழக்கு அ.மி.த. மகாவித்தியாலயம் | அராலி | 3500. 00 |
| து. பாஸ்கரன் | கனடா | 5000. 00 |
| கி. சிவகாந்தன் | கொழும்பு-6 | 1000. 00 |
| ஐ. சுப்பிரமணியம் | சங்கானை | 1000. 00 |
| ஸ்ரீ. விஷாகன், ஸ்ரீ. துளசிகரன் | சாவகச்சேரி | 1000. 00 |
| வைரமுத்து மகாலிங்கம் | கனடா | 5000. 00 |
| விஜயகுமாரன் இலங்கநாயகி | கனடா | 3500. 00 |
| ஆ. தெய்வேந்திரன் தோப்பு | அச்சுவேலி | 3000. 00 |
| நா. கந்தப்பு தோப்பு | அச்சுவேலி | 5000. 00 |
| செல்வி செ. ஜடா | புலோலி | 10000. 00 |
| மு. தனு | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| Dr கைலாசபதி | புத்தளம் | 4000. 00 |
| தே. ஜெயசேகரம் | உடுப்பிட்டி | 1000. 00 |
| சி. சசிகரன் குடும்பம் | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| சி. கனகமணி | சண்டிலிப்பாய் | 200. 00 |

| | | |
|---|---|---|
| து. கருணாகரன் குடும்பம் | சண்டிலிப்பாய் | 300. 00 |
| இ. ஜெய்ஷன் | சுவிஸ்லாந்து | 25000. 00 |
| S. தர்மபாலா | ஆனைக்கோட்டை | 500. 00 |
| அ. ஜெயக்குமார் குடும்பம் | பிரான்ஸ் | 15000. 00 |
| லோ. பிரவீன் | பிரான்ஸ் | 1100. 00 |
| வ. உதயகுலசிங்கம் | வவுனியா | 500. 00 |
| ச. முருகேசு குடும்பம் | உருத்திரபுரம் | 5000. 00 |
| A. மீரா | லண்டன் | 5000. 00 |
| சபேசன் ஆதீசன் | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| சி. சசிதரன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1250. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| K.K. சிதம்பரநாதன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| அமரர் தம்பு மயில்வாகனம் நினைவாக ம. சிவயோகசுந்தரம்மூலம் | U.S.A | 15000. 00 |
| அமரர் திருமதி செல்லப்பா வள்ளியம்மைப்பிள்ளை நினைவாக ம. சிவயோகசுந்தரம்மூலம் | U.S.A | 15000. 00 |
| S. தர்மலிங்கம் | சித்தங்கேணி | 1000. 00 |
| ரவீந்திரன் அக்ஷயா | வல்வெட்டி | 1000. 00 |
| இ. சரஸ்வதி | கரவெட்டி | 5000. 00 |
| மு. கஜேந்திரன் குடும்பம் | சங்கானை | 3000. 00 |
| R. ஸ்ரீராஜேஸ்வரன் | திண்ணைவேலி | 2000. 00 |
| ந. கஜன் | நாச்சிமார் கோயிலடி | 1500. 00 |
| மகாலிங்கம் நளாயினி | கனடா | 5000. 00 |
| வே. கருணாமூர்த்தி குடும்பம் | கொக்குவில் | 2000. 00 |
| ரெ. விநாயகநாதன் (இளை. அஞ்சல் அதிபர்) | பருத்தித்துறை | 1000. 00 |
| வை. நாகராசா | சங்கானை | 1000. 00 |
| ந. நற்குணராசா (தாதி உத்தியோகத்தர்) | யாழ்ப்பாணம் | 500. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | மயிலியதனை | 2000. 00 |
| சி. கணேசமூர்த்தி | அல்வாய் | 5மூடை அரிசி |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 2மூடை அரிசி |
| மோகன் பிரணவன், மோகன் பிரியங்கா அந்திரான் | கரவெட்டி | 20000. 00 |
| S.P. கருணாகரன் | பிரான்ஸ் | 1000. 00 |
| திருமதி செல்வநாயகம் வடலியடைப்பு | மல்லாகம் | 1000. 00 |
| இரா. அருட்செல்வம் மூலம் M. லோகநாதன் | சுவிஸ்லண்ட் | 5000. 00 |
| க. தங்கராசா | அச்சுவேலி | 3மூடை அரிசி |
| சுசீலா நகைமாடம் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| க. சுகன்யா | கனடா | 5000. 00 |
| க. பரஞ்சோதி | கோண்டாவில் | 15000.00 |

(தொடரும்...

# மாயனே மறி கடல்விடமுண்ட வானவன்

– முருகன் அடியார் –

மாயனே மறிகடல்விடம் உண்ட வானவாமணி கண்டந்தெம் அமுதே
நாயினேன் உனைநினையவும் மாட்டேன் நமச்சிவாய என்றுன்னடி பணியாய்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய் பிறைகுலாஞ்சடைப் பிஞ்ஞகனேயோ
சேயனாகி நின்றலறுவ தழகோ திருப்பெருந்துறையுறை மேவிய சிவனே.

-திருவாசகம்.

"செல்வி வாய்க்கும் துணையும் மறைக்கும் சூழ்ச்சி வாய்ந்த மாயனே, அலை மடிந்து வீழும் கடலின் கண் தோன்றிய கொடிய நஞ்சினையுண்டு கண்டங்கறுத்துள்ள, எளியேங்களின் அமுதமே; நாயிலுங் கடைப்பட்ட யான் உன்னை இடையறாது நினைவுங்கில்லேன், 'நமசிவாய' என்னும் செந்தமிழ் திருவைந்தெழுத்துப் பொருளை, மறையினை திருவருள் துணையால் புகன்று உன் திருவடியினை பணிகிலேன். அங்ஙனம் பணிதல் செய்யாத பேயனாக யான் காணப்பட்டாலும் எளியேற்கு நின் பெரு நெறி காட்டியருள்வாயாக. பிறை தங்கிய பின்னல் திருச்சடையினையுடையவனே, எளியேன் மிகவும் சேயனாக நின்று அலறுவது முறையும் அழகுமாகுமா? திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே" என்பது அதன் உரை யாகும்.

பாற்கடலை மந்தரகிரியை மத்தாகவும் வாசுகியை நாணாகவும் கொண்டு கடைந்த பொழுது எழுந்தது நஞ்சு, இதைக் கடைவதற்கு மூல புருடராக நின்றவர் விஷ்ணு - மாயன். இதை அருணகிரியார் "வெற்பு நட்டுரக பதித்தாம்பு வாங்கி நின்று அம்பரம் பம்பரம் பட்டுல மதித்தான் மருகன்" என்றார். மேலும் அமுதமாக்கியதை அசுரர்கள் பெறாமல் போக மோகினி வடிவமாம் கொண்டு தடுத்ததும் மாயன். ஆகவே விடம் என்புழி நினைவில் வருபவன் மாயன். அதனால் மாயனே என்றார். அந்த நஞ்சைக் கண்டத்திலே வைத்து இறைவன் சகல ஜீவராசிகளையும் காத்தான். காத்தற் தொழில் செய்பவன் மாயன். அதனாலும் இங்கு மாயன் என்ற சொல்லைப் பாவித்துள்ளார்.

"தேவா மிர்தம் சேர்ந் துண்கையிலே
மூவா முகுந்தன் மோகினியாகிச்
சக்கரப்படையால் தலையறுத்தெறிய"

என்று அருள்கவி கேது பகவான் தோத்திரத்தில் பாடியதை நினைவு கொள்ளலாம்.

மாயன்- மால் - மயக்கம் செய்பவன். அதாவது மாய்மலம்- கண்ணாமுச்சி விளையாட்டு அதாவது தோன்றியும் தோன்றாததும் - உருவம் - அருவம் - நெக்கி நெக்கி உருகுபவர் நெஞ்சில் தோன்றியும் கரவுடையார் கண் கரந்தும்.

மேலும் சிவனும் மாயனும் ஒன்று என்ற ஒற்றுமை நிலையை காட்டுவதுமாம். மறிகடலில் எழுந்த ஆலகால விஷத்தை உண்ட தேவரீர் ஆதலால் - தேவர்களை, ஏன் சகல ஜீவராசிகளையும்- காப்பாற்றியதுபோல் நீர் என்னையும் காப்பாய் என்று இரக்கிறார்.

அந்த விஷத்தை உண்டதினால் உமது தொண்டை கறுத்துள்ளது. ஆனால் அந்த நஞ்சை அமுதமாக்கியவனே. அந்த அமுதை எமக்கு நல்கியதால் மரண பிறப்பற்ற நிலை எய்த உதவும் அமுதம் போன்றவனே.

ஆலந்தான் உகந்து அமுது செய்தது. நீயே விரும்பி அமுதமாக்கி உள்ளது போல நாயினும் கடையேனை நல்வழிப்படுத்துவாய் என்ற உட்கருத்து தோன்றுகிறது. குற்றத்தையும் குணமாக்கல் உமது இயல்புதானே.

நாயானது எசமானிற்கு நன்றியுடையது. அடித்தாலும் காலைச் சுற்றிச் சுற்றி நக்கும்.

அடியேன் உன் திருநாமம் செப்பாதவனாகினும் நீ பெருநெறி காட்டும் உளம்படைத்தவன். ஏனெனில் தக்கன் உனது மாமனால் சபிக்கப்பட்ட மருமகன் சந்திரனிற்கு அப்யம் கொடுத்து உச்சிமேல் - அதாவது உனது சடாபாரத்தில் தூக்கி வைத்து உயர் பதவி கொடுத்தாய். அத்துடன் குளிர் உடல் உள்ளவன் சந்திரன். அவன் உனது சடாபாரமாகிய காட்டின் வெப்பம் அதிகம் என்பதால் கங்கையையும் பக்கத்தில் வைத்தாய்.

பகைவனாகிய பாம்பிற்குப் பயப்படாமல் பிரவாகமாக இருப்பதை "பிறைகுலாஞ்" என்றார்.

"சேயனாகி நின்று அலறுவதழகோ"

ஒரு சிறுவன் தனியே நின்று அழுதால் ஊரவர்கள் "ஆர்பெத்த குழந்தையோ" என்று தாய்மேல் குற்றம் கூறுவர். மகனாக நின்று யான் அழுவது தாயாகிய உனக்கு அழகு அல்ல.

ஆகவே குற்றத்தைக் குணமாக்கி அபயம் கொடுக்கும் உனக்கு இது அழகல்ல. ஆகவே பெருநெறி தந்தருள்க.

## செப்பிடச் செப்பிடச் செல்வமாம் சந்நிதி!

செல்வமே! சிவனார் நெற்றி நயனத்தில்
தோன்றிய பொறியில் உதித்த செல்வமே!
செல்வமே! நாளும் நமக்குக் காவலாய்
திகழும் வேலது தாங்கிய செல்வமே!
செல்வமே! எமக்கு வேண்டும் செல்வமே
தந்திடும் செவ்வேள் ஆகிய செல்வமே!
செல்வமே! செல்வம் ஈட்டிடும் வகைகள்
சேர்த்திடும் சண்முக சுந்தரச் செல்வமே!

சந்நிதி! எமக்கு அண்மையாய் அமைந்த
செல்வன் உறையும் திருத்தலம் சந்நிதி!
சந்நிதி! சிவனின் வீரத் திருமகன்
சண்முகன் தாங்கிடும் வேலின் சந்நிதி
சந்நிதி! சங்கரன் குருவாய் விளங்கிய
சரவணன் முன்புறம் நின்றிடும் சந்நிதி!
சந்நிதி! மஞ்ஞை வாகனன் தெய்வச்
செல்வனை நாம்தினம் துதிக்கும் சந்நிதி!

-ப. மகேந்திரதாசன்-

(தொடர்ச்சி...

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

– சுவாமி கிருஸ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

வாழ்க்கை ஒரு போராட்டம்

## 05. பிணக்குக்கான காரணமும் உள்ளுணர்வும்

எமது வாழ்க்கையிலும் முன்கூட்டியே திட்டமிடப்படாத ஒரு சூழ்நிலைக்குள் நாம் திணித்துத் தள்ளப்படுகின்றோம். அந்தச் சூழ்நிலை எந்தக் காரணிகளினால் உருவாகியுள்ளது என்பதைப் போதிய அளவு நாம் அறியாதுவிடின் எமக்கு அது மிக மோசமானதாக மாறிவிடும். ஏன் அப்படியான ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது? ஏன் எப்போதும் ஒருவகைப் பிணக்கு இருந்துகொண்டே உள்ளது? ஏன் நாம் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதில்லை? ஏன் அகத்திலும், புறத்திலும் ஓர் ஒத்திசைவு, இணக்கம், சமநிலை இருப்பதில்லை? இந்த விடயங்களை நாம் சரியாக அறிந்து கொள்ளாமலே இருக்கின்றோம். நாம் மட்டும் அன்றிப் பலர் இவற்றை அறியாமலே இருக்கின்றனர். இவற்றைப் புரிந்து கொள்ளுவதும் எளிதானதன்று. ஆனால் அவ்வாறு புரிந்துகொள்ளாமல் இருப்பதனாலேயே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை மேலும் மேலும் மோசமாகிக் கொண்டு போகின்றது. எனினும் இந்த நிலைமை தொடர்ந்தும் நீடிக்கப் போவதில்லை. எல்லையின்றி இந்த நிலைமை நீடிப்பதையும் நாம் விரும்பமாட்டோம். இப்படியான ஒரு சூழ்நிலைக்குள் அகப்பட்டுக் கொண்ட தனிப்பட்டவர் மட்டும் நாமல்லர். அப்படி அகப்பட்டுக்கொண்டதோடு காரண காரியத்தோடு சிந்திக்கக்கூடிய ஓர் உள்ளுணர்வும் எம்மிடம் உண்டு. நாம் எதிர்பாராத ஒரு சூழ்நிலைக்குள் இந்த உலகத்தில் இருந்தாலும் அதிலிருந்து முன்னேற வாய்ப்பு உள்ளது என்ற ஒரு நம்பிக்கையும் எம்மிடம் உள்ளதை அந்த உள்ளுணர்வு தெரிவிக்கின்றது.

சில சமயங்களில் இராசத குணத்தின் ஆற்றலினால் எமது புற உறவுகளிலும், அக உறுதியிலும் இருக்கவேண்டிய சமநிலையை முற்றாக இழந்து போனாலும் கூட நம்பிக்கை இல்லாத ஒரு மனநிலையை எப்போதும் கொண்டிருப்பதில்லை. சில சமயம் அந்தமாதிரி நிலையில் நாம் சரியான வழியில் சிந்திக்காமல் இருக்கக்கூடும். ஆனால் அப்படியான சந்தர்ப்பம் மிகக் குறைவே. மிகப்பெரிய துன்பத்தினால் ஆட்கொள்ளப்படும்போது பிரபஞ்சத்தின் கட்டமைப்புக்கு எதிராக நாம் குற்றம் சுமத்தக்கூடும் என்பது உண்மையே. பொதுவாகப் பிரபஞ்சத்தில் ஒரு தவறாத நியதி அல்லது நீதி இருப்பதை நாம் உணர்கின்றோம். ஆனால் அதனைத் தொடர்ந்து எப்போதும் உணர்வதில்லை. அமைதியாக இருக்கும்போது தெளிவாகச் சிந்திக்கக்கூடியவர்களாகவும், பிணக்கைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய தேவை உள்ளவர் களாகவும் நாம் உணர்கின்றோம். பிணக்கைத் தீர்த்துக் கொள்ளும் உந்துதல் எமக்கு உள்ளே இருப்பதில் இருந்து அதனைத் தீர்க்க ஒரு வாய்ப்பும் இருந்தாக வேண்டும்

என்பதை உணரலாம். அந்த முடியும் என்ற நம்பிக்கை சாதகமானதே அன்றி எதிரானதன்று. ஏதோ ஒரு வழியில் அந்தப் பிணக்கு நிலை மாறி முன்னேற்றம் ஏற்படும் என நாம் உறுதியோடு இருப்பதனால் எமக்கு உள்ளே இருந்து ஓர் உள் உணர்வு தோன்றி அகத் தளங்களின் குழப்பங்களை நீக்கி ஒரு இணக்கமான முழுமைநிலையினைக் கொண்டுவரச் செய்கிறது.

## 06. காவியங்களின் உள்நோக்கம்

கீழைத்தேச அல்லது மேலைத்தேச மகாகவிகளினது காவியங்கள் யாவுமே வாழ்க்கை என்ற நாடகத்தையே சித்திரிக்கின்றன. ஒவ்வொன்றும் வெவ்வேறு சூழல்கள், நிலைமைகள், நிறங்கள் என்பவற்றைக் கொண்ட ஒரு நாடகமே ஆகும். ஒவ்வொரு சூழலும், நிலைமையும், நிறமும் தனித்தனியானது போலத் தோன்றலாம். ஆனால் ஒரு முழு நாடகம் என்ற வகையில் முழுமையான ஒரு காட்சியைக் காட்டுவதற்காக அவை ஒன்றுபடுத்தப்படுகின்றன. நடிகர்கள் தத்தமது பாத்திரத்தைப் பொறுத்தவரையில் தொடர்பில்லாத தனிப்பட்டவர்களே. நாடகத்தில் பங்குகொள்ளும் ஒவ்வொரு நடிகரும் ஒரே காட்சியையோ ஒரே நிலைமையையோ முன் வைப்பதில்லை. ஒவ்வொருவரது நடிப்பும் மற்றவர்களின் நடிப்புகளில் இருந்தும் வேறுபட்டதே. ஆனால் முழு நாடகத்தையும் நோக்கும்போது அங்கே ஒரு முழுமையைக் காணலாம். அங்கே எதுவும் ஒத்திசைவற்ற குழப்பமாக இருக்காது.

நாடகத்திலுள்ள ஒத்திசைவினாலேயே அதனை நாம் இரசித்து அனுபவிக்கின்றோம். முழு நாடகமும் நடிக்கப்பட்ட பின்பு நாம் முன்பு எதிர்பாராத அளவுக்கு மகிழ்கின்றோம். "அது ஓர் அரிய சாதனை", என மனதிற்கு உள்ளே நினைக்கின்றோம். அந்த எண்ணத்துட னேயே நாடகக் கொட்டகையைவிட்டு மகிழ்ச்சியோடு வெளியேறுகின்றோம். அதற்குப் பதிலாக, "அந்த நடிகன் அப்படி நடித்தான்", "இந்த நடிகன் இப்படி நடித்தான்", "அவர்களுக்கிடையே தொடர்பில்லை" என்று நாம் கூறுவதில்லை. தனித்தனிச் சம்பவங்கள் தனித்தனி நடிகர்களினால் காட்டப்பட்டபோதும் அவற்றையெல்லாம் சேர்த்து ஒன்றுபடுத்தி ஒரு முழுமையினை நாம் உணர்கின்றோம். தனித்தனி நடிகர்களினால் நடிக்கப்படுபவற்றைத் தனித்தனி வித்தியாசமானவை யாகப் பார்ப்போம் ஆயின் முழு நாடகத்திற்குப் பதிலாக ஒரு குழப்ப நிலையையே காண் போம். ஆனால் அந்தத் தனித்தனிக் காட்சிகளுக்குப் பின்னால் உள்ள முழுமையே எம்மை எதிர்பாராதபடி ஆனந்திக்க வைக்கின்றது. அதுவே மகா காவியங்களை எழுதுவதன் உள்நோக்கம் ஆகும்.

## 07. நாடக இயக்குனரை அறியாத நடிகர்.

பிரபஞ்சப் படைப்பு என்ற நாடக வடிவத்தின் பின்னால் உள்ள முழுமையினைப் பார்க்கக்கூடிய ஒரு நிலையில் நாம் எப்பொழுதும் இருப்பதில்லை. வாழ்க்கை என்ற நாடகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த மேடையை நடிகர்கள் ஆகிய நாம் பிரபஞ்சம் என்று அழைக்கின்றோம். ஆங்கில நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியர் "உலகம் முழுவதும் ஒரு நாடக மேடை" என்கிறார். மனிதர்களாகிய நாம்தான் அந்த மேடையில் நடிக்கின்ற நடிகர்கள். ஆனால் இந்த நாடகத்தில் நடித்துக்கொண்டு இருக்கின்றோம் என்பதை நாம் எப்பொழுதும்

உணர்ந்து கொள்வதில்லை. அந்த உணர்வு எங்களிடத்தே உள்ள ஏதோ ஒரு எதிர்பாராத நிகழ்வினால் எங்களிடம் இருந்து பறித்து எடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஒரு நாடக நிகழ்ச்சியில் ஒரு பாத்திரம் ஏற்று நடிக்கும் ஒருவரது விதியினை இங்கே அவதானிப்போம்.

அவர் தனக்கும் ஏனைய நடிகர்களுக்கும் இடையே உள்ள தொடர்பை மறந்து விடுகிறார் எனவும் எடுத்துக்கொள்வோம். முற்றுமுழுதும் தனிப்பட்ட ஒருவராகவே அவர் மேடையில் நடந்து கொள்வார். நாடகத்தின் முழுமைக்கும் அவரது நடிப்புக்கும் எதுவித தொடர்பும் இல்லாமல் இருக்கும். அந்த நாடகத்திற்கு ஒரு நெறியாள்கை இருப்பதனையும் அவர் அறியமாட்டார். அந்த நாடகத்துக்குப் பின்னாலுள்ள உள்நோக்கத்தையும் அவர் அறியார். அவர் முற்றும் சுதந்திரமானவர். ஆகவே மேடையில் நடித்துக்கொண்டு இருப்பார். அதனால் அந்த நாடகத்துக்குத் தொடர்பில்லாத ஒரு தனிக் காட்சியை அவர் நடித்துக் காட்டிக்கொண்டு இருப்பார். மற்ற எல்லோரும் அவரைப் பார்த்துப் பரிதாபப்படுவார்கள். அவர் முழு நாடகத் தையுமே பாழாக்கி விடுவார். உண்மையில் இதைத்தான் நாம் ஒவ்வொருவரும் செய்துகொண்டு இருக்கின்றோம்.

இந்த உலகமாகிய நாடகமேடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நாடகத்துக்குப் பின்னாலுள்ள நோக்கத்தினையும், அதன் முழுமையில் நாம் ஒவ்வொருவரும் ஓர் அங்கம் என்பதையும் அறிந்துகொள்ளாது இருக்கின்றோம். இந்த உலக வாழ்க்கை என்ற நாடகத்தின் இயக்குனர் எல்லாம் வல்ல கடவுள்தான் என்பதையும் அறியாது உள்ளோம். இந்த நாடகத்தின் பூரணத்தன்மை அவரது தூரநோக்கே ஆகும். இந்தப் பிரபஞ்சப் படைப்பு என்ற அதிசயக் காட்சிக்குப் பின்னால் உள்ள அந்த முழுமையின் நிலைப்பாட்டையே பகவத்கீதை எடுத்துக் கொள்ளுகின்றது. அத்துடன் ஒன்றோடொன்று தொடர்புபடாத தனிப்பட்டனவாக எல்லாம் காணப்படுகின்றதனால் பிணங்கிக் கொள்வனபோலத் தோற்றமளிக்கும் சக்திகளுக்கு இடையே ஓர் ஒத்திசைவை அவதானிக்க வேண்டிய தேவையும் உள்ளது. அதிலுள்ள சிக்கல் யாதெனில் பிரகிருதியின் முக்குண ஆற்றல்களில் ஒன்று எம்மிடம் மேம்பட்டு இருக்கின்றது என்பதாகும். சில நேரங்களில் அந்த ஆற்றலுக்குக் கட்டுப்பட்டவர்களாகி அதிலேயே நாம் சார்ந்து நிற்கின்றோம்.

## 08. விஞ்ஞானமும் சத்துவ குணமும்.

எங்களை வெளிப்புறமாகச் செயற்பட வைக்கும் இராசத குணம், சமநிலையில் செயற்பட வைக்கும் சத்துவகுணம் என்ற இரண்டையும் விட மூன்றாவதான தாமச குணமும் ஒன்றுண்டு. பௌதிக இயற்கலைச் சொற்களான நிலையான ஆற்றல், இயங்கும் ஆற்றல் என இரண்டு ஆற்றல்களை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். விஞ்ஞானத்தில் சத்துவ குணத்திற்கு இடமே இல்லை. விஞ்ஞானம் சத்துவ குணத்தைப் பற்றிச் சிந்திக்க விரும்புவதும் இல்லை. அது நிலையான ஆற்றல், இயங்கும் ஆற்றல், அதாவது தாமசகுண, இராசத குண ஆற்றல்கள் செயற்படும் சில முறைகளை மட்டுமே எமக்குக் காட்டுகின்றது. எல்லாமே இந்த இரண்டு ஆற்றல்களில் ஒன்றோ இரண்டும் ஏதோ அளவுகளில் சேர்ந்தோ செயற்படுவதை மட்டும் விளக்குவதோடு விஞ்ஞானம் நின்றுவிடும்.

(தொடரும்...

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

கற்றவர்களால் மூடன் என்று சொல்லப்படுபவர்கள் யார்?

நல்வழி காட்டும் நூல்களைப் படிக்காதவனாக இருந்தும், கர்வத்தோடு இருப்பவன்

தரித்திரனாக இருந்தும், வள்ளல் தனம் உடையவன்.

(பெரும் மனக்கோட்டைகளைக் கட்டுபவன் எனவும்)

இழிவான காரியங்களால், செல்வத்தை அடைய விரும்புபவன்.

தன் காரியத்தை விட்டுவிட்டு, அடுத்தவன் காரியத்தைச் செய்பவன்.

நண்பன் விடயத்தில் கபடமாக நடப்பவன்.

தன்னிடம் விருப்பமில்லாதவர்களை விரும்புபவன்.

(வலிந்து நட்புக் கொள்ள நினைத்தல்)

தன்னை விரும்புபவர்களை உதாசீனம் செய்து விலகி நிற்பவன்.

பலசாலியைப் பகைத்துக் கொள்பவன்.

பகைவனை நண்பனாக நினைத்து, ஒட்டி உறவாடுபவன்.

நண்பனிடம் பகைகொண்டு, அவனுக்குத் துன்பம் செய்பவன்.

தீய செயலை மனம் கூசாமல் செய்யத் தொடங்குபவன்.

தான் செய்யவேண்டிய காரியங்களை, அடுத்தவர்களை விட்டுச் செய்யும்படி செய்பவன்.

எல்லாக் காரியங்களிலும் சந்தேகம் கொள்பவன்.

விரைந்து செய்யவேண்டிய காரியத்தை தாமதமாகச் செய்பவன்.

முன்னோர்களுக்கு திவசம் (சிரார்த்தம்) செய்யாதவன்.

அழைப்பில்லாமல் ஒரு இடத்திற்குச் செல்பவன்.

இறை வழிபாட்டில் ஈடுபடாதவன்.

கேட்கப்படாதபோது அதிகமாகப் பேசுபவன்.

தான் தவறு செய்பவனாக இருந்துகொண்டு, அடுத்தவர் தவறு செய்யும்போது திட்டுபவன்.

கோபம் புகமுடியாத இடத்தில் கோபம் கொள்ளுதல்.

தன் பலத்தை அறியாமல், அறம் பொருள் முதலானவைக்கு விரோதமானதும், அடைய முடியாததுமான விடயத்தை முயற்சி இல்லாமலேயே அடைய விரும்புபவன்.

உபதேசம் செய்யக்கூடாதவனுக்கு உபதேசம் செய்பவன்.

உபதேசம் செய்ய வேண்டியவனுக்கு உபதேசம் செய்யாதவன்.

அருகில் பலர் இருக்க, தான் ஒருவன் மட்டும் உணவு உட்கொள்பவன்.

பாவமாகிய தீங்கை ஒருவன் செய்வதால், பலர் துன்பப்படுகிறார்கள். இலாபம் வந்தால், அவனைச் சார்ந்த பலர் அனுபவிக்கிறார்கள். ஆனால் பாவத்தால் வரும் தண்டனையை, அதைச் செய்தவனான, அவன் மட்டுமே அனுபவிக்க வேண்டும்.

வில்லாளியால் விடப்பட்ட அம்பானது, ஒருவனைக் கொல்லும்; அல்லது கொல்லாமலும் இருக்கும். ஆனால் புத்திமானால் பிரயோகம் செய்யப்பட்ட செயலானது, அரசனோடு அவன் இராஜ்யத்தை அழித்துவிடும்.

### சுக வாழ்வு வாழ்பவன்

புத்தி ஒன்றினால், செய்யவேண்டியது, செய்ய வேண்டாதது என்னும் இரண்டையும் தீர்மானம் செய்து, நண்பன், விரோதி, அலட்சியம் செய்பவன் என்னும் மூன்று பேர்களையும், சாம பேத தான தண்டம் என்னும் நான்கினாலும் வசப்படுத்த வேண்டும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தையும் வெல்லவேண்டும். இணைப்பது, பிரிப்பது, பெயர்ச்சி, இருப்பது, இருமனப்படுத்துவது, சார்ந்து சேர்வது என்னும் ஆறு குணங்களையும் அறிய வேண்டும். பெண்ணாசை, சூதாட்டம், வேட்டை, மதுபானம், கடும்சொல், கடும் தண்டனை, செல்வத்தை வீணாக்குவது என்னும் ஏழையும் நீக்க வேண்டும் இப்படி வாழ்பவன், சுகவாழ்வு வாழ்பவனாவான்.

### தவறான ஆலோசனை

விடம், குடிப்பவன் ஒருவனைத்தான் கொல்லும். ஆயுதத்தால், ஒருவனே கொல்லப் படுகிறான். ஆனால், தவறான ஆலோசனையோ, இராஜ்யத்தோடும் மக்களோடும் அரசனையே கொல்லும்.

### கூடாதவை சில

உருசியான பண்டத்தை ஒருவனாகச் சாப்பிடக்கூடாது, தனி ஒருவனாக எந்த விடயத் தையும் தீர்மானிக்கக்கூடாது. தனி ஒருவனாக வழிப்பயணம் போகக்கூடாது. தூங்குகின்றவர்கள் நடுவில் ஒருவன் மட்டும் விழித்துக் கொண்டிருக்கக்கூடாது.

கடலைக் கடக்க ஓடம் பயன்படுத்துவதைப்போல, சத்தியமானது சொர்க்கத்திற்குப் படிக்கட்டாய் இருக்கிறது.

### பொறுமையின் பெருமை

சக்தி இல்லாதவர்களுக்குப் பொறுமையானது குணமாக அமைகின்றது. சக்தி உள்ளவர் களுக்கும் பொறுமை என்பது அலங்காரமாகவே இருக்கும். உலகத்தில், எல்லோரையும் வசப்படுத்துவது பொறுமையே ஆகும். பொறுமையால், எதைத்தான் சாதிக்க முடியாது?

குப்பை இல்லாத இடத்தில் விழுந்த நெருப்பானது தானே அணைகிறது. பொறுமை இல்லாதவன், தன் குற்றங்களுக்கும் பிறர் குற்றங்களுக்கும் பொறுப்பு உள்ளவனாகின்றான்.

தர்மம் ஒன்றே சிறந்ததான நன்மையைத் தரும். பொறுமையே உத்தமமான சாந்தியைத் தரும். கல்வியே மேலான திருப்தியைத் தரும். அகிம்சையே சுகத்தைத் தரும்.

### இரட்டை விபரங்கள்

மற்றவர்களால் போற்றப்படும் ஒருவனை, அதற்கான காரணங்கள் தெரியாமலே, தானும் போற்றிவரும் மூடன்; அடுத்தவர் ஆசைப்படும் பொருளையே தானும் விரும்பும் பெண் என்னும், இந்த இரண்டு பேர்களும் சொந்த புத்தி இல்லாதவர்கள்.

கடுமையாக ஒரு வார்த்தையும் சொல்லாமல் இருப்பது தீயவர்களை ஆதரிக்காமல் இருப்பது என்னும் இரண்டு காரியங்களையும் செய்யும் மனிதன் இந்த உலகில் ஒளிவீசித் திகழ்வான்.

செல்வம் இல்லாதவனுடைய விருப்பமும், சக்தி இல்லாதவனுடைய கோபமும், உடம்பை வற்றச் செய்யும் கூர்மையான முட்கள்.

முயற்சி இல்லாத இல்லறத்தானும், காரியங்களோடு கூடிய சந்நியாசியும் தங்கள் மாறுபட்ட கொள்கைகளினாலேயே மேன்மை அடைவதில்லை.

சக்தி இருந்தும் பொறுமையுடன் இருப்பவன், தரித்திரனாக இருந்தும் தானம் செய்பவன் என்னும் இரண்டு வகை மனிதர்களும் சொர்க்கத்தைவிட உயர்ந்த இடத்தில் இருப்பவர்களாக எண்ணப்படுகிறார்கள்.

நியாயமாகச் சம்பாதித்த பொருளைக் கொடுக்கக் கூடாதவர்களுக்குத் தானமாகக் கொடுப்பதும், கொடுக்க வேண்டிய நல்லவர்களுக்குத் தானமாகக் கொடுக்காமல் இருப்பதுமான இரண்டுமே தவறு என்று தெரிந்துகொள்ள வேண்டும். தானம் செய்யாத செல்வந்தனும், பொறுமை இல்லாத தரித்திரனும் இருந்தும் இறந்தவர்களே.

பொந்தில் உள்ள தவளை முதலானவைகளைப் பாம்பு எப்படி விழுங்கி விடுகின்றதோ அதேபோலப் பகைவனிடம் விரோதம் கொண்டு போர்புரியாத மன்னனையும், நாடெங்கும் சேவை செய்யாத அந்தணனையும், இந்தப் பூமி விழுங்கி விடுகிறது.

யோகியான சந்நியாசி, யுத்தகளத்தில் ஆயுதம் ஏந்திக் கடும்போர் புரிந்து மரணமடைந்த வீரன்- இந்த இருவரும், சூரிய மண்டலத்தைப் பிளந்து கொண்டு உயர்கதி அடைவார்கள்.

விதுரர், திருதராஷ்டிர மன்னனுக்கு ஒன்று முதல் பத்துவரை வகைப்படுத்தப்பட்ட விடயங்களை விளக்குகிறார். பொதுவாழ்வில் இப்பத்துவகைக் கருத்துக்களும் வாழ்வை வளமாக்கப் பயன்படும்.



### அஞ்சலி

சந்நிதியான் ஆச்சிரமத்தோடும், சைவ கலை பண்பாட்டுப் பேரவையினோடும் நீண்டகாலத் தொடர்பு கொண்டவரும், பேரவையின் வாராந்த நிகழ்வுக்கு மெரு கூட்டியவருமான திரு ச. லலீசன் அவர்களின் தாயார் திருமதி நவமணி சந்திரமௌலீசன் அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-பேரவையினர்-

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

கைதடி செல்வபதி திரு க.ச. கணபதிப்பிள்ளை என்பவர் கடிதம் மூலம் எமக்கு ஓர் கோரிக்கை விடுத்திருந்தார். அவர் தமது மடலில் இச்சிவனது அபிமான பக்தர் என்பது வெளிப் படையாகியதுடன் பிரச்சனைக்குமுன் 1975இல் (70பதுகளில்) மிகச் சிறப்பான அற்புத விழாக் கள் இவ்வாலயத்தில் நடந்ததாகவும் அக்காலத்தில் இங்கு பெரும் கடைகள் நடாத்திய முதலாளிமாரின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தின் பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்களின் விசேட மேளக்கச்சேரிகளுடன் ஆனிஉத்தரத் திருவிழா ஆனந்தக் கூத்தனுக்கு ஆண்டாண்டு தோறும் வெகு விமரிசையாக நடந்ததாகவும் இதன் சான்றாக 13.07.1975ந் திகதிய தினகரன் வார மஞ்சரியின் போட்டோ பிரதிகளையும் இணைத்திருந்தார். அதன் சாரம்சத்தை மட்டும் வாச கர்களுடன் பகிர்வது இச்சிவனுக்குச் சிறப்புச் சேர்ப்பதுடன் இப்பகுதியில் சிவமணங் கமழ் வதற்கும் சான்றாகும் எனக் கருதுகிறோம்.

பொலநறுவை ஆலயங்களுள் தன்னிகரற்ற இவ்வானவன் மாதேவி ஈஸ்வரம் நாளை ஆனி உத்தரவிழா என்ற தலைப்பில் வரலாற்று விரிவுரையாளர் பேராசிரியர் கா. இந்திரபாலாவின் கட்டுரையினையும் பிரதியாக இணைத்திருந்ததுடன் இப்பொலநறுவை தமிழ் மன்னர்களின் இராசதானியாக இருந்தபொழுது எத்துணை சிறப்பாக இருந்திருக்கும் என்பதைக் கற்பனைக் கண்கொண்டு பார்த்தால் புலனாகும் எனவும் இங்கு தமிழ் மக்கள் குறைவாக வாழ்வதனாலும் வழிபடுவோர் தொகை குறைவாக இருப்பதாலும் இந்துசமய ஸ்தாபனங்கள், சைவத் தொண டர்கள் ஒன்றுசேர்ந்து சிரத்தை கொள்ளுதல் அவசியம் என்ற சாரத்தை உள்ளடக்கியிருந்தது. ஆக கண்டோம் கதிர்காமம் வாசகர்களின் உள்ளத்தையும் தட்டி நிற்கின்றது என்பது ஆனந்தமே.

இத்தகு பெருமை மிகு வானவன் மாதேவி ஈஸ்வரப் பெருமானைத் தரிசித்த ஆனந்த அனுபவத்துடன் இன்றும் இச்சிவன் மகப்பேறளிக்கும் மகாசிவன் என்பதை வாசகர்களின் உள்ளத்திலும் பதித்த எம் பிரயாணம் செவனப்பிட்டி அன்னை சாரதா அறநெறிப் பாடசாலை யினை நோக்கித் தொடர்கிறது. இங்கு நாம் சென்றதும் அவர்களின் அன்பான உபசரிப்புடன் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட கூரைத்தகடுகள் போடுவதற்குரிய கட்டிட வேலைகளின் முன்னேற் றத்தைப் பார்வையிட்டோம். கூரைத்தகடுகள் போடுவதற்குரிய கூரை வேலைகளைச் செய்வதற் குரிய கட்டுமானங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. வெகுவிரைவில் பூர்த்தியாகும் என்ற செய்தியையும் அறிய முடிந்தது.

ஆச்சிரம சுவாமிகளும் அப்பாடசாலை ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை யினை வழங்கியதுடன் தம்பிலுவில் சிவன் கோட்டத்தினரின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் பங்குபற்றுவதற்காக எமது பயணம் தம்பிலுவிலை நோக்கிச் செல்கிறது. வழமையான எங்கள் வழித்தடத்தினூடு சென்று பி.ப.3.30 மணியளவில் தம்பிலுவிலை அடைந்தோம். அங்குள்ள ஓர் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகிலுள்ள 20'x60' விஸ்தீரணமுள்ள ஓர் பொதுநோக்கு மண்டபத்தில் கூட்டம் ஒழுங்குபண்ணப்பட்டிருந்தது. எங்கள் வரவை ஆவலோடு காத்திருந்தமை புலப்பட்டது. இவ்விழாவில் மூன்று நிகழ்வுகள் ஒழுங்கு பண்ணப்பப்பட்டிருந்தன.

1). இலவச அந்திமகால ஒலிபெருக்கிச் சேவை.

2). இலவச கணணி கற்பித்தல் சேவை.

3). வறுமைக்கோட்டின் கீழுள்ளோருக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் சேவை.

என்பனவாகும்.

உண்மையில் இக்கிராமம், கிராம மக்கள் எப்படியான இக்கட்டான சூழலில் வாழ்கிறார்கள் என்பதனை நாம் தரிசித்த காட்சிகளும் மக்களும் தெளிவாக்கியதை முதலில் தெரிவிக்கிறேன். பல்வேறு வகையான நெருக்கடிகளுக்கும் முகங்கொடுத்து சமயத்தையும் வளர்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். முத்துமாரியம்மன் ஆலயமும் எங்கள் ஆலயங்களைப் போல படாடோபமாக இல்லை. இம்மக்கள் தமது மரணச் செய்தியைக்கூட அறிவிப்பதற்குரிய வசதியற்று ஓட்டோ ஒலிபெருக்கிச் சேவை என்பவற்றைச் செலுத்த நாதியற்ற நிலையில் உள்ளதைக் குறிப்பிட்டு அவர்களுக்கு ஓரளவு ஆறுதல் கொடுக்கும் வண்ணம் இங்குள்ள சைவநெறி கூடத் தொண்டர்களின் பணிகளில் ஒன்றாக இவ்விழா இன்று ஒழுங்குபண்ணப்பட்டிருந்தது. உண்மையில் எங்கள் ஊர்களை ஒப்பிட்டால் எமது ஊர்களில் சந்திக்குச் சந்தி, கடவைக்குக் கடவை எத்தனை ஓட்டோக்களைக் காணலாம். ஆனால் இங்கோ இங்குள்ள மக்கள் தொகையுடன் ஒப்பிடும் அளவுக்கு இவ்வசதியில்லாதிருப்பதுடன் குறிப்பாக பிரசவ நேரங்களில் கர்ப்பிணித் தாய்மார்களை பல மைல்கள் தொலைவில் உள்ள வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்வதே இவர்களுக்குச் சவாலாக இருப்பதை உணர்வீர்களாக. இவற்றிற்கெல்லாம் விடிவாக இச் சைவநெறிக்கூடத் தொண்டர் அமைப்பினர் இக் கர்ப்பிணித்தாய்மாருக்கான இலவச ஓட்டோச்சேவை ஒன்றையும் ஏற்படுத்தியிருந்தார்கள் என்பதையும் அறிய முடிந்தது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கான இலவச ஓட்டோச் சேவையுடன்கூட இன்று விசேட ஒலிபெருக்கி மரண அறிவித்தல் சேவையினையும் இச் சைவநெறிக்கூடத் தொண்டர் அமைப்பைச் சார்ந்த இளைஞர்கள் அங்குரார்ப்பணஞ் செய்தமை எமக்கு அளவில்லா ஆனந்தத்தை அளித்துள்ளது.

அதுமட்டுமல்ல இச் சைவநெறிக்கூடத் தொண்டர் அமைப்பினரது முன்மாதிரி எம்மிளைஞர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையட்டும். ஆம் சந்நிதியான் ஆச்சிரமத்தின் குடநாடு கடந்த சேவைகளை முன்னெடுத்து மலையகஞ் சென்றவேளைகளிலெல்லாம் எம்மை முந்திக்கொண்டு இவ்விளைஞர் அமைப்பினர் பதுளை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் நின்று எம்மை வரவேற்றதையும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருந்தும் என நினைக்கிறேன். இவர்கள் இங்கிருந்து (தம்பிலுவில்) மோட்டார் வண்டிகளிலே இவ்வளவு கிலோமீற்றர் பயணஞ் செய்து எம்மோடிணைந்தார்கள். இளைஞர் சமுதாயம் சீரழிகின்றது என்பது ஒரு பக்கம் இருப்பினும் இப்படியான சேவை மனப்பான்மையுள்ள இளைஞர்களும் எம்மத்தியில் இருக்கிறார்கள் என்பது சற்றுத் தெம்பைத் தருகின்றது.

இரண்டாவதாக இலவச கணணி பயிற்றும் சேவையை சுவாமிகளும் எமது சைவ மகா சபையினரும் ஆரம்பித்து வைத்தார்கள். இக்கணணிகள்கூட (படம்) ஐக்கிய இராச்சியத்திலுள்ள சைவ மகா சபையினரின் தொண்டர்கள்மூலம் சேகரிப்புச் செய்து அனுப்பியதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். அத்துடன் வறுமைக்கோட்டின் கீழுள்ள மிகவும் வறிய பிள்ளைகளுக்கான வாழ்வாதார உதவிகள் 20 பேருக்கு வழங்கப்பட்டு அவர்களது அருமையான தயிர்சாதத்துடன் எமது ஆகாரத்தை நிறைவு செய்து எமது பயணம் தொடர்கிறது..

(தொடரும்...

(கட்டுரைத்தொடர் - 15

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## குதம்பைச் சித்தர்

குதம்பை என்பது பெண்கள் காதிலே அணிம் ஒரு ஆபரணம். குதம்பை அணிந்த பெண்ணைக் குதம்பாய் என அழைக்கிறார் குதம்பைச் சித்தர். குதம்பை அணிந்த பெண்ணை முன்னிலைப் படுத்திப் பாடியிருப்பதால் இவருடைய பெயரைக் குதம்பைச் சித்தர் என அழைக்கிறார்கள். குதம்பைச் சித்தருடைய பாடல்களிலே யோகத்தையும் ஞானத்தையும் புகழ்ந்து பேசுவதைக் காணலாம். இவருடைய பாடல்கள் எளிதிலே பாடக்கூடிய இனிமையான இசைப் பாடல்களாகவே காணப்படுகின்றன.

குதம்பைச் சித்தர் பாடல்களில் முப்பத்திரண்டு பாடல்களே காணப்படுகின்றன. ஆனால் யோக ஞான சாத்திரத்திரட்டு என்னும் நூலில் குதம்பைச் சித்தர் பாடல்களாக இருநூற்றி நாற்பத்தாறு பாடல்கள் உள்ளன. இவருடைய பாடல்கள் கவிநயம் மிக்கவையாக உள்ளன. எதுகையும் மோனையும் கொஞ்சிக் குலாவுகின்றன. எளிமையில் இனிமை சொட்டுகின்றது. அரிய பொருள்களும் அவர்தம் சொல்லாட்சியின் எளிமைக்குள் அகப்பட்டுப் பளிச்சிடுகின்றன. சித்தர் பாடல்களில் கூறப்பட்டுள்ள இவருடைய முப்பத்திரண்டு பாடல்களும் பட்டறிவினால் அநுபூதி ஞானத்தினால் வெளிப்பட்ட பாடல்களாகக் காணப்படுகின்றன. யோக ஞான சாத்திரத் திரட்டில் கூறப்பட்ட பாடல்கள் நூலறிவினால் பெறப்பட்டவையாக உள்ளன. இந்த இரண்டு வகையான பாடல்களும் ஒருவரால் பாடப்பெறவில்லை என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இவ்வாறு இடைச் செருகல்கள், பிற்சேர்க்கைகள் தமிழ்மொழியில் வெளிவந்த பல நூல்களில் காணப்படுகின்றன.

சித்தர்களின் சமயம் உருவ வழிபாடு கடந்தும்; தலயாத்திரை, தீர்த்த யாத்திரை, விழாக்கள் ஆகிய யாவற்றையும் புறக்கணிப்பது; புறக்கோலங்களில் கருத்துச் செலுத்தாமல் அகவுணர்வுகளிலேயே அழுத்தமாக ஊன்றி உயிர்களுக்கெல்லாம் உரிமைத் தொண்டு செய்தலையே உயிர்ப்பாகக் கொண்டது. யோகநெறி, பக்திநெறி, புறப்பூசை முதலியவற்றைப் பழிப்பன போன்ற பாடல்கள் பல இங்கு காணப்படுகின்றன. ஆடம்பரங்கள் வேண்டாம், விழா வேண்டாம், சிறப்பான தனியுடை வேண்டாம் என்பன போன்ற கருத்துக்கள் பலவற்றைத் தமது பாடல்களில் வெளிப்படுத்துகின்றார். உள்ளத் துறவினால் வரும் அத்துவித நிலையே உயர் வானது என வலியுறுத்துகின்றார். பாமர மக்களுடைய மொழியில் பாடல்களைத் தந்திருப்பதால் சாதாரண மக்கள் மத்தியில் இவருடைய பாடல்கள் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளன.

வாழ்வை நீடிக்கச் செய்யும் மருந்துகள், மூலிகைகள் கற்பங்கள் என அழைக்கப்படும். உண்மைப் பொருளை அறிந்து விளங்குகின்ற மெய்ஞ்ஞானிகளுக்கு உடலை வலுப்படுத் தக்கூடிய காயகற்பம் போன்ற மருந்துகள் எதுவும் தேவையில்லை. சஞ்சலமற்ற அவர்களின் உள்ளமே அவர்களுக்கு நோயற்ற வாழ்வை அளிக்கும். உண்மைப் பொருளை அறியாத அஞ்ஞானிகள் தான் காயகற்பம் தேடி அலைவார்கள் என்பதைப் பின்வரும் பாடலின் ஊடாக குதம்பைச் சித்தர் வெளிப்படுத்துகின்றார்.

மெய்ப்பொருள் கண்டு விளங்கும் மெய்ஞ்ஞானிக்குக்
கற்பங்கள் ஏதுக்கடி? - குதம்பாய்
கற்பங்கள் ஏதுக்கடி?

புராண இதிகாசக் கதைகளை மேற்கோள் காட்டிக் கருத்தை விளக்கும் முறையைத் தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். சைவத் தமிழ் மக்களின் பெரும் பொக்கிஷமாகப் போற்றப்படுகின்ற பன்னிரு திருமுறைகளில் புராண இதிகாசக் கதைகள் பல இடம்பெற்றுள்ளன. சிவனுடைய முடியையும், அடியையும் காணப் பிரம்மாவும், விஷ்ணுவும் முயன்று தோல்வி கண்ட வரலாறு புராணக் கதைகளிலே கூறப்பட்டுள்ளது. குதம்பைச் சித்தரின் பாடல் ஒன்று அடிமுடி தேடும் கதையைக் குறிக்கும் போக்கில் அமைந்துள்ளது. சித்தர் பாடல்களில் பெரும்பாலானவை மறைபொருட் கருத்துக்களை உடையனவாகவே காணப்படுகின்றன.

ஆதாரமான அடிமுடி கண்டோர்க்கு
வாதாட்டம் ஏதுக்கடி? - குதம்பாய்
வாதாட்டம் ஏதுக்கடி?

என்பது குதம்பைச் சித்தரின் பாடல். இப்பாடலில் புராணக் கருத்துக் கூறப்படவில்லை. அரிய தத்துவக் கருத்து மறைபொருளாக விளக்கப்பட்டுள்ளது. அடி என்பது காலையும் முடி என்பது தலையையும் குறிக்கும். மானிடர்களாகிய நாம் தங்கியிருக்கும் இந்த உடம்பு இறைவன் வீற்றிருக்கும் கோயில் என்பதே சித்தர்கள், ஞானிகளின் கொள்கையாகும்.

"உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பு ஆலயம்"
"உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்"

என்பவை தவயோகி திருமூலநாயனாரின் வாக்குகள் ஆகும். அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் இறைவனை இந்தப் பிண்டமாகிய உடம்பிலே கண்டவர்கள் சித்தர்கள். இவர்கள் தங்களுடைய நூல்களிலே வேகாக்கால், சாகாத்தலை, போகாப்புனல் என அடிக்கடி குறிப்பிடுவதைக் காணலாம். இவற்றில் கால் என்பது கீழான மண் தத்துவம்; தலை என்பது மேலான விண் தத்துவம். எனவே மண் முதல் விண் வரையுள்ள பஞ்சபூதங்களின் இயல்பை உணர்ந்தவர்களுக்கு அப்பூதங்களினால் ஆன அனைத்துப் பொருள்களின் இயல்பையும் அறியமுடியும்.

தாம் பாடும் பாடல்களிலே குழூஉக்குறிச் சொற்களைப் பயன்படுத்தும் முறையைச் சித்தர்களே அறிமுகம் செய்தனர். இவ்வகைக் குழூஉக்குறி ஆட்சி இவர்களுடைய பாடல்களுக்குச் சிறப்பினைத் தருகிறது. சாதாரண நிலையில் எளிமையாகத் தோற்றம் அளிக்கும் சொற்களைப் பயன்படுத்தி ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் தன்மை சித்தர் பாடல்களுக்கு உண்டு. இதனை ஏமாற்றும் எளிமை எனக் குறிக்கலாம்.

தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி? - குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி?.

எனக் குதம்பைச் சித்தர் உட்பொருள் வைத்து இப்பாடலைப் பாடியுள்ளார். இதனை உணராமல் தாவாரமும் வீடும் இல்லாதவன் தேவாரத்தை ஏன் படிப்பான்? அதனால் பயன் எதுவும் இல்லை என்று கூறுவது மறைபொருட் கருத்துக்களை விளங்காதவர்களின் பிதற்றலாகும். தாவாரம் என்பது தா+வாரம் எனப் பிரியும்; பிறர் படுகின்ற துன்பத்தில் பங்கு கொள்ளாதவனுக்குத்

தேவாரம் படிப்பதால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை. பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை தனக்கு ஏற்பட்ட துன்பமாகக் கொண்டு வடிக்கும் அருட் கண்ணீரே இறைவனுக்குச் செய்யும் அபிஷேகம் ஆகும். பிறர்க்கு உதவியாக வாழ முடியாத சுயநலமிகள் தேவாரம் பாடுவது நீரில் உள்ள தவளைகள் ஒன்று சேர்ந்து கத்துவது போலவே இருக்கும். மற்றவர்களுடைய துன்பத்தை துடைக்க வேண்டும் என்ற ஈர அன்பு அகத்திலே இல்லாதவர்கள் பாடும் தேவாரங்கள் தெருப்பாடல்களாகவே மாறிவிடும் என்கிறார் குதம்பைச் சித்தர்.

போகத்தை யோகமாக்கும் வழியைப் பரியங்க யோகத்தில் திருமூலர் குறிப்பிடுகின்றார். மனித உடலில் கீழ்நோக்குதல், மேல்நோக்கியிருத்தல் என இரண்டு நிலைகள் உள்ளன. உலகத்தை நோக்குதலால் சோர்வும், இறைவனை நோக்குதலால் சோர்வின்மையும் உண்டாகும். உடம்பின் மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை ஆறு ஆதாரங்களின் ஊடாக மேலே எழுப்புகின்ற ஞானிகள் அதனை யோக சக்தியாக மாற்றுகிறார்கள். பேரானந்த மயமான அமிர்தத்தைச் சுவைக்கிறார்கள். இதனை "உச்சியில் பிச்சை எடுத்தல்" எனச் சித்தபுருஷர்கள் கூறுகிறார்கள். பிரபஞ்ச மயக்கத்தில் வாழ்பவர்கள் குண்டலினி சக்தியைப் போக சக்தியாக மாற்றுகிறார்கள். யோக சக்தியாக மாற்றி அமிர்தத்தைச் சுவைத்தலை மாங்காயப் பால் என்றும், போக சக்தியாக மாற்றி வீண்விரயம் செய்வதை தேங்காய்ப் பால் என்றும் குதம்பைச் சித்தர் பின்வரும் தனது பாடலில் வெளிப்படுத்துகின்றார்.

மாங்காய்ப் பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி? - குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி?

ஐம்புலன்கள் ஞான ஒருமையிலே சேர்ந்து சுரக்கின்ற ஞானப்பாலை மாங்காய்ப்பால் என்கிறார் குதம்பைச் சித்தர். பசியையும் வேட்கையையும் மீறிய பேருணவாக ஞானப்பால் உடலினுள்ளே சொரிய ஆரம்பித்து விடும். ஞானப்பால் உண்டு, மலைமுகடாகிய தலை உச்சியிலே சிந்தனைகூடி நிலைத்து நிற்கும் ஞானிகளுக்கு உலக இச்சையாகிய பிற இன்பங்கள் வேண்டுவதில்லை என்பதை நாட்டுப் புறத்து மக்களின் மொழியிலே எளிய நடையிலே இந்தப் பாடல் விளக்குகிறது.

தன்னை அறியும் அறிவே ஞானத்தின் உயர்நிலையாகும். "தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை" என்பார் திருமூலர். தன்னை அறிந்தவன் தலைவனாகிய இறைவனை அறிவான். இறைவனை அடைவதற்குரிய தடைகளையும் அறிந்து அவற்றை நீக்கும் வழிகளையும் ஞானி அறிந்து கொள்வான். தலைவனாகிய இறைவனின் துணையில்லாமல் தான் இல்லை என்பதையும் உணர்ந்து கொள்வான். உலகியல் பற்றுக்கள் எல்லாம் பொய்யாகவே தோன்றுகிறது. அகத்திலே ஆன்ம ஞானம் பிரகாசிக்க ஆரம்பித்ததும் சீவான்மா சிவானந்தத்திலே ஆழ்ந்துவிடும். தவயோகி திருமூலர் தனது ஞானகுருவாகிய திருநந்தி தேவரின் உபதேச முறையாலே பேரறிவு பெற்றவர். பேரறிவின் பயனை நன்கு உணர்ந்தவராகிய திருமூலர் தான் அறிந்த ஆனந்த அனுபவத்தைப் பின்வரும் பாடலிலே தெளிவாக விளக்குகிறார்.

என்னை அறிந்திலன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலன்
என்னை அறியும் அறிவை அறிந்தபின்
என்னை விட்டு என்னை உசாவுகின்றேனே.

மெய்யைப் பொய்யினின்றும் வேறு பிரித்துக் காண்பது மிகக் கடினமான செயலாகும். பொய்யைப் பொய்யென்று காண்பதும், மெய்யை மெய்யாகக் கொள்வதும்தான் சித்தர்கள் காட்டும் சீரிய பாதையாகும். அறிவுக்கு இலக்கணம் கூறிய திருவள்ளுவரும் "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றே குறிப்பிடுகிறார்.

பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து நாய்போல் உழன்று பசித்தால் புசிக்கும் தன்மை உடைய சித்தர்கள் உலகியல் பற்றற்றவர்களாய்ச் செத்தாரைப் போன்றே திரிவார்கள். சலனமில்லாமல் நிலையாக நிற்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள். உலகியல் ஆரவாரங் களுக்குள்ளே அகப்பட மாட்டார்கள். விளம்பர வித்தைகளால் மயங்க மாட்டார்கள். "உற்றாரை யான் வேண்டேன்; ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்" என்ற திருவாசக வரிகளுக்கு இலக் கணமாக மாறிவிடுவார்கள். தான் யார் என்று தன்னை விளம்பரப்படுத்த வேண்டிய தேவை சித்தர்களுக்கு இல்லை. வேடங்களையும் ஆசாரங்களையும் புறச் சான்றுகளையுமே மதிக்கிற இந்த உலகத்தில் இவையொன்றும் இல்லாமல் பித்தரைப் போலும் பேயரைப் போலும் காட்சி தருபவர்கள்தான் சித்தர்கள். உலகியல் பந்த பாசங்களில் இருந்து விடுபட்டுச் செத்தவர்கள் போலத் திரியும் ஞானிகளுக்கு தம்மை வெளிப்படுத்தி வெளிச்சம் போட்டுக்காட்ட வேண்டிய தேவைகள் எதுவும் இல்லை என்பதைப் பின்வரும் குதம்பைச் சித்தரின் பாடல் வெளிப்படுத்துகிறது.

செத்தாரைப் போலத் திரியும் மெய்ஞ்ஞானிக்குக்
கைத்தாளம் ஏதுக்கடி? - குதம்பாய்
கைத்தாளம் ஏதுக்கடி?

யோக சித்தி பெற்றவர்களின் உடலில் ஓர் ஜொலிப்பு ஒளிமயம் தெரியும். இதைத் "தேஜஸ்" என்று கூறுவார்கள். பிரணாயாமப் பயிற்சி பெறுபவர்களின் உடல் பளிங்கைப்போல் ஒளிவீசிப் பிரகாசிக்கும். உடல் முதுமை அடைந்தாலும் இளமைத் தோற்றம் உண்டாகும். உடலில் நரை திரை மூப்பு என்பன ஏற்படாது. திருவருளோடு குருவருளும் கிடைத்து விட்டால் உடலானது காற்றையும் விட மென்மையானதாகிவிடும்.

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனுமாமே.

-திருமந்திரம்-

தபம் என்ற வடமொழிச் சொல்லுக்கு எரித்தல் என்பது பொருளாகும். யோகநெறியில் நின்று தபம் செய்தால் வினைகள் அனைத்தும் பொசுங்கிவிடும். தீய எண்ணங்களை நீக்கி யோக சித்தி பெற்றவர்களுக்கு பொன்னிறமான செவ்வொளியாகிய பேரொளி சிரசைச் சுற்றி ஒளிவட்டமாகத் தோற்றம்பெறும். அவர்களுடைய முகத்திலே ஞானஒளி பிரகாசிக்கும். இந்நிலையினை அடைந்தவர்களுக்கு மோகத்தை ஏற்படுத்தும் அழகுகள் எதுவும் தேவையில்லை எனக் குதம்பைச் சித்தர் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

வேகாமல் வெந்து வெளியொளி கண்டோர்க்கு
மோகாந்தம் ஏதுக்கடி? - குதம்பாய்
மோகாந்தம் ஏதுக்கடி?
(மோகாந்தம்- மோகத்தை ஏற்படுத்தும் அழகு)

மனம் தூய்மை இல்லாது செய்யும் தெய்வ வழிபாடு பயன் தராது; பொய், களவு, கள், காமம், கொலை, கோபம் ஆகியவை மனித இனத்தை நாசமாக்கி வீழ்த்தி விடும். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று வாழும் வாழ்க்கை பயனற்றது. அன்பு, இரக்கம், தொண்டு ஆகியவற்றைக் கொண்டவர்கள் வாழ்வே சிறந்தது என்பனவே சித்தர் பின்பற்றிய நெறிகள். மனத்தில் சாந்தி இல்லாவிட்டால் சஞ்சலங்கள் தோன்றும். சஞ்சலங்கள் நோய்க்கு வித்தாகும். சமநிலை இல்லாத மனநிலையே உடல்நோய், உளநோய் அனைத்திற்கும் காரணமாக உள்ளது. மானுட உடம்பு கடவுளைக் காண்பதற்காக ஏற்பட்ட பெரிய கருவி என்பதே சித்தர் ஞானத்தின் செம்பொருள் ஆகும். மானுடச் சட்டையாகிய உடல் இறைவன் வீற்றிருக்கும் கோயில் என்றே திருமூலரும் கூறுகின்றார். வஞ்சகர்களோடு ஒருநாளும் தொடர்பு கொள்ளக்கூடாது என்பதனை "வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்" என உலக நீதிப் பாடலும் குறிப்பிடுகிறது. தீவினைகள் நீங்கினால்த்தான் இறை நிலையை அடைய முடியும். இறை நிலையை அடைவதற்கு மனதில் சஞ்சலம் இருக்கவே கூடாது என்கிறார் குதம்பைச் சித்தர்.

வஞ்சகம் அற்று வழிதன்னைக் கண்டோர்க்குச்
சஞ்சலம் ஏதுக்கடி? - குதம்பாய்
சஞ்சலம் ஏதுக்கடி?

இறைவன் இந்த மனித உடம்பிலேயே நம் உள்ளத்திலேயே மறைந்து நிற்கிறான், இந்த உண்மையை உணர்ந்து உள்ளத்தில் நிற்கும் இறைவனைத் தரிசிப்பதே சித்தி என்று நம்முடைய சித்தர்கள் கண்டார்கள். இந்தச் சித்தியை மகத்தான இலட்சியமாக மக்களுக்கு உபதேசித்தார்கள். பாலுக்குள் மறைந்திருக்கும் நெய்போல நமது அகத்துள் அமர்ந்துறையும் அப்பனாகிய இறைவனைக் காணாது பலர் தவிக்கிறார்கள். ஊனக் கண்ணுக்குப் புலப்படாத இறைவனாகிய கள்வனை அடைவதற்காக மனமாகிய தேரினில் ஏறி அலைந்த நாட்டின் கணக்கினைச் சொல்ல முடியாது பலர் புலம்புகிறார்கள். இறைவனைக் கண்டுபிடிக்கத் திசை தெரியாமல் சிந்தனையைச் சிதறவிட்டு எங்கும் தேடுகிறார்கள். மக்களின் அறியாமையும் பயனற்ற முயற்சியும் இது என்கிறார் திருமூலர். தானும் எம் பெருமானாகிய சிவன் எங்கோ இருக்கிறான் என நினைத்து எண்ணங்களை அவனைத் தேடும்படி எல்லா இடமும் செலுத்தினேன். இறுதியில் இந்த உடம்புக்குள்ளேயே அவன் ஒளிந்திருப்பதைக் கண்டு கொண்டேன் என்கிறார்.

மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறியாதே புலம்புவர்
தேயமும் நாடும் திரிந்தெங்கள் செல்வனைக்
காய மின்னாட்டிடைக் கண்டு கொண்டேனே.

-திருமந்திரம்.

இறைவனுடைய பேரின்பத்தை நாடி அந்த முயற்சியில் ஈடுபட்டால் படிப்படியாக நான் என்னும் நிலை நீங்கி எல்லாம் அவனே என்ற தெளிவு உண்டாகிவிடும். இந்த உணர்வு வலுவடையும்போது உடம்பின் வேட்கை அழிந்துவிடும். தனிப்பட்ட உயிர் என்ற

அகங்கார உணர்ச்சியும் நினைப்பு மறப்பு என்ற மன உணர்ச்சியும் அடங்கிவிடும். இவை எல்லாம் நீங்கியபின் நான் என்கிற தனிநிலை தானாகவே அழிந்துவிடும். நானும் கரைந்து ஒழிந்துபோன பின்பு ஆனந்தம் மட்டுமே நிற்கிறது. பரம்பொருளோடு ஆன்மா கலந்துபோய் அந்த இரண்டற்ற ஆனந்தத்திலே திளைக்கும் நிலையை வார்த்தைகளால் கூறமுடியாது. இதுவே பேரானந்த நிலையாகும்.

தன்னை அறிவதன் ஊடாகத் தலைவனாகிய இறைவனோடு இணைந்தவர்களை உலகியல் ஆசைகள் எதுவுமே பற்றாது என்பதைத்,

தன்னை அறிந்து தலைவனைச் சேர்ந்தோர்க்குப்
பின்னாசை ஏதுக்கடி - குதம்பாய்
பின்னாசை ஏதுக்கடி.

என்று குதம்பைச் சித்தர் பாடுகின்றார். குதம்பை ஓர் அணிகலம்; மகளிர் அணியும் அணிகலம்; காதிற்கு அணியப்படுவது; இளமகளிர் அல்லது சிறுமியர்களுக்கு உரிய அணிகலம். இளமைப் பருவத்தினரிடம் எதனையும் அறியவேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். இதனால் இவர்களை முன்னிலைப் படுத்திக் குதம்பைச் சித்தரும் தனது பாடல்களைத் தந்துள்ளார்.

(தொடரும்...



தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருக்கழுக்குன்றம்

–வல்வையூர் அப்பாண்ணா–

"தோடுடையான்..... காதல் செய் கோயில் கழுக்குன்றே" என்றார் சம்பந்தர். "காள கண்டன் உறையும் தண் கழுக்குன்றே" என்று சுந்தரர் பாடினார். "கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே" என்கிறார் நாவுக்கரசர். இவ்வாறு மூவர் பாடல் பெற்றதுடன், மணிவாசகருக்கு இறைவன் குரு வடிவாய் காட்சி தந்தருளிய இடம் திருக்கழுக்குன்றம். இதனால் திருவாசகத்திலும் இத்தலம் இடம்பெற்றமையால், நால்வர் பாடலும் பெற்ற சிறப்புத் தலமாகத் திகழ்கிறது திருக்கழுக்குன்றம்.

மலைமீதுள்ள கோயிலை "மலைக்கோயில்" என்றழைக்கப்படுவதுபோல ஊருக்குள் உள்ள கோயிலை "தாழக்கோவில்" என்றழைக்கிறார்கள்.

செங்கல்பட்டிலிருந்து மாமல்லபுரம் சாலையில் 14 கி.மீ தூரத்தில் உள்ளது திருக்கழுக்குன்றம். சென்னையிலிருந்து கோயில் 70 கி.மீ தூரத்தில் உள்ளது. செங்கல்பட்டு-மாமல்லபுரம் - கல்பாக்கம் பேருந்து நிலையங்களிலிருந்து புறப்படும் பேருந்துகள் இத்தலத்தின் வழியாகவே செல்கின்றன.

வேதங்களே மலையாகி இருப்பதனால் "வேதகிரி" என்றும், வாழை மரங்கள் நிறைந்திருப்பதால் "கதலிவனம்" என்றும், கழுகுகள் வந்து உணவு பெற்றுச் செல்வதால் "பட்சி தீர்த்தம்" என்றும் மலைக்கோவிலுக்குப் பல பெயர்களுண்டு. மலைக்கோயில் ஏறக்குறைய 500அடி உயரமுடையது. மூன்று பெரிய மலையைக் குடைந்து கட்டப்பட்டுள்ள மலைக்கோயிலானது, பச்சைப் பசேலென எழில் கொஞ்சும் பசுமைக்கு மத்தியில் - வெண்மை நிறத்தில் - பளிச்செனத் தெரிகிறது. மலை ஏறிச் செல்ல சீரான படி வரிசைகளும், மலையைச் சுற்றி வலம்வர நல்ல பாதையுமுள்ளது.

மலைக்கோயிலின் மீதமர்ந்து சுயம்பு மூர்த்தியான "வேதகிரீஸ்வரர்" அருள்பாலிக்கிறார். வேதகிரீஸ்வரர் சதுரஆவுடையார் பீடத்துடன் லிங்கபாணம் சிறுத்து குறுகிக் காணப்படுகிறது. மலைக்கோயிலில் அன்னக்காவடி விநாயகர், சனிபகவான் சந்நிதிகள் தனித்தனியாகக் காணப்படுகின்றன. மலைக் கோயிலின் உட்புறத்தில் குடைவரைத் தெய்வங்களாக பிரம்மா, திருமால், தட்சணாமூர்த்தி, மார்க்கண்டேயர், நந்திகேஸ்வரர், சோமாஸ்கந்தர், சண்டிகேஸ்வரர் உள்ளனர்.

மலைக்கோவிலின் மதியவேளைப் பூசை நேரத்தில் இரண்டு கழுகுகள் தினமும் மலையை வட்டமிட்டு வந்து உணவருந்திச் செல்லும். இந்த அற்புத நிகழ்ச்சியினைக் காண்பதற்காகவே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் மலைக்கோவிலுக்குச் சென்று வந்தார்கள். 2000ஆம் ஆண்டின் பின்னர் கழுகுகள் வருவதில்லை என கோயிற் குருக்கள் கூறினார்.

திருக்கழுக்குன்றம் மிகப் பழமையான பெரிய கோயில். ஊருக்குள் நுழைய முன்னரே தாழக் கோயிலின் நெடிதுயர்ந்த கோபுரங்கள் நம்மை வரவேற்கின்றன. கோயிலின் முன்பாக

உள்ள வீதியிலே 5 திருத்தேர்கள் நிறுத்தப்பட்டுள்ளன. நான்கு கோபுரங்களும் நான்கு திசைகளையும் நோக்கியவாறு உள்ளன. இந்த கோபுரங்களில் சிற்பங்கள் எதுவுமில்லை. வடக்குக் கோபுரம் 9 அடுக்குகளுடன் உச்சியில் 11 கலசம் தாங்கி வானுயரக் காணப்படுகிறது. ஆனாலும் கிழக்குக் கோபுரமே பிரதான வாசலாகும்.

சந்நிதிக்கு எதிரே ஸ்தலத் தீர்த்தமான "சங்கு தீர்த்தம்" உள்ளது. பாதிப் படித்துறைகள் மட்டுமே செம்மையாக்கப்பட்டுள்ளதுடன், நீராழி மண்டபமும் - நீராடுவதற்கான படித்துறையும் காணப்படுகிறது.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இக் குளத்தில் "சங்கு" பிறந்து ஒதுங்குகிறது. இங்கு கிடைத்த சங்குகள் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. அனைவரும் அறியும் வண்ணம் இந்த விபரங்கள் கோவில் உட்பிரகாரத்தில் எழுத்தில் காணப்படுகிறது.

கழுக்குன்றத்தின் "புஷ்பகரமேளா"வும் "லட்சதீபப் பெருவிழா"வும் பிரசித்தமானவை. குருபகவான் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கன்னி ராசிக்குள் பிரவேசிக்கும் சுபவேளையில் "சங்கு தீர்த்த புஷ்கரமேளா" கொண்டாடப்படுகிறது. இந்த நல்ல வேளையில் நீராடுவதற்கு பல லெட்சம் பக்தர்கள் கழுக்குன்றத்தில் குவிவார்கள். மாலையில் கோவிலிலும், தீர்த்தங்களிலும், ஊரெங்கும் தீபமேற்றி "லெட்சதீபப் பெருவிழா"வாக வெகு விமரிசையாகக் கொண்டாடுவர். இந்த விபரம் கோயிற் குறிப்பிலிருந்து பெறப்பட்டது.

சங்கு தீர்த்தத்தின் மேற்குக் கரைப் படித்துறையில் மார்க்கண்டேயர் வழிபட்ட உருவிற் சிறிய சிவலிங்கம் உள்ளது. இந்த மூர்த்தத்தை "மார்க்கண்டேஸ்வரர்" எனும் திருநாமம் கொண்டு அழைக்கிறார்கள்.

தாழக்கோயிலின் கிழக்குக் கோபுரம் ஏழு நிலைகளுடன் உச்சியில் நவகலசங்கள் கொண்டு காணப்படுகிறது. இதுவே கோயிலின் பிரதான வாசலாகும். கோபுரத்தில் சிற்பங் களில்லை. விநாயகரும் சுப்பிரமணியரும் இரு புறமும் உள்ளனர். கருங்கல்லில் அமைந்துள்ள துவார பாலகர்கள் உருவங்கள் அழகுடையவை. கிழக்குக் கோபுர வாசல் வழியாக உள்ளே போனால் வலது பக்கம் கோயில் அலுவலகம் உள்ளது. இடது பக்கம் கலையழகு மிக்க 16கால் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் பக்கமாகத் திரும்பி வெளிப் பிரகாரத்தை வலம்வரும்போது விநாயகர் சந்நிதிக்கு வருகிறோம்.

வடக்கு வாசலருகே "நந்தி தீர்த்தம்" உள்ளது. தீர்த்தக் கரையில் நந்தி உள்ளது. அடுத்துள்ள மறுபுறம் சுப்பிரமணியரையும் வணங்கி ஐந்து நிலைகளையுடைய உட்கோபுரத்தினுள் நுழைகிறோம். இக்கோபுரம் மட்டும் நிறைந்த சிற்பங்களுடன் வண்ணக் கோபுரமாக உள்ளது. வாசலின் இடது பக்கம் "அநுக்கிரக நந்திகேஸ்வரர்" தனது தேவியுடன் உள்ளார். உள் நுழைந்து வலமாக வரும்போது சோமாஸ்கந்தர் சந்நிதிக்கு வருகிறோம்.

இந்தப் பிரகாரத்தில் "பீடம் மட்டுமே கொண்ட" ஆத்மநாதர் சந்நிதி, எதிரில் மாணிக்க வாசகர் சந்நிதி, ஏகாம்பரநாதர், வண்டுவன விநாயகர், ஜம்புகேஸ்வரர், அருணாசலேஸ்வரர் முதலான சந்நிதிகள் தனித்தனியாக உள்ளன. ஆறுமுகப் பெருமான் சந்நிதி அழகாயுள்ளது. சந்நிதிச் சுவரில் கந்தர் அநுபூதிப் பாடல்கள் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன.

பக்கத்தில் அழகான முன் மண்டபத்துடன் உள்ள சந்நிதியில் அம்பிகை **"திரிபுரசுந்தரி"**, நான்கு திருக்கரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார். முகத்தில் புன்னகை தவழ சாந்த சொருபியாக உள்ள அம்பாளின் திருமார்பில் தவழும் "ஸ்ரீ சக்கரம்" ஜொலிக்கிறது.

அம்பாளின் வடகிழக்கு மூலையில் பள்ளியறையும், அம்பாளின் உற்சவ மூர்த்தமும் காணப் படுகிறது. அம்பாளின் உட்பிரகாரத்தை வலம் வரலாம். அம்பாளுக்கு (1) ஆடிப்பூரம் (2) பங்குனி உத்தரம் (3) நவராத்திரியில் வரும் நவமி திதி ஆகிய மூன்று நாட்களில் மட்டுமே முழு அபிஷேகம் நடைபெறுகிறது. நாள்தோறும் பாத அபிஷேகம் மட்டுமே நடைபெறும். அம்பாளின் கருவறையை வலம் வரும்போது, சலவைக் கல்லில் பொறித்து வைக்கப்பட்டுள்ள "அபிராமி அந்தாதி" பாடல்களை வாசிக்க மனதுக்கு நிம்மதி பிறக்கிறது.

அம்பாளுக்கு எதிரில் "பிரத்யட்ச வேதகிரீஸ்வரர்" சந்நிதி உள்ளது. அடுத்துள்ள நடராஜர் சபையில் உள்ள மூர்த்தி சிறியதாயினும் வசீகரமான முழுப் பொலிவுடன் உள்ளது. வலப்பக்கம் உள்ள வீரபத்திரரையும், துவார பாலகர்களையும் வணங்கி உட்சென்றால், உட்சுற்றில் சூரியன், விநாயகர், அறுபத்துமூவர் மூலத் திருமேனிகள் உள்ளன. ஒரே அளவான 7 சிவலிங்கங்களும், அறுபத்து மூவரின் உற்சவத் திருமேனிகளும் காணப்படுகிறது. வைரவர் சந்நிதியில் வாகனமின்றி வைரவர் காணப்படுவது வித்தியாசமாக உள்ளது.

கருவறையில் மூலவர் "பக்வத்சலேஸ்வரர்" அழகான அலங்காரத்தோடு அனைவருக்கும் அருள்பாலிக்கின்றார். மூலவர் சந்நிதியின் வலப்பக்கச் சுவரை ஒட்டியபடி உள்ள அகோர வீரபத்திரர் எட்டுக் கரங்களில் பற்பல ஆயுதங்களுடனும் கபால மாலையுடனும் காணப்படுகின்ற போதிலும் முகத்தில் அகோரம் எதுவுமில்லை. சாந்தம் தவழுகிறது. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர்.

சித்திரைப் பெருவிழா தாழக்கோயிலில் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

"தோடுடையான் ஒரு காதில் தூயகுழை தாழ
ஏடுடையான் தலைகலனாக இரந்துண்ணும்
நாடுடையான் நள்ளிருளேம நடமாடும்
காடுடையான் காதல் செய்கோயில் **கழுக்குன்றே**"

-சம்பந்தர்-

# ஞானச்சுடர் சந்தாதாரரின் கவனத்திற்கு

வணக்கம்! தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். ஞானச்சுடர் மலரின் தயாரிப்புச் செலவினங்களும், அஞ்சல் கட்டண உயர்வும் பல மடங்கு உயர்ந்து விட்ட இவ்வேளையிலும், மாதந்தவறாது ஞானச்சுடரினை வெளிக்கொணர்வதில் நாம் மிக்க ஊக்கமாகவே உள்ளோம். இத்தகைய சூழ்நிலையில் நாம் உங்களிடம் எதிர் பார்ப்பது ஒன்றுதான்.

2016ஆம் ஆண்டுக்கான நுழை வாசலிலே நாம் நிற்கிறோம். உங்களுடைய வருடாந்த சந்தாப் பணத்தினைச் செலுத்தி தங்கள் சந்தாப் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும், புதிய ஆண்டில் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களது சரியான முகவரியைத் தபால் மூலமோ- தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை.

# தைமாத வாராந்த நிகழ்வுகள்

01.01.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "மங்கள இசை"

வழங்குபவர்கள்:- மறவனூர் T.M. வாசகர் குழுவினர்

---

08.01.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "சைவநெறி"

வழங்குபவர் :- திரு பூ. சோதிநாதன் அவர்கள்

---

15.01.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

22.01.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

29.01.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் தைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ஆறு திருமுருகன் அவர்கள்

[தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்]

மதிப்பீட்டுரை :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

[அதிபர்- புட்டளை மகா வித்தியாலயம்]

217 ஆவது மலர்

பதிவு இல. QD/112/NEWS/2015

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

